# இராமலிங்க அடிகளார் பாடல்களில் சமயமும் சமுதாயமும்

**பொ. தீபா**
03 MP 14

எம்ஃபில் (தமிழ்) பட்டத்திற்குரிய பகுதித்
தேவைக்காக அளிக்கப்படும் ஆய்வேடு.

*அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்*
கோயம்புத்தூர் – 641 043

அக்டோபர் - 2004

# சான்றிதழ்

**முனைவர். திருமதி. இரா. மீனலோசனி**
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்,
அவினாசிலிங்கம் நிகர்நிலைப்பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 043.

**''இராமலிங்க அடிகளார் பாடல்களில் சமயமும் சமுதாயமும்''** என்னும் தலைப்பில் எம்ஃபில் பட்டத்திற்காக செல்வி. பொ.தீபா அவர்கள் செய்துள்ள இந்த ஆய்வு அவினாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவரால் தன்னியலாகச் செய்யப்பட்டது. இவ்வாய்வின்மீது ஆய்வாளருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை என்றும் நான் அறிந்தவரையில் இத்தலைப்பில் வேறு எவரும் ஆய்வு செய்யவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

இரா. மீனலோசனி

ஆய்வு நெறியாளர் கையொப்பம்

29. 10. 04

துறைத்தலைவர் கையொப்பம்

இடம் : கோவை

நாள் : 29.10.2004

# ஆய்வாளர் உறுதிமொழி

**செல்வி. பொ. தீபா**
ஆய்வாளர் - தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் நிகர்நிலைப்பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 043.

**''இராமலிங்க அடிகளார் பாடல்களில் சமயமும் சமுதாயமும்''** என்னும் தலைப்பில் எம்ஃபில் பட்டத்திற்காக செய்யப்பட்டுள்ள இந்த ஆய்வு என் சொந்த முயற்சியில் உருவானதேயாகும். இதற்கு முன் எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் இந்த ஆய்வு அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

பொ. தீபா
ஆய்வாளர் கையொப்பம்

ஆய்வு நெறியாளர் கையொப்பம்

29.10.04
தமிழ்த்துறைத்தலைவர்
அவினாசிலிங்கம் நிகர்நிலைப்பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 043.

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | நன்றியுரை | | பக்க எண் |
| | சுருக்கக்குறியீட்டு விளக்கம் | | |
| | முன்னுரை | - | 1 - 2 |
| இயல் -1 | சமயநிலை | - | 3 - 36 |
| இயல் -2 | ஆன்மீக நிலை | - | 37-50 |
| இயல் -3 | சமுதாயம் | - | 51-70 |
| இயல் -4 | மானிடநேயம் | - | 71-95 |
| இயல் -5 | அடிகளார் கால மக்கள் வாழ்க்கை நிலை | - | 96 - 109 |
| | முடிவுரை | - | 110 - 111 |
| | துணைநூற்பட்டியல் | - | 112 - 116 |

# நன்றியுரை


நான் ஆய்வு மேற்கொள்வதற்கு நல்வாய்ப்பினை அளித்த அவினாசிலிங்கம் நிகர்நிலைப்பல்கலைக்கழகத்தின் வேந்தர் முனைவர். **கே. குழந்தைவேல்,** எம்.ஏ.,எம்.ஏ, பிஎச்.டி., அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் **திருமதி. சரோஜா பிரபாகரன்** எம்.ஏ.டிப்.எட். பிஎச்.டி., அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர்
அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கலைப்புல முதன்மையர் முனைவர் **திரு. து. லலிதா** எம்.ஏ., டிப்.எட். எம்.ஃபில், பிஎச்.டி., அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது தமிழ்த்துறைத் தலைவர் முனைவர். **திருமதி. து. லலிதா** எம்.ஏ., டிப்.எட். எம்.ஃபில், அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என் ஆய்வுப் பணிக்கு நெறியாளராக இருந்து ஊக்குவித்து பல்லாற்றானும் உதவி செய்து வழிகாட்டிய இணைப்பேராசிரியர் முனைவர் **திருமதி.இரா.மீனலோசனி,** எம்.ஏ.டிப்.எட்., பிஎச்.டி., அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள் பல. ஆய்வுக்குத் தேவையான நூல்களை அவ்வப்போது தந்து உதவிய அவினாசிலிங்கம் பல்கலைக்கழக நூலகத்தாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உரிய காலத்தில் கணிப்பொறி மூலம் தட்டச்சு செய்து கொடுத்த **டி.பிராங்கிளின்** அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# சுருக்கக்குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| பக். | - | பக்கம் |
| பா. | - | பாடல் |
| மேலது. | - | மேற்கூறப்பட்டது |
| திரு. | - | திருக்குறள் |
| திருவ | - | திருவருட்பா |
| கலி. | - | கலித்தொகை |
| குறு. | - | குறுந்தொகை |
| பரி | - | பரிபாடல் |
| திருமுரு. | - | திருமுருகாற்றுப்படை |
| தொல். | - | தொல்காப்பியம் |
| சிலம்பு. | - | சிலப்பதிகாரம் |
| புற. | - | புறநானூறு |
| மணி. | - | மணிமேகலை |
| திரும. | - | திருமந்திரம் |
| நற். | - | நற்றிணை |
| தி.பி. | - | திவ்வியப்பிரபந்தம் |
| தே. | - | தேவாரம் |
| பெரி. | - | பெரியபுராணம் |
| பக. | - | பகவத்கீதை |
| த.இ. | - | தமிழ் இலக்கிய வரலாறு |
| வ.வ. | - | வடலூர் வரலாறு |
| சற். | - | சற்குருமணிமாலை |
| பா.க. | - | பாரதியார் கவிதைகள் |
| ந.தா. | - | நமது தாய்நாடு |
| த.க. | - | தமிழ்க்கலை |

# முன்னுரை

# முன்னுரை

சைவ சமயத்தின் ஒரு பெருஞ்சுடராகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமலிங்க அடிகள் தோன்றினார். சீவகாருண்யத்தையும் சன்மார்க்க நெறியையும் தன் இருகண்களாகப் போற்றினார். அந்த ஞானக்கண்களால் உலக மக்களுக்கு அறிவொளி ஊட்டினார். அறியாமையில் ஆழ்ந்து கிடந்த மக்களைத் தட்டியெழுப்பி ஆன்மீகக் கருத்துக்களைப் புகட்டினார். ஓர் சிறந்த ஆன்மீகவாதியாகத் திகழ்ந்தார். உலக மக்களுக்கு ஆன்மீகக் கண்களைத் திறந்துவிட்ட பின்னர் வடலூரில் சத்திய ஞான சபையில் புகுந்தார். அவருடைய கருணையாகிய கொடைத் தன்மையால் வடலூர் வள்ளலார் என்று அழைக்கப்பட்டார். அவர் சமுதாயத்தில் செய்த சமயத் தொண்டுகளை ஆய்வதன் நோக்கமாக ''இராமலிங்க அடிகளார் பாடல்களில் சமயமும் சமுதாயமும் '' என்ற தலைப்பு ஆய்வுக்கென எடுக்கப்பட்டுள்ளது.

## ஆய்வு நோக்கம்

இராமலிங்க அடிகளார் பாடல்களில் சமயமும் சமுதாயமும் என்பதை ஆய்வதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். இவ்வாய்வு சமயநிலை, ஆன்மீக வாழ்க்கை நிலை, சமுதாயம், மானிட நேயம், அடிகளார் கால மக்கள் வாழ்க்கை நிலை பற்றி ஆய்ந்து கூறுதல் ஆகியவற்றைப் பொருளாகக் கொண்டுள்ளது.

## ஆய்வு எல்லை

இராமலிங்க அடிகளாரின் படைப்புக்களை ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதால் அவருடைய அருட்பாப் பாடல்கள் மட்டும் ஆய்வின் எல்லையாக அமைகின்றன.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வில் விளக்கமுறை என்ற அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பலவிடங்களில் விளக்கவியல் ஆய்வு அணுகுமுறையும் பின்பற்றப் பட்டுள்ளது.

## ஆய்வு மூலங்கள்

இராமலிங்க அடிகளாரின் பாடலகள் அனைத்தும் ஆய்வின் முதன்மை ஆதாரமாகவும், இராமலிங்க சுவாமிகளின் படைப்புகள் தொடர்பான திறனாய்வு நூல்கள், ஆன்மீக நூல்கள் ஆகியவை துணைமை ஆதாரமாக அமைந்துள்ளன.

## ஆய்வேட்டின் அமைப்பு

''சமயநிலை'' என்ற முதல் இயல் சமய விளக்கம், சைவ சமய தெய்வங்கள், வள்ளலாரின் பக்திநிலை ஆகியவற்றை ஆய்ந்து அறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இரண்டாவது இயல் ''ஆன்மீக வாழ்க்கை நிலை '' என்பதாகும். இவ்வியலில் இராமலிங்க அடிகளாரின் பிறப்பு, அவர் செய்த அற்புத நிகழ்ச்சிகள், தமிழ்த்தொண்டு, ஞான வாழ்க்கை, இல்லற வாழ்க்கை, ஆன்மீகச் சாதனை, உலகியல் சாதனை ஆகியன பற்றி ஆராயப்பட்டுள்ளன.

''சமுதாயம்'' என்ற மூன்றாம் இயலில் சமுதாயம் ஒரு பொது விளக்கம், அச்சமுதாயத்தில் காணப்படும் வறுமை, பசி, சாதிக்கொடுமை ஆகியவற்றை விளக்கிக் காட்டி அவற்றைப் பற்றிய அடிகளாரின் சிந்தனைகளைக் குறிப்பிட்டுக்காட்டி ஆய்வதாக அமைந்துள்ளது.

நான்காவதாக அமைவது ''மானிட நேயம்'' என்னும் இயலாகும். இவ்வியலில் மக்கட் பண்புகளையும் மானிட நேயங்களையும், மானிடர்கள் உய்ய வழிகாட்டும் அன்புநெறிகளையும் அவற்றின் தன்மைகளையும் பற்றி ஆராயப்பட்டுள்ளன.

இறுதி இயலாகிய ''அடிகளார் கால மக்கள் வாழ்க்கை நிலை என்னும் இயலில், அவர் வாழ்ந்த காலகட்டத்தில் வாழ்ந்த மக்களின் அறியாமை நிலையும், அடிமை நிலையும் ஆராயப்பட்டுள்ளன. ''

*இயல் ஒன்று*

# சமயநிலை

*இயல் ஒன்று*

# சமயநிலை

## முன்னுரை

இயற்கையின் சீற்றங்களை கண்ட ஆதிமனிதன் அச்சத்தின் காரணமாக அவற்றையே வழிபடத் தொடங்கினான். இந்நிலையே நாளடைவில் ஐம்பூதங்களாகிய நீர், நிலம், நெருப்பு, காற்று, வானம் என்பவை தெய்வ நிலையில் வைத்து வழிபடும் முறையாக மாறிற்று. பிறகு பல சமயநிலைகள் தோன்றலாயின. அவைகளில் சைவ சமயத்தில் உள்ள தெய்வத்தினையும் வள்ளலாரின் பக்தி நிலையினையும் அறியப்படுகிறது. இதனைப்பற்றி ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

## சமயம் - விளக்கம்

சமயம் என்பது வாழ்க்கை நெறியாகும். மக்களை நன்னெறிக்குக் கொண்டு செல்லும் ஒரு கருவியாகச் சமயம் பங்காற்றுகிறது. சமயம் என்பதற்குப் பல அகராதிகள் விளக்கம் தருகின்றன.

சமயம் எல்லை, காலம், தருணம், வேளை, மதம், உடன்படிக்கை, தீட்சைமரபு என்று கழகத் தமிழ் அகராதி பொருள் தருகிறது. [1]

சமயம், ''மனித குலம் அறிவுத்திறன் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயமும் உடன் வளர்ந்து வந்ததாகத் தோன்றுகிறது. ஆயினும் சில பழங்குடி மக்களிடம் சமய உணர்வு காணவில்லை என்பதாக முதலில் கருதப்பட்டது. ஆனால் மனித இனத்தைப் பற்றி ஆராய்பவர்கள் இந்தக் கருத்தை இப்போது ஏற்றுக் கொள்வதில்லை. சமய உணர்வு என்பது பல்வேறு வகைகளில் உலகெங்கும் எக்காலத்தும் காணப்படுகின்றது என்று கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகின்றது '' [2] என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

"கண்ணுக்குத் தென்படாது நம்மைக் கட்டுப்படுத்தி நமக்கு அப்பாற்பட்ட சக்தியின் மேல் உள்ள நம்பிக்கையைத் தருவதுவே சமயம் ஆகும்" [3] என சேம்பர் டிக்ஸ்னெரியும்,

"மனித சக்திக்கு அப்பாற்பட்டு மனிதனைக் கட்டுப்படுத்தும் ஒருசக்தி இருப்பதாக நம்பி வழிபடுவதே சமயம் ஆகும் " [4] என ஆக்ஸ்போர்டு மினி டிக்ஸ்னெரியும்,

"நம்பிக்கையும் வழிபாடும் இணைந்த அமைப்பே சமயம் ஆகும் " [5] என்று கிரேட்டு லிப்கோ டிக்ஸ்னெரியும் விளக்குகின்றன.

இவற்றால் சமயம் என்பது ஓர் உடன்படிக்கையும் மக்களைக் கட்டுப்படுத்தும் சக்தியாகவும் இருந்தமை தெளிவாகின்றது. சமயம் பற்றி அகராதிகள் மட்டுமின்றிப் பற்பல அறிஞர்களும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

"சமயம் என்பது மிக விரிந்த பொருளுடையது. ஒருவன் நம்பிக்கையை மட்டும் சமயம் என்று கருதுவதில்லை. நம்பிக்கை காரணமாக வளர்ந்து வந்த அமைப்புகள் அவற்றின் நடைமுறை விதிகள் அடிப்படையான தத்துவங்கள் அத்தத்துவங்கள் பற்றி எழுந்த விளக்க நூல்கள் அவற்றின் அடிப்படையாக அமைந்த சில நெறிமுறைகள் அனைத்தையும் கூற வேண்டும் " [6] என்று அருணாசலம் குறிப்பிடுகின்றார்.

"மனிதன் கட்புலனாகி இயற்கையின் அப்பாற்பட்டவர் கடவுள் கட்புலனாகாது இயற்கைக்கும் புறம்பானது. இவ்விரண்டிற்கும் இடையே ஓர் உறவை உருவாக்கும் முயற்சியே சமயம் என்பது " [7] என ந. சுப்பிரமணியன் கூறுகின்றார்.

"மனிதனை இறைவனோடு ஒன்று சேர்க்க எழுந்தது சமயம்" [8] என்று கா. திரவியம் குறிப்பிடுகின்றார். "அளவற்ற பலமே சமயம் " [9] என தி.க. அவினாசிலிங்கம் கூறுகின்றார்.

இந்த உண்மைகளைத் தொல்காப்பியர் புறநிலை வாழ்த்து என்ற துறையுள் அடக்கிக் காட்டுகின்றார்.

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிநீர் செல்வமோடு வழிவழி சிறந்தது
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்து '' [10] என்கின்றார்.

இதனால் சமயம் என்பது மக்களை நன்னெறிப்படுத்தி வாழ்வதற்குக் கொண்டு செல்லும் ஒரு கருவியாகிறது என்பதும், கடவுள் உணர்வு பெறுதல் என்பதும் தெரியவருகிறது.

''மதம் என்பதைச் சமயம் எனவும் கூறுவர். சமயம் என்பதற்கு 'சமை' என்பது பகுதி உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருள்களைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பரிபக்குவப்படுத்துவது என்பது அதன் பொருளாகும் ''.[11] மேனாட்டு மொழிகளில் சமயம் என்பதற்கு நேராக வழங்கும் 'ரிலிஜியன் ' என்ற சொல் இருபொருளில் வழங்குகிறது.

''குறிசொல்வது இறைவனோடு ஒன்றுபடுத்துவது அல்லது மீண்டும் பிணைப்பது என்பதாகும்'' [12] எனக் கலைக்களஞ்சியம் பொருள் கூறுகிறது.

''மதம் என்பதற்கு அறிவு பெற்றதைப் பெரிதாக மதிப்பது போன்ற அர்த்தங்களை அகராதிகள் தருகின்றன ''. [13] இம்மதம் மனித வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கின்ற ஒரு பாரம்பரியக் கோட்பாடாக அமைந்துள்ளது.

''சமூக வாழ்க்கையை ஒன்றுபடுத்தும் திறன்மிக்கது சமயம் '' [14] என்ற பார்கின் என்ற சமூகவியல் அறிஞர் கருதுகிறார். தனிமனிதனுடைய வாழ்க்கை ஒருமைப்பாட்டிற்கு சமயம் உதவும் என்பது வில்லியம் ஜேம்ஸ் ஆலபோர்ட் ஃபாரம், யுறு போன்ற சமூக உளவியல் அறிஞர் தம் கருத்தாகும்.

''ஏமாற்றம் தோல்வி கவலை நிறைவேறா எண்ணங்கள் சிறப்பு அழிவு ஆகியவற்றைத் தாங்கும் சுமைதாங்கியே சமயம் ஆகும் '' [15] என்ற அறிஞர்களின் கருத்துக்கள் இங்கு சமுதாயத்திற்குச் சமயத்தின் பங்கை எடுத்துரைக்கின்றன.

கீழ்த்தர உணர்வுகளிலிருந்து மனிதனை மேல்நோக்கிக் கொண்டு வருவதற்கு மதம் என்ற ஒரு அமைப்புத் தேவைப்பட்டது. மதம் வாழ்விற்குத் தேவையான ஒன்றாக இருப்பதை மேற்கூறிய கருத்துக்களால் உணரலாம்.

''தற்காலத்தில் மதத்தின் சீரழிவு ஆரோக்கியத்திற்கும் மேலைச் சமூகத்தின் நிலைபேற்றுத் தன்மைக்கும் ஊறுவிளைவிப்பதாயிருக்கிறது '' [16] என்கிறார் அறிஞர் டாயின்பீ.

''மதத்தின் சீரழிவு சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது. ஆக மதத்தின் செம்மைப்பாடுகள் சமுதாய நலவாழ்வில் பெரும்பங்கு வகிப்பதை அறியலாம். ''

## தோற்றம்

சமயத்தைப் பல்வேறு நிலையில் விளக்கங்கண்ட பின் அதன் தோற்றத்தை அறிதல் இன்றியமையாததாக இருக்கிறது. சமயம் எப்போது தோன்றியது என்பதற்கு, ''உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவாகக் கடவுள் உணர்ச்சி என்பது இருந்து வந்திருக்கின்றது. மனிதனுக்குரிய உணர்ச்சிக் கூறுகள் பலவற்றுள் கடவுள் பற்றிய உணர்ச்சிக்கூறுகள் இயல்பாகவே அமைந்து கிடக்கின்றது. நாகரீகம் எய்தப் பெறாத காட்டு மக்கள் முதல் நாகரீகத்துறையில் சிறந்த மக்கள் ஈறாக அனைவருக்குமே அவரவர்களின் நிலைக்கும் பண்பாட்டிற்கும் ஏற்பக்கடவுள் உணர்ச்சி அமைந்து கிடக்கின்றது. மனிதகுலம் தோன்றிய கால முதல் இயல்பாக எல்லா நாடுகளிலும், எல்லா இனத்தவர்களிடையேயும் கடவுள் உணர்ச்சியும் வழிபாடும் விளங்கி வருகின்றன '' [17] என்று வச்சிரவேல் விளக்கம் தருகின்றார்.

''மனிதன் என்று தோன்றினானோ சமயமும் அன்றே தோன்றிவிட்டது என்றுதான் கூற வேண்டும் '' [18] என்பார் ப. அருணாசலம். இதனால் மனிதன் தோன்றிய அன்றே சமயமும் தோன்றிவிட்டது என்பதை அறியமுடிகின்றது. இவ்வாறு சமயத் தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்து வந்தபிறகு சமய நிலைகளில் வள்ளலாரின் பக்திநிலை வளர்ச்சி அடைந்து வந்தன.

**சிவன் - சொல் விளக்கம்**

சிவன் என்னும் சொல் இறைவனைக் குறிப்பிடுவது வேதவழக்கே. இருக்கு, கொ், சாமம் என்னும் மும்மறையுள் நடுகின்ற ''எசுர்'' வேதத்தின் நடுவே விளங்கும் திருவுருத்திரத்தின் கண் 'நமச்சிவாயச ' 'சிவதராய ' என 'நமச்சிவாய' என்றும் ஐந்தெழுத்து அருமறையும் 'சிவ' என்னும் ஈரெழுத்துமொழியும் '' [19] காணப்படுகின்றன என அறிஞர்கள் கூறுகின்றனர்.

வேதங்களில் சிவன் பெரிதும் உருத்திரனாகவே கூறப்படுகின்றான். இவ்வுருத்திரனும் சிவனும் ஒன்றே என்னும் துன்பத்தைப் போக்குபவன் என்ற பொருளில் (ருத் - துன்பம் - த்ரவயதி = ஒட்டுகிறான் = ருத்திரன் ) உருத்திரன் என்றும், இன்ப – உருவினன் என்றபொருளில் அறிஞர்கள் கூறுகின்றனர். ''வேதங்களிலிருந்து பெற்ற சிந்தனையே உருத்திரசிவன் என்பது வேதங்களில் உருத்திரன் பயின்ற வழக்காகவும், சிவன் அருகிய வழக்காகவுமிருப்பினும் இவ்விருவரும் ஒன்று என்னும் கருத்தினையே உருத்திர சிவன் '' [20] என்னும் வழக்கு நமக்கு உணர்த்துவதாக பக்தி இலக்கியத்தில் காணப்படுகின்றது.

''இவ்வுருத்திர சிவன் வேத நூல்களில் அரன், ஈசன், கிரீசன், சங்கரன், சரவன், தாணு, பகபதி, பவன், மகாதேவன் '' [21] என்னும் பெயர்களால் சங்க இலக்கியம் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்களிலேயன்றி வேத நூற்களிலும் சிவன் என்ற சொல் காணப்படுவதாக பக்தி இலக்கியம் கூறுகின்றது.

சிந்துவெளியில் காணப்பட்ட சிவ வழிபாடு வேத காலத்திற்கு முற்பட்ட இந்தியாவில் பலவிடங்களிலும் பரவியிருந்தது என்று கூறப்படுகிறது.

## சிவ உருவ விளக்கமும் செயல்களும்

''முக்கணான்'' [22] ''நீலகண்டமுடையவன் '' [23] ''திங்கட்கண்ணியன் ''[24] ''உமையொரு கூறன்'' [25] ''அவன் மலைகொன்றை'' [26] ''அவன்படை கணிச்சி '' [27] ''அவள்கொடி ஒற்றுக்கொடி''[28] ''அவன் ஊர்தி ஏற்றூர்தி '' [29] ''அவன் நாள் திருவாதிரை'' [30] ''கல்லால் மரத்தின்கீழ் அறமுறைத்தவன் ''[31] ''அவன் வீரச்செயல் முப்புரம் எரித்தமை '' [32] ''கங்கை சடையில் சூடியவன் ''[33] ''ஆழம் ஏந்தியவன் '' [34] ''கொட்டிச் சேதம் கொடி கொட்டி பாண்டரங்கம் போன்ற கூத்துக்களை ஆடியமை '' [35] . ''புலித்தோல் உடை அணிந்து கரியின் உரிவைப் போர்த்திக் கையில் பாறை வைத்து ஒரு காதில் கழலும், ஒரு காலில் சிலம்பு, ஒரு பக்கம் பொன்னிறம், ஒருபக்கம் நீலநிறம், வலக்கை - வாள் கிடக்கை தாமரை பெற்றவன் போன்றவைகள் அனைத்தும் சங்க கால இலக்கியப் பாடல்களிலும் காப்பியங்களிலும் காணக்கிடைக்கின்றன.''

## ஆலமரச் செல்வன் (தட்சணாமூர்த்தி)

''சிவ வழிபாட்டளவிலும் வேதங்கள் இதிகாசங்களிலும் காணமுடியாத சில பகுதிகள் உள்ளன சிவபிரான் தட்சிணாமூர்த்தியாக இருந்து அறமுறைத்த செய்தி நம் தமிழ் நூல்களில் காணப்படும் ஒன்று. சங்க இலக்கியங்களில் இச்செய்தி பேசப்படுகிறது'' [36] என்று பக்தி இலக்கியம் கூறுகின்றது.

''தட்சிணாமூர்த்தி கோலத்தை விளக்கும் அறிஞர்கள் இது தந்திர அடிப்படையில் அமைந்த கோலம் '' [37] என்று ஆங்கில அறிஞர் கூறுவதாக பக்தி இலக்கியத்தில் காணப்படுகிறது. கல்லால் மரத்தின்கீழ் ஜனகர் முதலிய நால்வர்க்கு அறமுறைத்ததாகக் கூறப்படும் வழக்கு வருமிடங்களில் எல்லாம் ஒன்று போல் இல்லை. சங்க நாளில் ''தட்சிணாமூர்த்தி'' எனற பெயர் இல்லை. ஆலமரச் செல்வன் என்ற பெயர் உள்ளது.

ஆலமரத்தின்கீழ் அமர்ந்த செல்வன் என்றே பொருள் கூறுகின்றோம். ஆயின் இத்தொடர் சிவனைக் குறித்தது என்பதனை விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆலமரச் செல்வன் தட்சிணாமூர்த்தி என்ற கருத்து சிலப்பதிகாரத்தில் அறியப்படுகிறது.

''ஆலமர செல்வன் பெயர் தச்கிணன் '' [38] என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

உலகில் மக்கள் தோன்றிய அன்றே தோன்றிய சமயம் அவர்களின் உணர்ச்சிகள், கொள்கைகளுக்கும் அனுபவத்திற்கும் ஏற்றவாறு பல பிரிவுகளாகப் பிரிந்தது. இந்திய நாட்டில் தோன்றிய சமயத்தில் சைவசமயம் ஒன்று. இச்சமயத்தில் வள்ளலார் மிகுந்த பற்றுக் கொண்டு பக்தியை வளர்ச்சி அடையச் செய்தார். இச்சைவ சமயத்தைப் பற்றிய விளக்கம் இங்கு இடம் பெறுகின்றது. இச்சமயம் சிவனின் சிந்தாந்தத்தையும் சிவ தத்துவங்களையும் எடுத்துக்கூறுகின்றது.

## சைவம்

தென்னிந்தியாவில் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழம்பெரும் சமயம் சைவம் ஆகும். ஆசிரியர் தமிழகத்திற்கு வந்தபோது இச்சமயம் தமிழ் மக்கள் நெஞ்சத்தில் நிலைத்து விளங்குகிறது. சைவ சமயம் பழமையான சமயம் என்பதற்குச் சிந்துசமவெளி அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் சான்றாகும்.

''சிந்துவெளிச் சிதைவுகளில் இலிங்க உருவங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி மக்கள் இலிங்க வழிபாடு உடையவர்கள் என இதனால் விளங்குகின்றது '' [39] என்று கே.கே.பிள்ளை கூறுகின்றார். இதனால் பழம்பெரும் சமயம் சைவம் என்பது புலனாகின்றது.

சிவன் என்னும் பெயர் சங்க காலத்தில் வழக்கில் இல்லை. முக்கட் செல்வன், மணிமிடற்றோன் முதலிய பெயர்களால் சிவன் அழைக்கப்படுகின்றான்.

''பால்புரை பிறைனுதல் பொலிந்த சென்னி

நீலமணி மிடற்றொருவன் போல '' [40]

இப்பாடலில் சிவபெருமான் வழிபாடு சங்க காலத்திலேயே இருந்திருப்பதாக புறநானூறு பாடல் கூறுகின்றது. மதுரைக்காஞ்சி பாடிய மாங்குடிமருதனார் மதுரை நகரில் மாலைக்காலம் செய்யப்படும் வழிபாடு பற்றிக் கூறும்பொழுது சிவபெருமானே யாவற்றையும் படைத்தவராகவும் தேவர்கட்குத் தலைவராகவும் கூறுகின்றார்.

''நீரும் நிலனும் தீயும் வளியும்

மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய

மழுவாள் நெடியோன் தலைவனாக '' [41]

என்று மதுரைக்காஞ்சிப் பாடல் கூறுகின்றது.

இப்பாடலில் ஐம்பூதங்களிலும் நிறைந்திருப்பவராக சிவபெருமானைக் கருதுகிறார்கள் என்பது தெளிவாகின்றது. சங்க காலத்தை அடுத்த பல்லவர் காலத்தில் சைவ சமயக்குரவர் நால்வரும், பன்னிரு ஆழ்வார்களும் தோன்றிச் சைவ சமய உணர்வு ஊட்டும் பக்திப் பாடல்களைப் பாடினார்கள். இதனால் சைவ சமயம் எழுச்சி ஏற்பட்டது. மண்ணையும் மக்களையும் பாடுவதுபோல் இறைவனையும் இறைவன் அடியார்களையும் பாடும் இலக்கிய மரபு எழுந்தது. பின்னர் சோழர் காலத்தில் சைவ சமயம் உச்சநிலையை அடைந்தது. அதனால் நாயன்மார்களின் வரலாறு பெரியபுராணமாகப் படைக்கப்பட்டது. இதனால் சைவ சமயத்தின் பெருமையை உணர்த்தவும் உணரவும் முடிந்தது.

## சித்தாந்தம்

தமிழ்நாட்டில் விளங்கும் சைவ சமயம் சித்தாந்தம் என்னும் பெயரால் உணரப்பெறுகிறது. இச்சொற்றொடர் சைவ சமயத்தின் முடிந்த நிலை அல்லது முடிந்த முடிவு என்று சொல்வழிநின்ற பொருளுடையது. சைவ சமயத்தின் உட்பிரிவாகும்

சமயங்களினின்றும் சைவமல்லாத சமயங்களினின்றும் வேறுபடுத்தி அறிவிக்க இது உதவுகின்றது. சித்தாந்தம் அல்லாத கொள்கைகளை உடைய சமயங்களை நான்கு வகையாகத் தொகுத்துள்ளனர். அவை புறப்புறம், அகப்புறம், அகம், புறம் என்பனவாகும்.

அவற்றுள் புறப்புறமாவது உலகாயுதம். சமணம் பௌத்தம் என்பவை சித்தாந்தத்தோடு மிகுதியும் முரண்பட்ட புறப்புறச் சமயங்கள். அவை வேதத்திடத்தும் கடவுளிடத்தும் நம்பிக்கையில்லாதன. சித்தாந்தத்திற்குப் புறம்பாயுள்ள நியாயம், திருக்கம், மீமாச்சை, ஏகான்மவாதம், சாங்கியம், பஞ்சராத்திரம் என்பன புறச்சமயங்கள்.

இவை வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளாதன. ''அகச்சமயம் என்பது பலவகையான சைவ சமயமாகும். அவற்றினைப் பாஷாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமயவாத சைவம், சிவசங்கிராந்த வாதசைவம் என்று மொழிவர். இவை சித்தாந்தத்துட் குறிக்கப்படும் எல்லாப் பொருளையும் ஏற்றுக் கொள்வன '' [42] என்று சித்தாந்தத்தின் விளக்கவுரையைக் கீழைமேலை நாடுகளின் மெய்ப்பொருள் இயல் வரலாறு தருகிறது. இதனால் சித்தாந்தத்தின் பொருளையும் பிரிவையும் அறிய முடிகின்றது.

## முதன்மைத் தத்துவங்கள்

சைவ சித்தாந்தத்தின் முதன்மையான பொருள்கள் பதி (இறைவன்) பசு (உயிர்) பாசம் (கட்டு) என்பன. இச்சமயம் முறைப்படி இறைவன் உலகம் ஆகிய மூன்றும் என்றும் உள்ள பொருட்கள் சித்தாந்த நெறிக்கு சிவக்கவி சுப்பிரமணிய முதலியார் கொடுக்கும் விளக்கமாவது :

''பதி, பசு, பாசம் அவற்றுள் பசுக்களாகிய உயிர்கள் பல. பதி ஒருவரேயாம். உயிர்கள், அநாதியே மலத்தால் கட்டுப்பட்டு நிற்பன. (மும்மலம் ஆணவம், கன்மம், மாயை) அவை உய்யும் பொருட்டு கன்மத்துக்கீடாகிய பிறவிகளின் இறைவன் கருணையினாற்

செலுத்த, இப்பிறவியை வந்து கர்மங்களைச் செய்து மேன்மேலும் பிறவிகளில் வந்து உழல்வன. இவ்வாறு வரும் பிறவித் துன்பங்கள் நீங்கி நித்தியமானவைகளின் குறிக்கோளாக முத்தி மந்திரமும் திருநீறும் முதலிய சாதனங்களைத் தவிரத் துணைவேறில்லை. அத்துணைக் கொண்டு சைவ நன்னெறிகளில் சென்றால் உயிர்கள் நீங்கி நித்தியமாகிய இன்பம் பெறும் ''[43] என்பதாகும். இதனால் சித்தாந்தத்தின் உண்மைநெறி புலப்படுத்தப்படுகின்றதென்று சிவக்கவி சுப்பிரமணிய முதலியார் கூறுகின்றார்.

## சிவன்

திருமூலர் திருமந்திரத்தில்,

''ஆண்பெண் அலியுருவாய்நின்ற ஆதியை '' [44] என்பார். இதனால் இறைவன் ஆணாகவும் பெண்ணாகவும் அலியாகவும் விளங்குகின்றான் என்பது புலனாகின்றது. இறைவனின் அவதாரம் என்ற கொள்கையைச் சித்தாந்திகள் விரும்புவதில்லை. சிவஞான சித்தியாரின் ஆசிரியர்.

''மற்றைத்தேவர்கள் பிறப்பு இறப்பு இன்பதுன்பங்களுக்கு உட்படுவர். சிவன் அவதரிப்பவன் அல்லன். கர்மம் உடையவனல்லன். கருமம் இல்லாது அவதாரம் நேர்வதில்லை. உடல்கள் பிறப்பதும் இறக்கக் காண்பதும் கருமத்தின் காரியமாகும். பிறவிச்சூழல் வரும் உயிர் ஒருடலைக் கொள்வதுபோலக் கடவுள் ஓர் உடலைக் கொள்வதில்லை. இதனால் கடவுள் ஒருடல் வடிவத்தில் காட்சியளிக்க முடியாது என்பதாயிற்று. தன்னை வழிபடும் அடியவன் எவ்வித உருவத்தில் வழிபடுகின்றானோ அவ்வடிவத்தில் வெளிப்படுவான். சைவமுனிவர்களின் பாடல்களில் அன்பும் அருளுமே இறைவன்வடிவமென்னும் கருத்து அடிக்கடி உட்பொருளாக அமைகின்றது ''[45] எனறு மெய்ப்பொருள் இயல் வரலாறு கூறுகின்றது.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவதாரும் அறிகிலார் ''

என்ற திருமூலரின் கூற்றால் இறைவன் அன்பின் வடிவாகும் என்பது பெறப்படுகின்றது. பெரியபுராணத்திலும் சேக்கிழார் இறைவனின் அவதாரத்தை ஆதரிக்கவில்லை. மாறாக அடியார்களின் பெருமைகளை வெளிப்படுத்திக் காட்சியளித்ததாகவே கூறிச் செல்கின்றார். இவற்றால் இறைவன் அவதாரம் இல்லாதவன் என்பதும் நிலைநாட்டப்படுகின்றது.

## பக்தி - விளக்கம்

பக்தி என்ற சொல் உணர்த்தும் பொருள் என்னும் போது பெரியோரிடத்தும் இறைவனிடத்தும் காட்டும் அன்பே என்பர்.

இறைவனிடத்தும் அடியாரிடத்தும் கொள்ளும் அன்பே 'பக்தி' 'பக்தி' என்னும் போதே சமய சிந்தனை வந்துவிடுகின்றது.

அரச பக்தி, குருபக்தி, பதிபக்தி என்றெல்லாம் கூறுவது பண்டைய நாளைய அல்லது இடைக்காலத்தில் தமிழ் இலக்கியங்களைக் கொண்டு விளக்க முடியும் ஒன்று என்று தோன்றுவதில்லை. இச்சொல்லுக்கேற்ற தமிழ்ச் சொல்லை கூறலருடை. சில அறிஞர்கள் பக்திக்கு ஏற்ற தமிழபுச் சொல்லாக அன்பைக் கூறுவர். 'அன்பு' பக்தி என்பதைவிடவும் விரிந்த பொருளுடையது. அன்பு சமய வட்டத்துக்குள்ளாகவே வழங்கப்படம் சொல்லன்று. பக்தி என்ற சொல் வடமொழியில் பலவிடங்களிலும் வழங்கப்படலாம்.

தமிழிலும் இந்நாளில் பல பொருளில் வழங்கலாம் அன்பின் முதிர்ச்சி ஆர்வம், பக்தி என்று கூறலாம்.

''அழிவில முயலும் ஆர்வமாக்கள் வழிபடுதெய்வம் கட்கண்டாங்கு ''

என்றும் சங்கப்பாட்டில் [47] ஆர்வமாக்கள் பத்தரையே குறிப்பதாக நற்றிணையில் கூறப்படுகிறது.

திருமுருகாற்றுப்படையில்,

''ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக் காதலினு வந்து வரங்கொடுத்தன்றே ''
இவை பக்தர்களைக் குறிப்பதாக [48] வந்திருக்கின்றது.

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக'' [49] என்று பக்தியைப் பற்றித் திவ்வியப்பிரபந்தத்தில் கூறப்படுகிறது.

''ஆழ்வார் பாடலிலும் ஆர்வம் பக்தியைக் குறித்த
தென்றாலே பொருந்தும் இருப்பினும் விலக்க
தக்க 'ஆசை' என்ற பொருளிலும் இச்சொல்
பக்தி இலக்கிய காலத்தில் வழங்கியமையின் '' [50]

இச் சொல்லும் பக்திக்கு ஏற்ற தமிழ்ச் சொல் இல்லை என்று தேவாரம் கூறுவதாக பக்தி இலக்கியத்தில் காணப்படுகின்றது.

எனவே பக்தி என்பதற்குத் தமிழ் சொல்தேடும் முயற்சி கைவிடப்பட்டு பக்தி என்று வழங்கப்பட்டு வருகின்றது.

பக்தி என்பதற்குக் ''கலந்துநிற்றல்'' [51] என்றப்பொருளை பக்தி இலக்கியம் தருகின்றது. இவை வடக்குசாற் பொருளையே ஏற்றுக் கொண்டாலும் இறைவனோடு ஏற்றுக் கொண்டாலும் இறைவனோடு கலந்து நிற்றலையே தமிழ்ப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றது என்று ஆங்கில கூற்று குறிப்பிடுகின்றது.

பகவத்கீதையிடம் பக்தி கொண்டு வருபவரிடம் பகவத்கீதை அவர்களுடன்

கலந்து வருவதாகவும் கூறுகிறது. பக்தியோடு ஒன்றி அடங்கி நிற்கிறது. இதனைப் போன்று தொண்டு எனப்படும் கருமமும் பக்தியோடு ஒன்றி அடங்கி நிற்கிறது. இதனைப் போன்று தொண்டு எனப்படும் கருமமும் பக்தியோடு ஒன்றி பக்திக்கு அடங்கி நிற்கிறது.

''சத்திய மெய்யறிவின்ப வடிவாகிப் பொதுவில் தனிநடஞ்செய்
தருளுகின்ற சற்குருவே எனக்குப்
புத்தியோடு சித்தியும் நல்லறிவும் அளித்தழியாப் புனிதநிலை
தனிவிருக்கப் புரிந்தபரம் பொருளே !
பக்தியறியாச் சிறியோன் மயக்கம் இன்னும் தவிர்த்துப்
பரமசுக மயமாக்கிப் படிற்றுளத்தைப் போக்கித்
தத்துவ! நீ நான் எனும் பேதமது நீக்கித்தனித்த சுகாதீதமும் நீ
தந்தருள்க மகிழ்ந்தே'' [52]

என்று நான்காம் திருமுறை அன்பு மாலையில் இடம் பெற்றிருப்பதாக சண்முகனார் கூறுகின்றார். மாடு, மனை, மக்கள் சுற்றமிவற்றில் கொண்ட பற்று பாசம் எனப்பெறும் ஆண்டவனிடம் காட்டும் பற்றுக்குப் பக்தி என வழங்கப்படுகிறது. கடவுள் நிலையறிந்து அம்மயமாவதே பக்தியாம் பிற ரறியா வண்ணம் கள்ளக் காதலாம் போன்றது பக்தி இந்தப் பக்தியாம் காதலுக்குப் புறத்தே பொருள் இல்லை. அகத்தே அது வளருகிறது. தேடுபவனுக்கும் தேடப்படும் பொருளுக்கும் அணுத்துணையும் இடைவெளியில்லாச் செறிவே பக்தி. பக்தி செய்வதென்பது என்றும் பக்தியாக ஆவதே தான் ஒழுங்கு. பக்தியிருப்பது தான் பக்தியின் அனுபவம்.

''தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்'' [53] என்ற குறப்பாவில் அறிபவர் யார் ? பொய்புகன்றவன் யார் ? சுடப்படுபவன் யார் ? என்றக் கருத்து சிந்திக்கப்படுகிறது.

சிந்தனை என்பது சொல் ஒன்றும் செயல் ஒன்றுமான முரண்பட்ட நிலை. பக்தியை வளர்க்காது அழிக்கும். பக்தி ஆக்க சக்தியை வளர்ப்பது தொன்று தொட்டட நான், எனது என்ற பொய்மையான ஒரு விட முடியாப் பற்று நம்மைச் செறிந்து கப்பிக் கொண்டு பிசின் போல செம்பினில் களிம்பு போலப்பற்றிக் கொண்டு மயக்குகிறது. இந்த மயக்கம் தீர்வது தான் பக்தியின் உண்மை நிலை உலகவர்கள் தான்வேறு உலகம் வேறு என்ற நிலைக்கு இடம் இல்லாமல் இருந்தால் நீ நான் என்ற அறிவு கடந்த நிலைவரும்.

''சைவ இலக்கியங்களில் பழமையானதாகக் கருதப்படும் திருமந்திரம் இறைவனோடு ஆன்மாக்கள் கொண்டுள்ள நெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அவ்வடியார்களை நான்கு நிலையில் வைத்துக் கூறுகிறது ''[54] என்று திருமந்திரம் எடுத்தியம்புவதாக பக்தி இலக்கியத்தில் காணப்படுகின்றது.

1. பக்தர் - சரியை நெறியாளர்
2. தொண்டர் - கிரியை நெறியாளர்
3. சாதகர் - யோகிகள்
4. சித்தர் - ஞானிகள்

இங்கு ஆகமங்கள் கூறும் சாதனையின் நான்குபடிகளிலும் ஒரே அடியவர் பக்குவத்துக்கேற்ப நான்கு பெயர்கள் பெறுவதாகக் கொள்ளப்படுகிறது. இந்நான்கினையும் பக்திநெறி என்று கூறுவது சிறந்தது. மேலும் ஞானகுரு வருவதற்கு மூன்றாமிடத்தே பக்தியினையே தோன்றச் செய்ய திருமூலர்,

''பத்திப் பணித்துப் பரமனடி நல்கி
சுத்தவுரையால் சாறச் சோதித்துச்
சத்தும் அசத்தும் சதசத்தும் காட்டலால் ''

எனத் தொடங்கும் பாடலை விளக்குகின்றார். இப்பாடலில் பக்தி என்பது

கலந்துநிற்றல் என்ற பொருளைத் தரினும் பொதுவாக மக்களின் இதயக் கனிவாகவே கூறப்படும் இப்பக்தி நெறியில் இறைவன் பெரும்பாலும் அருள், அன்பு என்ற பொதுச் சொல்லாலே வழங்கப்படுகிறாள்.

''பக்தா பக்தர்களுக்கருள் செய்யும் பரம்பரனே'' [55] என்றும் தேவாரம் இறைவன் ஆன்மாவோடு கலந்து நிற்றலை பக்தர்கள் உள்ளம் எப்பொழுதும் இறைவனை எண்ணிக் கொண்டேயிருக்கும் நிலையில் இருக்கின்றது என்றக் கருத்தினை பக்தி இலக்கியம் நிலைநாட்டுகின்றது.

''முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்

பக்தி நெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் '' [56] என்னும் இப்பாடலில் ஆன்மாக்கள் பழவினைகள் ஒழிய மலமாக நீங்கப்பெற்றுச் சிவமாகி நிற்கும் முக்தி பெற உதவுவதே பக்திநெறி என்றும் பக்திசெய்யும் அடியாரைப் பரம்பரையாக ஆள்பவன் இறைவன் என்றும் மாணிக்கவாசகர் கூறுவதாக பக்தி இலக்கியத்தில் காணப்படுகின்றது.

### பக்தி - ஞானம்

ஞானத்தை அறிவினால் விசாரித்து தெளிவதாகவும் பக்தியை உணர்ச்சியினால் ஒன்றுவதாகவும் விளக்கப்படுகிறது.

''ஞானம் ஈசன்பால் அன்பேயாகும்

என்றார் ஞான முண்டார் '' [57] என்று பெரியபுராணத்தில் திருஞான சம்பந்த நாயனார் புராணம் கூறுவதாக பக்தி இலக்கியத்தில் காணப்படுகிறது. இப்பாடல் இறைவனிடம் பக்தி செலுத்துதலே ஞானம், அறிவு, ஆராய்ச்சி செய்தலன்று எனக்கூறினாலும் ஞானத்தின் புறத்தோற்றம் ஞானத்தின் புலப்பாடு பக்தி என்று கூறப்படுகின்றது.

உலகின் அளவில் ஒருபொருளைப் பற்றித் தெரிந்து கொள்வதையே ஞானம் என்கின்றோம். திருவள்ளுவர் இதனை மெய்யுணர்வு என்று கூறுகிறார். மெய்யுணர்வு விளக்கம் கூறவந்த பரிமேலழகர், பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரங்களையும் ஐயம்திரிபின்றி உள்ளவாறுணர்தல்'' [58] என்று விளக்கம் தருவதாக பக்தி இலக்கியத்தில் கூறப்படுகின்றது.

''மெய்யுணர்தலாவது எக்காலத்திலும் எவ்விடத்திலும் அழியாது நிற்கும் பொருள் இது என உணர்தல்'' [59] என்று மணக்குடவர் விளக்கம் தருவதாக பக்தி இலக்கியத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

ஞானம் என்பது ''எல்லாப் பொருள்களிலும் ஒன்றுபோல் நிலைபெற்றுள்ளவனும் அழியும் பொருள்களில் அழியாமலுள்ளவனுமாகிய பரமேசுவரனை எவன் பார்க்கிறானோ அவனே பார்ப்பான்'' [60] என்று பகவத்கீதை கூறுவதாக பக்தி இலக்கியத்தில் அமைந்துள்ளது. இத்தகைய ஞானம் கைவரப் பெற்றவர்களையே பக்தர்கள் என்றும் அடியார்கள் என்றும் தொண்டர்கள் என்றும் கூறுகின்றோம்.

**பக்திநெறி**

பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்து நடத்தியவர் என்று கருதப்படும் ஆளுடைய பிள்ளையார் சிவனருளால் ஞானப்பால் உண்டவர் ஞானசம்பந்தர் ஆவார். இவர் பெற்ற ஞானசம்பந்தரையே தாம் ஒரு பக்தராக வாழச் செய்ததோடு பலர் பக்திநெறி மேற்கொண்டு உய்யவும் துணைநின்றது. சிவன் தேவியை ஞானப்பால் ஊட்டுமாறு வேண்ட தேவியோ, சிவஞானத்து இன்னமுதப்பாலை ஊட்ட, தெளிந்த ஞானம் பெற்றுவிடுகிறது. எத்தகைய ஞானம் என்பதனை,

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்'' [60]

எனச் சேக்கிழார் பெரியபுராணத்தில் பாடுவதாக அமைந்துள்ளது.

தேவியால் திருமுலைப்பால் ஊட்டப்பெற்று ஞானசம்பந்தர் பெற்ற நெறியே பக்திநெறி.

''உயர்வற உயர் நலமுடையவன் யவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் யவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழு மனனே'' [62]

என்று திவ்வியப்பிரபந்தம் பாடல் கூறுவதாக பக்தி இலக்கியத்தில் அமைந்துள்ளது.

சிறந்த குணங்களை உடைய இறைவன் தான் மயக்கம் தீர்ந்து தெளிந்த ஞானம் பெறும்படியாக அருளினன். அவனை மறத்தல் என்பதையே அறியாத நித்ய சூரிகளுக்கு அவன் தலைவன். அடியவர்களுடைய துயரத்தைப் போக்குவதால் ஒளிமிகுந்துள்ளான். அவன் திருவடிகள் மனமே நீ அத்திருவடிகளைத் தொழுதொழு என்பது பாட்டின் பொருள். இப்பாட்டின் பொருளை ஊன்றி நோக்கினால் பக்திநெறியின் விளக்கமாக இப்பாடல் அமைந்திருப்பதை உணர முடியும். திருக்கோயில் வழிபாட்டினைத் தாழ்ந்தபடியிலுள்ளவர்களுக்கு என்று கருதுவோர் சிலர். இத்தகைய வழிபாட்டினையே பக்தி என்பர். இவ்வாறு கூறுபவர் தியானத்தை ஞானநெறி என்கின்றனர். ஆயின் தியானம்,

''உபாசனை - பக்தி என்பவை ஒரே பொருளில் வழங்கப்படுதலுண்டு. அதனை அறிந்தபின் அவன் தியானத்தில் நிற்க வேண்டும் '' [63] என்று உபநிடதம் கூறுவதாக பக்தி இலக்கியத்தில் காணப்படுகிறது.

''தியானம் ஒன்றே போதாது, அந்தப் பொருளையே நாட வேண்டும். என்னைத் தொடர்ந்து வழிபடுபவனுக்கு என்னையறியும் ஞானத்தை நான் வழங்குகின்றேன். ஞானமுடையவனுக்கு நான் எல்லாப் பொருளை விடவும் வேண்டியவனாகின்றேன்.

அவன் எனக்கு வேண்டியவனாகின்றான் '' [64] என்று கண்ணன் பகவத்கீதையில் கூறுவதாக பக்தி இலக்கியத்தில் இருக்கின்றது. சிவநெறியினையும் திருமால் நெறியினையும் நாம் பக்தி நெறி என்று கூறுகின்றோம். சைவ சமயக்குரவர்களும் வைணவ ஆழ்வார்களும் பாடியது பக்திப் பாடல்கள். இறைவனின் மேல் வைக்கப்பட்ட அன்பினால் பிறந்தவை. பக்தி என்பது ஞானத்தின் விளைவாக இறைவனிடம் ஒன்றி நிற்றல் ஆகும். இங்கு வைணவர்கள் கூறும் பக்தியும் சைவர்கள் கூறும் பக்தியும் வேறு. கருமயோகம், ஞானயோகம், ராசயோகம், பக்தியோகம் என்னும் பாகுபாட்டில் பக்தியோகத்தில் இந்நெறியினை அடக்கிவிடமுடியாது. கருமமாயினும், ஞானமாயினும், அஷ்டாங்க யோகமாயினும் பக்தி என்ற சுருதியில் இயங்கிக்கொண்டிருக்கின்றது.

இறைவன் கருணை என்னும் காற்று வீசிக் கொண்டிருந்தாலும் நம் வாழ்க்கைத் தோணியிலுள்ள பாயை நாம் விரித்தாலன்றித் தோணி பிறவிக் கடலின் மீது ஓடாது. எனவே இறைவனிடம் முற்றாகத் தன்னை ஒப்படைக்கு முன், பக்தியின் தொடக்க நிலையில்தான் முயற்சி என்று ஒன்றுண்டு. தொடக்க நிலையிலும் நம் முயற்சி சிறிது, இறையருளே பெரிது. நாம் இறைவனை நோக்கிப் பலவடி எடுத்து வைத்து வருகிறோம். எனவே நெறியின் முற்பகுதி நம்மிடத்தே தொடங்குவதாக உள்ளது. அடுத்த நிலையில் இறைவனே நெறியாகவும் உள்ளத்தைக் காணலாம். இறைவனே முடிவில் சாதனமாகவும் சாத்தியமாகவும் உள்ளான். இவ்வாறு கொள்வது அன்பின் முதிர்ச்சி மட்டுமன்று ஞானத்தின் முதிர்ச்சியுமாகும்.

''மீட்டுமொரு முறை எல்லாவற்றிலும் ஆழ்ந்த ரஹஸ்யமாகிய எனது பரமவசனத்தைக் கேள். நீ திடமான நண்பன் ஆதலால் உனக்கு இதைச் சொல்கிறேன். உன் மனத்தை எனக்காக்குக. என் தொண்டன் ஆகுக. எனக்கென வேள்வி செய்து, என்னையே வணங்குக. என்மைனயெய்துவாய். உண்மை இஃதே உனக்கிது சபதம்

உரைக்கிறேன். நீ எனக்கு இனிய எல்லா அறத்தையும் விட்டுவிட்டு என்னையே சரண்புகு. எல்லாப் பாவங்களினின்றும் நான் உன்னை விடுவிக்கின்றேன் துயரப்படாதே''[65] என்று பகவத்கீதை கூறுவதாக பக்தி இலக்கியத்தில் அமைந்திருக்கின்றது.

## ஆன்மீகம்

இராமலிங்கர் பிள்ளைப்பருவத்தில் இறையருள் பெற்று விளங்கியதை அவரின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்டு அறிய முடிகின்றது.

## அருட்பெருஞ்சோதி

இறைவனை ஒளியுருவில் காண்பதும் வழிபடுவதும் உலகில் புதியதில்லை. வேத காலத்திற்கும் முன்பிருந்த தீயைத் தெய்வமாக வழிபடுகின்ற பழக்கம் உலகெங்கும் இருந்திருக்கின்றது. தீயினை வழிபடுவதைப்போன்றே கதிரவனை வணங்கி வந்திருக்கின்றனர். இறைவனைப் பற்றிய தத்துவம் முழுமை பெறுவதற்கு முன்பே ஒளி வழிபாடு வந்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

உருவமாகவும் அருவமாகவும் இருக்கும் இறைவனை உருவகப்படுத்த ஒளிதான் சிறந்ததென்று கருதியிருக்கலாம். ஒளிக்குக் குறிப்பிட்ட உருவம் இல்லை. ஒளி ஒருவனை மனிதனாக ஆக்குகின்ற, மாணிக்கவாசகர் இறைவனை ''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி '' என்றும் ''சோதியே, சுடரே, ஆழொளி விளக்கே'' என்றும் கூறுகின்றார். ''சோதிவானவன்'' என்று அப்பர் பெருமானும் ''ஆதியாய நான்முகனும் மாலும் அறிவரிய தேதியனே '' என்று சம்பந்தரும் கூறியிருப்பது நினைக்கத்தக்கது.

உள்ளொளி பெருக்கி மெய்யறிவால் இறைவன் அருள் கண்ட வள்ளலார் வழங்கிய மகாமந்திர மொழியாக,

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்சோதி
என்னும் உயிர்மொழி அமைந்திருக்கின்றது.

மனித வாழ்வின் நோக்கம் எல்லாம் வல்ல எல்லாமாய் எல்லாவற்றிலும் இரண்டுறக் கலந்து நிற்கின்ற இறைவனை இனங்கண்டு, தனித்துப் பிரிந்து உயர்ந்து அறிந்து அடைவதென்று மெய்ஞ்ஞானிகள் எண்ணுகின்றனர். இந்த இறைவனை எண்ணற்ற பெயர்களால் குறித்து எப்படி அடைவதென்று தங்களது உள்ளுணர்விற்கும் பட்டவிற்கும் ஏற்ப எத்தனையோ அறிஞர்கள் கூறியிருக்கின்றனர். வள்ளலார் இறைவனை ''தனிப்பெருஞ்சோதியாகவும் தனிப்பெருங்கருணையாகவும் '' கண்டார்.

அருட்பெருஞ்சோதி ஆண்டவர் என்று வள்ளலார் வரையறுத்துக் கூறுகின்ற அடிப்படைக்கருத்து அவரது பெருவாய்ப்புத் தத்துவத்திற்குத் திறவுகோலாக இருக்கிறது. ஆதலால் அதனைப் பற்றி எண்ணிப் பார்த்துத் தெளிவு பெறுவது தேவையாகின்றது.

அருட்பெருஞ்சோதி என் ஆருயிரில் கலந்திருக்கின்ற
அருட்பெருஞ்சோதி என் அன்பிற் கலந்தறிவாய் விளங்கும்
அருட்பெருஞ்சோதி தெள்ளார் அமுதாகி உன் அண்ணிகின்ற ''[66]

என்று வருகின்ற இப்பாடலில் ஆருயிரில் கலந்து இருக்கும் சோதியாகவும், அன்பில் கலந்து இருக்கும் அமுதான சோதி என்றெல்லாம் கூறுகிறார்.

## அருள் பெரும் சோதி விளக்கம்

அருள்பெருஞ்சோதி என்ற சொற்றொடரில் அருள், பெரும், சோதி என்னும் மூன்று தனிச்சொற்கள் இணைந்திருக்கின்றன. பணியினை நெறிப்படுத்தப் பெற்ற அன்பில் தோய்ந்த உள்ளத்தில் பிறக்கின்ற அருள் எல்லையற்றதாக வேறுபட்டதாக

எவ்வுயிரையும் தம்முயிர் போல எண்ணுவதாகப் பகைவனுக்கும் துணைநிற்பதாக அமைகிறது. ஆதலால் இறையன்பை இறையருள் என்கிறோம்.

திருவள்ளுவர் அருளின் சிறப்பைக் கூறும்வகையில் அருளுடைமை என்னும் தனி அதிகாரத்தையே அமைத்திருக்கின்றார். அதில்,

''அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருள்செல்வம்
பூரியார் கண்ணும் உள'' [67]

என்று கூறுவதன்மூலம் அருள் அழியாத செல்வமாகவும் செல்வங்களிளெல்லாம் தலைசிறந்த செல்வமாகவும் விளங்குகிறது என்று வள்ளுவ் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

''அருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு'' [68] என்று கூறும் குறள் அருளின் இன்றியமையாத் தேவையை விளக்குகின்றது.

அருளினை நெஞ்சில் வளர்க்காமல் ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ள முடியாது. அருளை வளர்க்க முயற்சி தேவை. உள்ளத்தில் மருள் என்னும் இருள் நிறைந்திருக்கின்ற ஒருவருக்கு அருள் தலைதூக்காது. அருளாய் இருக்கின்ற இறைவனை உணர நம்மிடம் அருள் தோன்றும் என்று வள்ளலார் சுட்டிக் காட்டுகின்றார்.

'பெரும்' என்பது 'மகா' என்ற வடசொல்லைப் போன்றது. மிகப்பெரியதாக ஒப்பற்றதாக அளப்பரியதாக இருப்பதனை 'பெரும்' என்ற அடைமொழியில் குறிக்கின்றோம். இங்கு 'பெரும்' என்ற சோதியை சிறப்பிக்க அதன் அளவற்ற தன்மையைக் கூறப் பயன்படுத்தப்படுகின்றது.

'சோதி' என்பதனை மூன்று நிலைகளில் அதனைத் தருகின்ற பொருட்களின் அடிப்படையில் பிரித்துப் பார்க்கின்றனர். விளக்கு, சுடர், சோதி, என்று அவற்றை வகைப்படுத்திக் கூறப்படுகின்றது. இம்மூன்றையும் இணைத்து இறைவனை அழைக்கின்ற வகையில்,

''அருள் விளக்கே அருட்சுடரே அருட்சோதிச் சிவமே
அருள் அமுதே அருள்நிறைவே அருள் வடிவப் பொருளே '' [69]
என்று வள்ளலார் கூறுகின்றார்.

சூரியன், சந்திரன், தீ ஆகியவற்றிடமிருந்து கிடைப்பதனைச் சுடர் என்கின்றனர். விளக்கும் சுடரும் கண்ணுக்கு முன்னால் காட்சி தரக்கூடியவை. இவை உலகில் குவியும் புற இருளை அகற்றக்கூடியவை. ஆனால்,

''சோதியென்பது எல்லை இல்லாததால் காண்பதற்கரியதாய்
அகவிருளைப் போக்குவதாய் அமைந்துள்ளது '' [70]
என்று பா. குருசாமி கூறுகின்றார்.

அருள், பெரும், சோதி என்னும் மூன்றும் தனிச் சொற்களும் இணைகின்ற பொழுது ஒரு புதிய ஆழமான பொருள் விளக்கம் பெறுகின்றது. இதனை,

''இறைவன் எல்லை காண்பதற்கரிய அகண்ட பிரபஞ்சத்தில் நிறைந்து நிலைத்து உள்ளவர் என்றும் எல்லாப் பொருள்களுக்கும் எல்லா ஆற்றல்களுக்கும் எல்லா உயிர்களுக்கும் எல்லாச் செயல்களுக்கும் மற்றெல்லாவற்றிற்கும் ஆதார காரணமாய் இருக்கின்றவர் என்றும் உணர்ந்து கொள்கின்றோம். அப்படியுள்ள இறைநிலை நிறைந்த வெளிநிறை வொளியாகவே இருக்கின்றதாம். அந்த நிறையொளி ஒன்றே போக்குவரவற்ற பரிபூரணமாய் நிலைத்திருக்கிறது. தொண்டு தன் உண்மையை வெளியிடயாவுமாய்த் தோன்றியுள்ளதாம். அந்த ஆதாரப் பேரொளியின் தன்மைதான்

எல்லாமாய் பேரருள் கொண்டதாம். ஆகவே இறையருட் பெரும் ஒளியையே நம் அருட்பெருஞ்சோதியாக அறிந்து கொள்ள வேண்டும். இந்த அருட்பெருஞ்சோதிக்கு இணை வேறு எதுவும் கிடையாது. இதுவே உலக ஒளிகள் எல்லாம் விளங்கக் காரணமாம், இவ்வொளிக்கு இயல்பாய் உள்ள அந்த அருட்பெருந் தன்மையால் இந்த மகாபிரபஞ்சமும், இதன் கண் ஆக்கலாதி ஐந்தொழிற்செயல்களும் அளவில் நெடுஞ்காலமாகவே நடந்து கொண்டேயிருக்கின்றனவாம் '' [71] என்று சரணானந்தா விளக்குகின்றார்.

### சிவமாய மருந்து

மருந்து என்ற தலைப்பில் வள்ளலார் தம் அருட்பாவில் ஐந்து தொழிலையும் செய்தற்கு அளிக்கின்ற மருந்தாகவும் அகத்தையும் புறத்தையும் சேர்க்கின்ற மருந்தாகவும் இப்பாடலில் அமைகின்றதை,

அருட்பெருஞ்சோதி மருந்து - என்னை
ஐந்தொழில் செய்தற்களித்த மருந்து
பொருட்பெரும் போக மருந்து - என்னைப்
புறத்தும் அகத்தும் புணர்ந்த மருந்து '' [72]

என்று வள்ளலார் கூறியிருக்கின்றார்.

'உள்ளத்திலுள்ள மருந்து - என்றன்
உயிருக்கக்கனாதி உறவா மருந்து
தெள்ளத்தெளிக்கு மருந்து - என்னைச்
சிவமாக்கிக் கொண்ட சிவமாய மருந்து ' [74]

என்று வள்ளலாரர் உயிருக்கு உரிய உறவான மருந்தாக சிவத்தைக் கொண்ட மருந்து என்று கூறியுள்ளார்.

சமயநிலை வளர்ச்சியடைந்த நிலையில்வள்ளலார் மக்களுக்கு வழிபாட்டு முறைகளை வகுத்துக் காண்பித்துள்ளார்.

## வழிபாட்டு முறை : கடவுள் கொள்கை

வழிபடுபொருளும், வழிபாட்டு முறையும் ஒருவரது இறைக்கொள்கையை ஒட்டியே அமையும். வள்ளலார் பல தலங்களுக்குச் சென்றிருக்கின்றார். அங்கே உள்ள தெய்வங்களைப் பற்றி எல்லாம் உள்ளமுரகப் பாடியுள்ளார். தனது ஒன்பதாம் வயதில் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப் பெற்றதை அவரே கூறுகின்றார். அவரது முறையான ஞான வாழ்க்கை பன்னிரண்டாம் வயதில் தொடங்கியது. வழிபடு குருவாக அருட்செல்வர் திருஞானசம்பந்தரும் வழிபடு நூலாக வான்கலந்த மாணிக்கவாசகரின் திருவாகசமும் அமைந்திருந்ததை வள்ளலாரின் வாழ்க்கையில் அறிய முடிகிறது. அவர் முதலில் முருக உபாசகராகவும், பின்னர் சிவபக்தராகவும் அதன்பின்னர் சிவபெருமான் அன்பராகவும் வாழ்ந்தார். இறுதியில் சத்திய அடிகராகத் திகழ்ந்தார். ஆதலால் நம்மை பின்பற்றுகின்றவர்களையும் அருட்பெருஞ்சோதியை வழிபடுகின்றவர்களாக மாற்றினார். ஒன்றே தெய்வம் என்ற கோட்பாட்டில் உறுதியான நம்பிக்கை கொண்ட வள்ளலார் சிறுதெய்வ வழிபாட்டையோ உயிர்ப்பலி இடுதலையோ ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை அவர் மிகத்தெளிவாக,

'நலிதரு சிறிய தெய்வமென்றையோ
நாட்டிலே பல பெயர் நாட்டிப்
பலிதரு ஆடுபன்றிக்கு குடங்கள் ' [74]

இப்பாடல் பிள்ளை பெருவிண்ணப்பத்தில் இடம் பெற்று இருப்பதாக ம.பா. குருசாமி கூறுகின்றார். வள்ளலார் ஒன்றாக இருக்கும் இறைவனை,

''உருவமும் அருவமும் உபயமும் உளதாய்
உளநலதாய் ஒளிர் ஒருதனிமுதலே ''

என்று கூறுவது எண்ணத்தக்கதென்று ம.பா. குருசாமி கூறுகின்றார்.

## இறைவனை ஒளிவடிவமாக நோக்குதல்

ஒளி (தீ) க்கு உருவம் இல்லை. அது இருளைப் போக்குகின்றது. அறியாமை இருளைப் போக்கும் அடையாளமாக ஒளியிருக்கின்றது. அறிவியல் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைவது ஒளி. ஒளிக்கு ஆக்கும் சக்தி உண்டு. காக்கும் சக்தி உண்டு. அழிக்கும் ஆற்றல் உண்டு. ஒளி இல்லையேல் உலகம் இல்லை. ஆதலால் ஒளிவடிவமாக இறைவனைக் காண்பது உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில் அமைகின்றது. வள்ளலாருக்கு முன்பும் இறைவனை ஒளிவடிவில் கண்டு உயர்த்தியவர்கள் பலர் உண்டு. மாணிக்கவாசகப்பெருந்தகை இறைவரை,

''சோதியே சுடரே சூழ் ஒளிவிளக்கே ''

என்றும்

''மாறிவின்று என்னை மயக்கிடும் வஞ்ச

புலன் ஐந்தின் வழியிடைத்து அமுதே

ஊறி நின்று என்னுள் எழு பரஞ்சோதி ''[76]

என்றும் கூறுவதை இங்கு நினைக்கத்தக்கதென ம.பா. குருசாமி கூறியிருக்கின்றார்.

## சத்திய ஞான சபை

வள்ளலார் தமது தத்துவத்திற்கேற்ற வகையில் சங்கம் சார் திருக்கோயிலை வடலூரில் அமைத்தார். வடலூரை உத்திரஞான சிதம்பரம் என்று அழைத்த வள்ளலார் 25-01-1872 இல் சமரச சுத்தசன்மார்க்க சத்தியஞான சபை என்னும் தனிப்பெரும் கோயிலை நிறுவினார். இந்தக்கோயிலின் அமைப்பை,

''சபை எண்கோணவடிவமானது. தெற்கு நோக்கியது. சபையின் முன் மண்டபத்தில் கீழ்ப்புறம் பொற்சபையும், மேற்புறம் சிற்சபையும் உள்ளன. கிழக்கு நோக்கிய வாயிலை பொற்சபை ஆகிய மூன்றும் ஆய்த எழுத்தைப் போன்று

அமைந்துள்ளன. பொற்சபையும் சிற்சபையும் சிதம்பரத்தில் முன்னரே உள்ளவை. அடிகள் புதிதாகக் கண்டது ஞானசபையே எண்கோண வடிவமான ஞானசபைக்குகள் பன்னிருகால் மண்டபம் ஒன்றும் நாற்கால் மண்டபம் ஒன்றும் ஒன்றினுள் உன்றாக உள்ளன. நூற்கால் மண்டபத்தின் நடுவே அருட்பெருஞ்சோதி ஆண்டவர் எழுந்தருளியுள்ளார் ''[77] என்று ஊரன் அடிகள் விளக்குகின்றார். வள்ளலார் கோயிலை நமது அகத்தையும் அதன் இடையொளி குடிகொண்டிருப்பதையும் குறிப்பால் உணர்த்தும் வகையில் அமைத்திருக்கின்றார். இதனை அவர்,

''சத்திய ஞானசபை யென்னுட் கண்டனன்
சன்மார்க்க சித்தியை நான் பெற்றுக் கொண்டேனன் ''

என்று வள்ளலார் கூறியிருப்பதிலிருந்து சன்மார்க்க சித்தியைப் பெற்றிருப்பதை உணர முடிகின்றது.

சத்திய ஞானசபையின் உயிர்மூச்சாக இருப்பது சோதி வழிபாடு. உயர்ந்த ஒரு தத்துவத்தை உருவமாக உணரத்தும் வகையில் சோதி வழிபாட்டை வள்ளலார் வகுத்திருக்கின்றார்.

வள்ளலார் தமது கையிலேயே திருவிளக்கையும் அதற்கு முன்னால் ஐந்து அடி உயரமுள்ள ஒரு கண்ணாடியையும் அமைத்தார். கண்ணாடிக்கு ஏழு திரைகள் உள்ளன. இவை 1. கருப்பு 2. நீலம் 3. பச்சை 4. சிவப்பு 5 பொன்மை 6. வெண்மை 7. இளஞ்சிவப்பு ஆகிய நிறங்களைக் கொண்டமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் திரை விலகிய பின்னர்தான் ஒளிவடிவிலிருக்கம் இறைவனைக் காண முடியும். இங்குள்ள வழிபாட்டுத் தத்துவத்தை எண்ணி உரைக்கத்தக்கத. தமது உள்ள விளக்கு உள்ளத்தில் உள்ள இறைவன் ஒளிவடிவாய் இருக்கின்றான். அந்த ஆன்மீக ஒளியை நம்மால் உடனடியாகப் பார்க்க முடிவதில்லை. அதற்குக்காரணம், அதனைப் பல மாயத்திரைகள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. அந்த மாயத்திரைகள் விலகினால்

மட்டுமே அருட்பெருஞ்சோதி ஆண்டவரைக் காணலாம். சோதியை மறைத்தக் கொண்டிருக்கின்ற ஏழுதிரைகளும் தத்துவப் படலங்களே. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சக்தியைக் குறிக்கின்றது. இவை பற்றி இருவகையான விளக்கங்கள் சொல்லப்படுகின்றன.

கருப்புத்திரை - மாயாசக்தி

நீலத்திரை - கிரியா சக்தி

பச்சைத்திரை - பராசக்தி

சிவப்புத்திரை - இச்சா சக்தி

பொன்மைத்திரை - ஞானசக்தி

வெண்மைத்திரை - ஆதிசக்தி

கலப்புத்திரை - சிற்சக்தி [78]

என்று ஊரன் அடிகள் விளக்கம் தருகின்றார்.

1. கருப்புத்திரை - மாமாயயை - அரைசது மறைக்கம்
2. நீலத்திரை - மாயாசக்தி - ஆருயிர் மறைக்கும்
3. பச்சைத்திரை - கிரியாசக்தி - பரமவெளியதனை மறைக்கும்
4. சிவப்புத்திரை - பராசக்தி - சித்துருவெளியை மறைக்கும்
5. பொன்மைத்திரை - இச்சா சக்தி - பொருளுறு வெளியை மறைக்கும்
6. கலப்புத்திரை - ஆதிசக்தி - கருகரு பாவங்களை மறைக்கும் ” [79]

வள்ளலார் அருட்பெருஞ்சோதி அகவலில் ஏழுதிரைகளைப்பற்றி விளக்குகின்றார். வள்ளலார் பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்று கூறிய வழிகாட்டும் மந்திரச் சொற்களையும் ஆய்ந்து அறியமுடிகின்றது.

அழியா திருவுருவம் பெற்ற வள்ளலார் தாம் பெற்ற பேரின்பத்தை இந்த உலகத்தவரும் பெற வேண்டுமென்று விரும்பி ஆன்மீகத்தை வளர்த்தார். அதற்காக, சன்மார்க்க சங்கம் 1865, சத்ய திருமச் சாலை 1867 சத்ய ஞான சபை 1872 என்ற மூன்று நிறுவனங்களைத் தோற்றுவித்தார். வள்ளலாரின் ஆன்மீகத் தத்துவத்தை அனைவரும் கூடி உய்த்துணர சங்கம் வழிவகுத்தது. அவரது உயிர்க் கொள்கையாகிய சீவகாருண்ய ஒழுக்கத்திற்கு செயல்வடிவம் கொடக்கத் தக்கதாக சத்திய தருமச்சாலை அமைத்தது. அவரைப் பின்பற்றி வருகின்றவர்களுக்கு இறைவனை அடைய வழிகாட்டும் இடமாக சத்திய ஞானசபை உருப்பெற்றது.

**சன்மார்க்க நெறி**

இளமையில் முருகனை வழிபட்டு ஞானவாழ்க்கை வளர்ச்சியில் சிவபக்தராகவும் நடராச அன்பராகவும் விளங்கி இறுதியில் அருட்பெருஞ்சோதி அடியவராகிய வள்ளலார் தான் கண்ட சன்மார்க்கம் என்னும் தவநெறியை இறைவன் வழங்கிய புதுநெறியாகக் கருதுகின்றார். இதனைப் பின்வரும் பாடல் விளக்குகின்றது.

''பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடுமோர்
பவநெறி இதுவரை பரவியது இதனால்
சென்னெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறியிருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு புதுநெறி எனும் வான் '' [80] என்று விளக்கியிருக்கின்றார்.

வள்ளலார் ஷடாந்த சமரசச் சுத்த சன்மார்க்கம் என்பதனை விளக்கும் வகையில்,

''சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூல் முடிவான நான்காவது மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற கூட்டம் என்று கொள்ள வேண்டும். மார்க்கம் நான்காவன : தாசமார்க்கம், சற்புத்தி மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என நான்கு '' [81] என்றும்,

''ஷடாந்தம் சமரச சுத்தசிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது ஷடாந்தம் என்பது யாது ? வேதாந்தம் சித்தாந்தம் போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், காலாந்தம் ஆக ஆறு '' [82] என்றும்,

''பூர்வத்தில் நின்ற சமயமத சன்மார்க்கங்களை மறுப்பது சுத்த சன்மார்க்கம் '' [83] என்றும் எடுத்துரைக்கின்றார்.

வள்ளலாரின் ஒப்பற்ற கொள்கைகளை எல்லாம் உள்ளடக்கியதாக சன்மார்க்கம் அமைந்திருக்கின்றது.

''எல்லா உயிர்களிடத்தும் கடவுள் இருத்தலை உணர்ந்து வழிபட வேண்டும் என்பதும் உயிர்இரக்கம் என்னும் சீவகாருண்ணியமே சமய வாழ்வின் அடிப்படை என்பதும் ஆன்மநேய பொருமை சமயநெறியின் தெளிவு என்பதும் அவருடைய சிறந்த கொள்கைகளாகும்''[84] என்று டாக்டர். மு. வரதராசனார் கூறியிருப்பது நினைக்கத்தக்கது.

**சமயநெறி**

ஒவ்வொர சமயமும் இறைவனருளடைய ஒரு வழியைக் காட்டுகின்றது. எல்லா வழிகளும் சமயங்களும் நதிகளைப் போன்று கடவுள் என்ற ஒரே கடலில் சென்று கலக்கின்ற தென்று சமயப் பொதுமை பேசுகின்ற சான்றோர்கள் கூறியிருக்கின்றனர்.

''தசமார்க்கம் சற்புத்திரமார்க்கம் சகமார்க்கம் சன்மார்க்கம் ஆகிய நான்கு மார்க்கங்களிலும் சன்மார்க்கம் சிறந்தது என்பதை மார்க்கங்கள் நான்கில் சன்மார்க்கம் உயர்ந்தது. மற்ற மூன்று மார்க்கங்களும் சன்மார்க்கத்தை அடைவதற்கான படிகள். சன்மார்க்கம் ஒன்றே முடிவான பரமுத்தியைத் தரும். மற்ற மூன்றும் பதமுத்திகளையே தரும் '' [85] என்று ஊரன் அடிகள் குறிப்பிடுகின்றார்.

## தொகுப்புரை

மனிதனின் மனத்தைப் பண்படுத்தித் தனிமனிதனையும் சமுதாயத்தையும் நலமுடன் வாழச் செய்யும் புனிதக்கோட்பாட்டைச் சமயம் எனலாம். வள்ளலாரின் சமயத்தில் உள்ள பக்தி வளர்ச்சிகளையும் வள்ளலாரிடத்தில் இறைவன் வெளிப்பட்டதையும் அறியமுடிகின்றது. வாழ்க்கையில் தோன்றிய ஆன்மீக வளர்ச்சி, சிவாய மருந்து, சோதி வழிபாடு முறைகள், சத்திய ஞான சபை விளக்கம், சன்மார்க்க நெறிகள் போன்றவற்றின் மூலம் சமயநிலைகளில் வள்ளலார் கூறிய கருத்துக்கள் என்பதை இவ்வியல் விளக்கிக் காட்டியுள்ளது.

# அடிக்குறிப்புக்கள்

1. கழகத்தமிழ் அகராதி, ப. 424
2. கலைக்கலைஞ்சியம், தொகுதி - 4, ப. 451
3. Chambers Dictionary, P.1093 - Religion : Belief in recognition of or an waleened senseof a higher unseen controlling power of pacers with the emotion and morality connected there withs.;
4. The Oxford Mini Dictionary, P. 375 - Religion Belief in the existence of a super human controlling power usually expressed in workship.
5. The Great Lifco Dictionary, P. 825 - Religion : Any system of faith and workship.
6. அருணாசலம். ப., சிலப்பதிகாரச் சிந்தனை, ப. 93
7. சுப்பிரமணியம். ந., சங்ககால வாழ்வியல், ப. 420
8. திரவியம். கா., தேசீயம் வளர்த்த தமிழ், ப. 66
9. அவினாசிலிங்கம். தி.சு., சிந்தனைக் கதிர்கள் , ப. 56
10. தொல்காப்பியம், சூத்திரம் ப. 106
11. மகாவித்துவான். கே. ஆறுமுகநாவலர், இந்துமத இணைப்பு விளக்கம், ப. 3
12. கலைக்களஞ்சியம், தொகுதி - 4 ப. 451
13. Tamil Lexicon, P. 3052
14. சம்பத்குமார். ப., மு.வ. நாவல்களில் பாத்திரங்கள் ஒரு திறனாய்வு, ப. 275
15. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம், மூன்றாம் பாகம். ப. 89
16. A.J. Tonybee, A study of History of Bridgement, by D.C. Sumervell /
17. வச்சிரவேல்., சைவ சித்தாந்தத்திறவு, ப. 487
18. அருணாசலம். ப., சிலப்பதிகாரச் சிந்தனைகள், ப. 27

19. அருணாசலம். ப. பக்தி இலக்கியம் . ப. 93
20. மேலது ப. 33
21. மேலது
22. புறநானூறு, பா. 6
23. மேலது., பா. 91
24. கலித்தொகை, பா. 150
25. புறநானூறு, கடவுள் வாழ்த்து,
26. கலித்தொகை, பா. 150
27. மேலது., பா. 2
28. மேலது., பா. 26
29. மேலது., பா. 150
30. மேலது.,
31. மேலது., பா. 81
32. திருமுருகாற்றுப்படை பா. 154
33. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், XII-9
34. மேலது..., XI 72 - 73
35. மேலது., VI 43 - 45, XVIII 75
36. அருணாசலம்.ப. பக்தி இலக்கியம் ப. 44
37. Monier Williams Strt, English Dictionary, P-456
38. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், XXIII 1-5
39. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், ப. 47
40. அதியமான் நெடுமான் அஞ்சி, புறநானூறு, பா. 91
41. மதுரைக்காஞ்சி, பா.வரிகள் : 453 - 455

42. அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீடு, கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, பக் : 682 - 683.
43. சிவக்கவி சுப்பிரமணிய முதலியார், பெரியபுராணம் உரை, 6ஆம் பகுதி, ப.85.
44. திருமூலர், திருமந்திரம், பா. 270.
45. அண்ணாமலைப்பல்கலைக்கழகம், தமிழ் நூல் வெளியீடு, கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, பக். 689 - 690.
46. திருமூலர், திருமந்திரம், பா. 270.
47. நற்றிணை, பா.1.
48. திருமுருகாற்றுப்படை, மழ. 93.
49. நாலாயிர , பா. 2182.
50. அருணாசலம் ப. பக்தி இலக்கியம் ப. 130.
51. மேலது
52. சண்முகனார். பழ. அருட்பிரகாச வள்ளலார் ப. 176.
53. வரதராசனார். மு. திருக்குறள் ப. 61.
54. அருணாசலம். ப. பக்தி இலக்கியம் ப. 130.
55. தேவாரம் (தரும்புர ஆ தினவெளியீடு உரையில் காண்பது) பக்தி இலக்கியம் ப. 130.
56. அருணாசலம் ப. பக்தி இலக்கியம் ப. 132.
57. அருணாசலம் ப. பக்தி இலக்கியம் ப. 133.
58. மேலது. ப. 134.
59. மேலது.,
60. மேலது.,
61. சேக்கிழார், பெரியபுராணம், திருஞானசம்பந்த நாயனார் புராணம், ப. 70.
62. அருணாசலம் ப. பக்தி இலக்கியம் , ப. 138.
63. அருணாசலம் ப. பக்தி இலக்கியம் , ப. 139.

64. மேலது., ப. 139.

65. -மேலது ., ப. 140.

66. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா, பாகம் - 6, ப. 2824

67. மு. வரதராசனார், திருக்குறள், எண் : 241.

68. மேலது., எண் : 247.

69. குருசாமி. ம.பா. வள்ளலார் ஓர் அறிமுகம் , ப. 73.

70. மேலது., ப. 73.

71. அருள் அறிவியல் (அல்லது) மெய்ஞான விஞ்ஞானம், ப. 99-100

72. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா, பாகம் - 6, பா.2578

73. மேலது., ப2501

74. குருசாமி. ம.பா. வள்ளலார் ஓர் அறிமுகம். ப. 89.

75. மேலது., ப. 90.

76. மேலது ., ப. 91.

77. கோயில் திருப்பதிகம், அறுபோக இலக்கணம், முதல்பாடல், இராமலிங்க அடிகள் வரலாறு, ப. 452.

78. வடலூாரி வரலாறு ப. 64-65.

79. சிதம்பரம், இராமலிங்க சுவாமிகள் சரித்திரமும் அருட்பா ஆராய்ச்சியும் ப. 17.

80. திருவருட்பா., பா. 3696

81. மேலது., பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு, 4 ஆம் புத்தகம், உபதேசப்பகுதி, ப. 45

82. மேலது., ப. 45.

83. மேலது., ப. 46.

84. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 216.

85. ஊரின் அடிகள், வடலூார் வரலாறு, ப. 26.

*இயல் இரண்டு*

# ஆன்மீக வாழ்க்கை நிலை

*இயல் இரண்டு*

# ஆன்மீக வாழ்க்கை நிலை

## முன்னுரை

வடலூரி வள்ளலாரின் பிறப்பு, அற்புத நிகழ்ச்சி கந்த கோட்டம் நிகழ்ச்சி, ஞான வாழ்க்கை இல்லறவாழ்க்கை, தமிழ்த்தொண்டு, துறவு ஆன்மீகச்சாதனை, உலகியல் சானை ஆகியவற்றால் அவருடைய வாழ்க்கை சிறப்பினை அறிய முடிகின்றது. வள்ளலாரின் ஆன்மீக வாழ்க்கையின் சாதனைகளை இக்கட்டுரையில் காணலாம்.

இராமலிங்கர் பிள்ளை பருவத்தில் இறையருள் பெற்றிருப்பதை அவரின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து அறியலாம்.

உலகம் உயர்நெறியில் செல்ல வழிகாட்டிய வள்ளுவப் பெருந்தகை,

''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்

ஈண்டு முயலப்படும் '' [11] என்று கூறுகின்றார்.

வாழ்க்கையில் எண்ணியதை எண்ணியாங்கு பெற முயல்கின்றவர்களின் வாழ்க்கை தவ வாழ்கையாக அமைகின்றது. அவர்களது சிந்தனையும் செயலும் ஒரே நோக்கத்தை மையமாக கொண்டே இருந்ததை காணலாம்.

வாழ்க்கையில் இறைவனைக்கண்டு, இறவா நிலையைப் பெறா எத்தனையோ, ஆன்ம ஞானிகள் முயன்றிருக்கின்றனர். அவர்களில் வெற்றி கண்ட ஒருவராகவும் மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டுகின்ற ஓர் ஆன்மீகச் செல்வராகவும் விளங்குபவர் வள்ளலார். ஓர் ஆன்மீக வேட்கையுடையவரின் வாழ்க்கை எப்படி உயர்ந்த நிலையில் அமையுமென்பதை வள்ளலாரின் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் காட்டுகின்றது.

## பிறப்பு

வாழையடிவாழையென வந்த திருக் கூட்டமரபில் ஒருவராக தோன்றிய இராமலிங்க சுவாமிகள் பிறப்பிலேயே ஓர் அற்புதம் நிகழ்த்ததாகக் கூறுகின்றனர். அவருடைய அன்னையார் ஒரு சிவனடியாரின் பசியைப்போக்கிய பொழுது அந்த அம்மையார் சொல்லிச் சென்றதாகவும் அதன்படியே பிறந்த குழந்தை இராமலிங்கம் என்று கூறப்படுகின்றது.

சோழ வளநாட்டில் சிற்றம்பலம் என்னும் தில்லை என்று சிறப்பிக்கப்படும் சிதம்பரத்துக்கு வடமேற்கில் சுமார் 10 கல் தொலைவில் உள்ள மருதூர் என்னும் சிற்றூரே வள்ளலார் அவதாரம் செய்த ஊராகும். இவ்வூர்,

''ஐந்திணைசேர் அகத்தமிழின் துறைநுகர்ந்து புறத்துரையின் [2]''

என்று வரும் பாடலால் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலையிலும் மருதூர் மருத நிலப்பண்பாட்டில் நீர் வளமும் நிலவளமும் பொருந்தியுள்ளது. பெரும்பாலும் அவ்வூர் மக்கள் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ளனர். அவ்வூரினர், சஷத்திய வம்சத்தினராகவும் வைணவ சமயத்தைச் சார்ந்தவராகவும், புலால் உண்போராயும் உள்ளனர். தற்காலம் ஒரு சில குடும்பத்தினரே புலால் உணவை நீக்கியுள்ளார்.

இவ்வூரில் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சைவ சமயத்தைச்சார்ந்த கரணீகர் குடியில் பிறந்த இராமையாபிள்ளை என்பார் அரசாங்கக் கணக்கராக குடியேறினார். அரசாங்க கணக்கு அலுவலுடன் பள்ளியில் பயிலும் சிறுவர் கட்டுப்பாடஞ்சொல்லும் கணக்காயராகவும் இருந்துவந்தார். இவர் சீர் கருணீகர் குலத்தைச் சேர்ந்தவர் இவருக்குப் பூர்வீகும் செங்கல்பட்டு மாவட்டம் பொன்னோரி என்று எண்ண வேண்டிருக்கின்றது. இராமையா பிள்ளைக்கு முதல் 5 மாணவியர் ஒரு பின் ஒருவராக இறைவனடி சேர 6 வது மனைவியாக வாய்த்தவர் சின்னம்மையார் இவர் பிறந்தவூர் பெண்னோரிக் கடுத்த சின்னக் காவணம் எனப்படுகின்றது.

இவர்கள் இல்லறம் சிறப்பாக நடத்திவரும் நாளில்

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட்பேறு" [3] என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப இவர்கட்கு சபாபதிபிள்ளை, பரசுராமபிள்ளை என்ற இரு ஆண்மக்களும், சுந்தரம்மாள் உண்ணாமுலையம்மாள் என்ற இரு பெண்மக்களும் ஆக நால்வர் பிறந்தனர்.

இவ்வாறு நான்கு மக்களுடன் வாழ்ந்துவருங்காலத்தில் பத்து ஆண்டுகட்குப் பிறகு, சின்னம்மையார், தம் இல்லத்துக்கு வந்த சிவனடியார் ஒருவரின் வாழ்த்துதலைப் பெற்றார். அதன் பலனாக கலி 4925 சுபானு ஆண்டு புரட்டாசித்திங்கள் 21 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஓர் ஆண்மகனை ஈன்றெடுத்தார். அக்குழந்தைக்கு,

"உருநாமம் இராமலிங்கம் எனக்கொண்டார் ஓங்கரளால் " [4]

என்றபடி இராமலிங்கம் என்னும் பெயர் சூட்டி வளர்த்து வந்தனர். இராமலிங்கம் சிறு குழந்தையாக இருக்கும்போது இறைவனின் அருள்பெற்று இருந்ததை பின்வரும் நிகழ்ச்சி நமக்கு நன்கு சித்தரித்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. இந்நிகழ்ச்சி இராமலிங்கரின் வாழ்க்கையில் நடந்த முதுல் அற்புத நிகழ்ச்சியாக கூறப்படுகின்றது.

## அற்புத நிகழ்ச்சி

இராமலிங்கம் ஐந்து திங்கள் குழவியாக இருந்தபோது அவரைப் பெற்றோர்கள் சிதம்பரத்திற்கு இறைவழி பாட்டிற்குக் கொண்டு சென்றனர். தில்லையம்பதியில் சிதம்பர இரகசியத்தைக் காடடும் திரையைத் தூக்கிய போது கைக்குழந்தையாக இருந்த இராமலிங்கம் சிதம்பர இரகசியம் விளங்கப்பெற்று புன்னகை முறுவல் பூத்தாராம் தனக்கு குழந்தைப் பருவத்திலேயே சிதம்பர இரகசியத்தை இறைவன் விளக்கியதை வள்ளலார் திருவருட்பாவில்,

"தாய் முதலோ ரொடு சிறிய பருவத்தில் தில்லைத் " [5]

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.

இராமலிங்கரின் தமையனார் சபாபதிபிள்ளை சென்னையில் இருந்த காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி புராணச் சொற்பொழிவுகள் நிகழ்ச்சிக் குடும்பத்தைப்போற்றி வந்தராம் இராமலிங்கத்துக்குக் கல்வி கற்கும் பருவம் வந்ததும், காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடமும் தன் தமையனாரிடமும் தொடக்கக்கல்வி பயின்றார். ஆயினும் அவர், இவ்வுலகத்தில் கல்வியில் நாட்டமின்றி, கந்தகோட்டம் திருவெற்றியூர் முதலான தெய்வத் தலங்கட்குச் சென்று இறைவழிபாட்டில் ஈடுபட்டார். இதைக் குறையாக எண்ணிய தமையனாரிடம் தான் இனிமேல் படிப்பதாகக்கூறி வீட்டின் மாடியில் கண்ணாடியைச் சுவற்றில் திருவிளக்கு ஏற்றக் கண்ணாடியைப் பார்த்த வண்ணம் தியானத்தில் இருந்து பழகினார். இத்தகைய பயிற்சியால் கண்ணாடியில் முருகனைக்கண்டு கலைஞானம் அனைத்தும் ஓதாதுணர்ந்து திருஞானசம்பந்தரைப் போன்று, பாடல் இயற்றும் தன்மையும் இறையருளால் பெற்றார்.

கண்ணாடி என்பதை கண் + நாடி என்று பிரித்துக் கண்ணால் ஆராய்ந்து இறைஞானம் பெற்றார் என்பது தத்துவம் என அறிஞர் கூறுவர். இவ்வாறு இறைஞானம் பெற்றதற்கு அகச் சான்றாகப் பின்வரும் பாடல் அமையும்.

''கல்வி யெலாங் கற்பித்தாய் நின்பால் நேயம்
காணலைத் திவ்வுலகம் காணலென்றே '' [6]

என்று வரும் பாடலை இராமலிங்கர் தம் 9 ஆம் வயதிலேயே தோத்திரப்பாடல் என மிக விரைவாகப் பாடும் திறமையை இறைவனருளால் பெற்றார்.

''உண்மையான கவிதா சக்தி வாய்ந்த
மேதாவியர்கள் மிகச் சிறுவயதிலேயே பாடினர்

என்பது மேனாட்டுப்புலவருள்ளும் கண்டதேயாம் '' [7] என்று கந்தசாமிபிள்ளை கூறுகின்றார்.

## கந்தக்கோட்டம் - நிகழ்ச்சி

இராமலிங்கரது இறைஞானத்தையும் கவிபாடும் ஆற்றலையும் பல காலம் உணராதிருந்த சபாபதி பிள்ளை பெரிய புராணச் சொற்பொழிவு செய்யும் இடத்திற்கு இவரை ஒருநாள் அனுப்ப நேர்ந்தது, அங்கு இராமலிங்கர் செய்த சொற்பொழிவினைக்கேட்டு இது காறும் தமபி என எண்ணியிருந்தது தவறு. அம்முருகக் கடவுளே தம்பியாக வந்துள்ளார் என்பதை உணர்ந்து இராமலிங்கருக்கு அதிக மரியாதை கொடுக்கத் தொடங்கினார். இதனைத் தாங்கப் பெறாத இராமலிங்கர் குடும்பத்துடன் கலந்திருப்பதை சிறிது சிறிதாக விலகி இறைவழிபாட்டிலேயே காலங்கழிக்க அடிக்கடி கந்தகோட்டம் திருவெற்றியூர் திருத்தணிக்கை, முதலான தலங்கட்குச் சென்று தியானிதபுது எழுத்தறிவில் பெருமானைப் பாடிக்கொண்டு காலங்கழித்தார். இதனால் இவருக்கு உலகில் வாழ்வில் வெறுப்பும் ஞான வாழ்வில் நாட்டமும் பன்னிரண்டு வயது முதல் அமைகின்றன.

## ஞானவாழ்க்கை

இராமலிங்கரது அடிகளாரின் பேரறிவு பெருஞானம் இவற்றை உணர்ந்த சென்னை வித்வான் உபயகலாநிதி தொழுவூர் வேலாயுத முதலியார் இவரிடம் மாணாக்கராக அடிமை பூண்டார் மற்றும் பல புலவர்களும் உண்மையுணர்ந்த சான்றோர்களும் தமக்கு நேர்ந்த ஐயப்பாடுகளை இராமலிங்கரிடம் கேடபுடு நீக்கிக் கொண்டனர்.

வள்ளலார் சிறுவயதில் இருக்கும்போது தனனியாக பாடல்களை கற்றுத்தர ஆசிரியல் இல்லை. ஆனால் இறையருளால் உள்ளொளி பெருக கற்றார். தனக்கு இறைவன் குருவாக இருந்த சிறப்பை சுட்டிக்காட்டும் வகையில்,

"கற்றது நின்விடத்தே கேட்டது நின்னடத்தே
கண்டது நின்னிடத்தே உட்கொண்டது நின்னிடத்தே
பெற்றது நின்னிடத்தே இன்புற்றது நின்னடத்தே

பெரியதவம் புரிந்தேன் என பெற்றி அதியமே ''[8] என்று வள்ளலார் கூறுகின்றார். இராமலிங்கர் இயல்பாகவே இறைவன் பால் அளவற்ற ஈடுபாடு கொண்டவராக இருந்தார்.

அடிகள் தமது பன்னிரண்டாம் அகவை

முதல்முறையாக ஞானவாழ்க்கைத் தொடங்கினார் என்று குறிப்பிடுகின்றார்.

இராமலிங்கர் ஒருமுறை திருவெற்றியூரிலிருந்து காலங்கடந்து வீடு திரும்பினார். வீட்டுத்திண்ணையில் பசியோடு படுத்திருந்தார். அப்போது அவருடைய அண்ணீயார் உருவில் வடிவிடையம்மையார் தோன்றி அமுதளித்துப் பசியை போக்கினார். சிறிது நேரங்கழித்து அண்ணியாரே வந்த உணவுண்ண அழைத்தபோது, உண்மைவிளங்கியது இதனை அவர்,

''இருள் இரமில் ஒரு மூலைத் திண்ணையில் நான் பசித்தே

இளைப்புடனே படுத்திருக்க எனைத் தேடி வந்தே ''[9]

என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இராமலிங்கர் தம் தந்தையாருடனும் தாயாருடனும் சிதம்பரதரிசனம் செய்ய அவர் மீண்டும் சிதம்பரம் புறப்பட்டார்.

''அப்போது இரையில் இல்லாமையால் சிதம்பர சுவாமிகள், சடைச்சுவாமிகள், வீராச்சாமி, நாய்க்கர் தொழுவூர், வேலாயுத முதலியார் முதலிய அன்பர்களுடன் வண்டிப் பாதையாய்ப் புறப்பட்டு இடையிலுள்ள புண்ணிய இடங்கள் சில தரிசனஞ் செய்து கொண்டு புதுச் சேரியிலுள்ள விசுவநாதய்யர் முதலிய பல அரியபெரிய செய்திகளை அறிந்தனர். சீனிவாச தாச்சாரியார் என்பவர், தருமலிங்க செட்டி என்பவருக்குப் பாடஞ்சொல்லிக் கொண்டிருந்தபோது அவர்கள் விருப்பத்தின்படி பலக் கருத்துக்களை விளக்கினர். புதுவையில் சிலநாள் தங்கியபின் சிதம்பரஞ் சென்றடைந்தனர். ''[10] என்று ச.மு. கந்தசாமிபிள்ளை கூறுகின்றார்.

சிதம்பரத்தில் தங்கியிருந்த காலத்தில் தான் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலருக்கும் இராமலிங்கருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதிவர்ணாகிரம் பூண்ட கேட்க நல்லூர் சுந்தரசுவாமிகள் இவரைச் சந்தித்து

''மூன்று நாட்கள் இரவும் பகலும் ஞான விஷயமாய் உரையாடியதில் சுந்தரசுவாமிகள் தோல்வியடைந்து மனஞ் சோர்ந்ததைக் கண்டு வள்ளலார் உபசரித்து விட்டு மறுபடியும் தோல்வியடைந்தோர் பக்கமாக மாறிவாத நிகழ்ச்சிச் சுந்தர சுவாமிகளைக் களிப்பித்தனர் '' [11] என்று கூறுகின்றார் கந்தசாமிபிள்ளை. இச்சுந்தரசுவாமிகள் மனோன்மணியம் என்ற நூலின் ஆசிரியரும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் குருநாதரும் ஆவார் என்று தெரியவருகிறது.

முருகன் திருவருளால் இராமலிங்கருக்கு அன்பு, இரக்கம், அமைதி, நடுநிலை, உண்மையறிவு முதலிய பண்புகள் வாய்ந்தன. இவை உள்ளத்தில் பதிந்து வளரதாமும் வளர்ந்து வந்தார் இராமலிங்கர் முருக உபாசனை முதிரஞானமும் முதிர்ந்து வந்தது. இவர்,

''தன்னை மறந்து தெளிவும் பக்திநிலையையும் அடைந்தார் '' என்பது தெரிய வருகிறது. வள்ளலார் இளமையிலே இறைவன்பால் அன்பு கொண்டிருந்தார். இருந்தாலும் அவர் உலகத்து இன்ப துன்பங்களிலும் மயக்கங்களிலம் மாயைகளிலும் அலைந்து திரிகின்ற கோடானகோடி ஆன்மாக்களை சார்பாளராக நின்று உள்ளம் கசிந்துருகி இறைவனை வேண்டுகின்றார். எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலில்,

''இன்புடையார்நின் அன்பர் எல்லாம் நின்சீர்
இசைக்கின்றார் நான் ஒருவன் ஏழை இங்கே '' [12] என்று காணப்படுகின்றது.

ஆன்மா எத்தகைய நிலையில் தனது இலக்கினை அடைகின்ற தென்பதை,

நினைந்து நினைந் துணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்ததன்பே
நிறைந்து நிறைந்துந் றெழுங்கண் கண்ணீர் அதனாலுடம்பு என்ற பாடல் விளக்குகின்றது.

## இல்லறவாழ்க்கை

உலகப் பற்றற்று ஓய்வின்றி முழுமுதல் பொருளில் இராமலிங்கர் நாட்டங்கொண்டிருந்ததைக் கண்ட அவருடைய அண்ணனும் உறவினரும் அவரை உலகியல் வாழ்வில் பற்றுக் கொள்ளச் செய்ய விரும்பினர். அதற்கு ஒரு வழியாக அவருக்குத் திருமணம் செய்து வைக்க முயன்றனர். இயல்பாகவே இவ்வாழ்வில் பற்றின்றி துறவறா ஈடுபாடு கொண்ட இராமலிங்கம் திருமணத்திற்கு உடன்படவில்லை. ஆனால் அவரது உற்றாரும் உறவினரும் அவர் திருமணம் செய்து கொண்டு உலகியல் வாழ்க்கையை நடத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்தினர். இறுதியில் 1850 ஆம் ஆண்டில் இருபத்தெழு வயதான தநிலையில் அவர் உடன்பட அவருடைய அக்கா உண்ணாமலையம்மையாரின் மகள் தமைமாளைத் திருமணம் செய்த வைத்தார்.

பெரியவர்கள் எண்ணியதைப்போல அவர் இல்லறவாழ்க்கையில் தன்னை மறக்கவில்லை திருவாசகம் படித்துக் காலத்தைப் போக்கினாராம். எது அவருக்குச் சோதனையாக அமைந்தது அதனை வென்று அவர் அதனை சாதனையாக்கிக் கொண்டார். இதனை இராமலிங்கர்,

உலகத்துள் மேதாவிகளின் சரித்திரங்களை ஆராய்ந்து அறிவார்க்கு இவ்வுண்மை புலனாகும். மேதாவிகள் அவ்வக்காலத்திய உலக நடைப்போக்குக்குட்பட்டவராய்ச் செல்லாது தாம் அரிதிற்கொண்ட கொள்கையை நிறைவுறுத்துவதே ஆய்வுரையமைந்த பெருந்தொழிற் என்று துணிந்து ஒழுகுவர். சாதாரண மக்கள் கொள்ளும் இன்பத்துன்பங்களிலே அவர்கள் மயங்காமல் பேரறிவு வண்ணமாய்க் காலங்கடந்தவர்களாய்த் திகழ்வர். அத்தகைய மேதாவிகளைச் சிற்றின்ப ஆன்மாக்கள் தம் அறிவாற்றல் கொண்டு அளக்க ஆரம்பித்து எள்ளவும் முடியாத காரியமாகும் [13] என்று கூறுகின்றனர்.

தம் முத்தியாறு ஆம் வயது வரை சென்னையில் வாழ்ந்த இராமலிங்கருக்குச் சென்னை நகரச்சூழல் தன் ஞானவாழ்வுக்கு ஏற்ற நல்ல என்பதை உணர்ந்து, சென்னையிலிருந்து ஒதுங்கி வாழ நாட்டங் கொண்டார். இதற்கு அகச் சான்றாகப் பின்வரும் பாடலில்,

''தேட்டிலே மிகுந்த சென்னையிலிருந்தால்
சிறுகுறு மென்றுளம் பயந்தே ''

என்று அமைந்திருக்கின்றதை காணமுடிகின்றது.

வள்ளலாரின் ஆன்மீக வாழ்க்கையில் பல அற்புதங்க் நிகழ்ந்ததை அவருடைய அன்பர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியை குறிப்பிடலாம்.

ஓரன்பர் இரும்பினைப் பொன்னர்க்கும் முயற்சியில் தன்னிடம் இருக்கும் அனைத்து செல்வத்தை எல்லாம் தொலைத்துக் கொண்டிருந்தார் அவர் வள்ளலாரை கண்டு இரும்பினைப் பொன்னாகிக் காட்டும்படி வேண்டினார். அடிகளாரும் தனது சித்தின் மூலம் இரும்பினைப் பொன்னாக்கிக் காட்டி இது பயனற்ற பொருள் என்று கூறி பொன்னைக் கிணற்றில் போட்டு விட்டாராம். இதனைப் பண்டித ஆசலாம்பிகை அம்மையார்,

''செம்பினை இரும்பை ஈயமாமிவை செழும் பொனாக்கும்
வம்பியில் வாதம் கற்கும் வகையினர்க்கெளியதாகப் '' [15]

எனத் தொடங்கும்பாடலில் கூறுகின்றனர். இப்பாடலில் வள்ளலாரின் அற்புத நிகழ்ச்சியை சுட்டிக்காண்பிப்பதாக அமைந்திருக்கிறது.

## தமிழ்த்தொண்டு

தொழுவூர் வேலாயுத முதலியார் இவரது மாணவரானார். அவரோடு சேர்ந்து வேறுசிலரும் அவரிடம் நூல்களைக் கற்றுக் கொடுத்ததோடு அமையாமல்

ஒழிலிலொழுக்கம், தொண்ட மண்டலசதகம், சின்மயதீபிகை ஆகிய மூன்று நூற்களையும் சரிபார்த்துப் பதிப்பித்திருந்தனர்.

அருமையான நூற்பவை பதிப்பிப்பதோடு உரைநடைநூற்கள் போதுமான அளவில் இல்லாக்குறையைத் தீர்க்கும் வகையில் அவரே மனுமுறை கண்டவாசகம் என்னும் நூலையும் படைத்தந்திருந்தார்.

இராமலிங்கர் ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் மக்களோடு கொண்டிருந்த தொடர்பை விட்டுவிடவில்லை. இது இவருடைய தனிச்சிறப்பு எங்குச் சென்றாலும் தனது அன்பருடன் செல்வாராம் அவர்களது அறிவுக்கும் உணர்வுக்கும் அவருடைய கருத்துக்கள் அரிய உணவாக அமைந்தன.

## துறவு

ஆடம்பரமிகுந்த சென்னை வாழ்க்கை ஆன்மீக வளர்ச்சிக்கு ஏற்றதில்லை என்ற வண்ணம் அடியருக்குத் தோன்றியது. வெண்ணிற ஆடையை அணிந்து ஊர் ஊராக சென்று ஆன்மீகத்தை வளர்த்தார். பல திருத்தலங்களுக்கு சென்று தெய்வங்களை வழிபட்டு பாடல்களை இயற்றியுள்ளார்.

## ஆன்மீகச் சாதனை

சாகாதவனே சன்மார்க்கி என்ற கருத்தோடு சன்மார்க்க நெறியை உலகிற்கு அளித்த வள்ளலார் அந்நிலையை பெறும் முயற்சியில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்தார் . எண்ணத்தில் தண்ணியராக விளங்கிய அவர் பல வகைகளில் இறைவனுடைய அருளை பெற முயன்றார். அவரது எண்ணங்கள் எல்லாம் நிறைவேறிக் கொண்டிருந்தன. இதனை அவர்,

''உயத்திடம் அறியா திறந்தவர் தமை இவ்

வுலகிலே உயிர்பெற்று மீட்டும் '' [16] என்று வருகின்ற பாடலில் கூறுவதாக

வள்ளலார் ஓர் அறிமுகம் என்ற நூலில் இடம் பெற்றிருக்கின்றது.

வள்ளலாரின் அருளுரைகள் மிகத் தீவிரமாக வெளிவரத் தொடங்கின. தன்னைச்சுற்றி வந்தவர்களுக்கு அழியாத உண்மையை கூறுவதில் மிகவும் ஆர்வத்துடன் இருந்தார். உலகியில் கொண்ட பற்றினை விடாமல் அடிகளாரை நாடிவந்த மக்களால் அவர் எதிர்பார்த்த அளவு ஆன்மீக வாழ்க்கையை நடத்த முடியவில்லை. இந்நிலை வள்ளலாரைச் சேர்த்து விடச் செய்தாலும் அவர் பல ஆன்மீகச் சாதனைகளைச் செய்பவராக விரைந்து வளர்ந்து வந்திருந்தார்.

வள்ளலார் யோக முறையைப் பின்பற்றியதால் அவருடைய உடல் பொன்னுடலாகவும் ஒளியுடலாகவும் மாறியதை அவரோடு இருந்தவர்கள் குறித்திருக்கின்றனர். நிழற்படத்தில் கூட அவருடைய தோற்றம் பதியவில்லை என்று கூறுகின்றனர்.

1874 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ஆம் நாள் வள்ளலார் கருங்குழியிலுள்ள சித்திவிளாக மாளிகையில் தனியறையில் திருக்காப்பிட்டுக் கொண்டார். அந்த அறையை திறந்துபார்க்க கூடாதென்பது அடிகளின் விருப்பம் ஆனால் பின்னால் அந்த அரையைத் திறந்து பார்த்தபொழுது அறை வெறுமையாக இருப்பதைக் கண்டனர். வள்ளலார் சித்தி பெற்றதாக உலகம் உணர்ந்தது.

ம.பொ. சிவஞானம் என்பவர்,

“வள்ளலாரின் பெருமை, அவர் ஊனுடலைஞான ஒளியுடலாக மாற்றிக் கொண்டதிலேயும் இருக்கிறது என்பதில் ஐயமில்லை ஆனால் அதற்காக மட்டுமே நாம் அவரை வழிபடுவதில்லை. ஒழுக்க சீடராக உத்தமவாசியாக, பிறர் பட்டினிதீர்க்கும் வள்ளலாராக, உயிர்கள்பால் இரக்கம் கொண்ட கருணையாளராக கவிதை மழைபொழியும் கார்மேகமாக வாழ்ந்தார். அவற்றிற்காகவும் சேர்த்துதான் நாம் வள்ளலாரை வழிபடுகிறோம் அதனால் அவரது மறைவை நம்பாதவர்களும் அவரை

மனித குலத்தின் மாணிக்கமாக மதித்து வழிபட வேண்டும். அப்படியே வழிபட்டும் வருகிறார்கள் அந்த நம்பிக்கை என்னென்றும் நிலைத்திருப்பதாக ” [17] என்று கூறியிருக்கும் கருத்தை இங்கு குறிப்பிடலாம்.

வள்ளலாரின் ஆன்மீக வாழ்க்கையையும் அவர் வழங்கிய தத்துவக்கோட்பாடுகளையும் உணர்ந்து கொள்வது வையத்துள் வாழ்வாங்கு வாழ்த்துணை செய்கின்றது.

## உலகியல் சாதனை

வள்ளலாரின் திருவருட்பா அவரது உள்ளக்கண்ணாடியாகத் திகழ்கின்றது. அதில் அவரது சாதனைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. வள்ளலார் ஒருவரிடம் அமர்ந்து முறைப்படி நீண்ட காலம் பாடம் கேட்கவில்லை. ஆனால் தனித்திருந்து நிறையப்படித்திருக்கின்றார். அவர் எப்படி படித்த பொருளோடு ஒன்றிக்கலந்து உணர்ந்து படித்தாரென்பதற்கு திருவாசகத்தை அவர் எப்படி படித்தாரென்று கூறுகின்ற கீழ்க்கண்ட திருவருட்பா பாடல் சான்றாக இருக்கிறது.

“வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே ” [18]

எனத்தொடங்கும் பாடலை வள்ளலார் கூறியிருக்கின்றார். அவர் தன்னைச் சார்ந்தவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தார். தத்துவ ஐயங்களைத் தீர்க்கும் ஞான சிரியராகத் திகழ்ந்தார். பழமையானவற்றைப் புதுப்பித்துக்கொடுத்தார். உரையாசிரியராக விளங்கினார். நூற்களை எழுதி நூலாசிரியராக உயர்ந்தார். இவற்றையெல்லாம் அவர் சாதித்தார் என்பதை எண்ணிப்பார்த்தால் அறிவுக்கு அப்பாற்பட்ட ஓர் ஆற்றல் இருப்பதும் அது வள்ளலாரிடம் வெளிப்பட்டதும் விளங்குகின்றது.

## தொகுப்புரை

வள்ளலாரின் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களும் வள்ளலாரால் நடத்தப்பெற்ற அற்புதங்களும் மற்றவர்களுக்கு பெருஞ்சாதனைகளைத் தோன்றின. அவரின் சாதனைகள் ஆன்மீகத் துறையில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. அவர் காலத்திற்கு முன்னால் ஆன்மீக ஞானிகள் விரும்பியவரை அவர் நடத்தி காட்டியிருக்கின்றார். அடிகளார் ஓர் சிறந்த ஆன்மீக வாழ்க்கை நடத்தியவர் என்பதை இக்கட்டுரை எடுத்தியம்பியுள்ளது.

# அடிக்குறிப்புக்கள்

1. மு. வரதராசனார், திருக்குறள், எண் : 265
2. திருவருட்பா, ப. 1152, பா.3.
3. மு. வரதராசனார், திருக்குறள், எண் : 60.
4. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா, ப. 1153, பா. 18.
5. மேலது, பா. 4133, ப. 769.
6. மேலது, பா. 453, ப. 87.
7. ச.மு. கந்தசாமிப்பிள்ளை, பிரபந்தத்திரட்டு, ப.5.
8. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா 3044.
9. மேலது, 4137.
10. ச.மு. கந்தசாமிபிள்ளை பிரபந்தத்திரட்டு, ப.26.
11. மேலது., ப.27.
12. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா பா.603.
13. மேலவர்., சரித்திரக்குறிப்புக்கள், ப.9.
14. மேலவர்., திருவருட்பா, பா. 3467
15. மேலவர்., சரிதம், ப.30.
16. குருசாமி. ம.பா. வள்ளலார் ஓர் அறிமுகம், ப.25.
17. ம.பொ. சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப.450.
18. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா, 3263.

*இயல் மூன்று*

# சமுதாயம்

*இயல் மூன்று*

# சமுதாயம்

## முன்னுரை

பண்டைக்காலத் தமிழர்கள் மக்களிடையே ஒற்றுமையுணர்வை ஏற்படுத்தும் வகையிலும், ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டும் என்ற நியதியின் அடிப்படையிலும் சமுதாயத்தை உருவாக்கினர். அச்சமுதாயத்தில் காணப்படும் வறுமை, பசி, சாதி முறையில் சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தி உலக மக்கள் சிறந்து விளங்கப் பல நெறிமுறைகளை உருவாக்கியுள்ளார். இதனைப் பற்றிய செய்திகளை இவ்வியல் தருகின்றது.

## சமுதாயம் - விளக்கம்

ஒரு குழுவாகக்கூட அல்லது ஒருகூட்டமாகச் சேர்ந்து வாழும் தொகுதியே சமுதாயம் எனப்படும். மக்கள் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்பச் சமுதாய மாற்றங்களும் நிகழும். ஒரு குறிப்பிட்ட காலச் சமுதாயச் சூழலை அறிந்து கொள்ள அக்காலத்தில் எழுந்த இலக்கியங்கள் பெருந்துணையாக அமைந்துள்ளன.

மக்கள் வாழ்க்கையைப் பிரிதிபலிக்கும் கண்ணாடி இலக்கியம் எனில், அதுவே சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியும் ஆகும். வரலாற்றுக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்க், பிறநாட்டார் குறிப்புக்கள் ஆகியவையும் சமுதாயத்தை அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளாக அமைகின்றன. சமுதாயம் என்னும் வடமொழிச் சொல்லிற்குத் தமிழில் ஆறுவகையான பொருள்கள் வழங்கப்படுகின்றன.

''மக்களின் திரள் ; பொருளின் நிலை கோயில் அதிகாரிகளின் கூட்டம், பொதுவானது, பொதுவாகவேனும் அவ்வரவர்க்குரிய பங்குடன் பரிந்தேனும்

அனுபவிக்கப்படும் ஊர்ப்பொதுச் சொத்து, உடன்படிக்கை என்பனவவே அவை "[1] என்று தமிழிலக்கியங்கள் கூறுகிறது.

"கூடிச் செயல்படுவதில் நாட்டத்தையும் பொதுவான நோக்கங்களையும் பற்றார்வத்தையும் உடையதாய் உள்ள சமூகமோ, நாட்டினமோ பரந்துபட்ட மக்கள் கூட்டமோ கூட்டுத்திரளாகும் என்னும் பொருளே பெருவழக்கில் இன்று உள்ளது எனலாம் "[2] என்பர் கா. மீனாட்சி சுந்தரம் மேலும் இவர்,

"ஒரு பொதுவான நோக்கத்தோடு செய்யப்படும் மனிதருடைய பொதுவான செயல்களினால் முறையாக விளையும் பயனைத்துய்ப்பதற்குரிய அமைப்பாகச் சமுதாயம் விளங்கி வருகிறது. அப்பொழுது அதன் நோக்கம் வாழ்க்கையின் பயன் மதிப்புகளுள் ஒன்றையோ, பலவற்றையோ அடைவதற்குரிய முயற்சியாகவும், இருக்கலாம். ஒத்த நோக்கமும், பயன்மதிப்பை அடைவதற்கு ஒன்றாகச் சேர்ந்து மக்கள் பணிபுரிவதுமே சமுதாயத்தை உருவாக்குகிறது எனக் கருதுவது தவறாகாது "[3] என்பர்.

மேற்கூறியவற்றால் சமுதாயம் என்பது மக்கள் கூட்டம் சேர்ந்த அமைப்பாகவும் மக்கள் வாழ்க்கைக்கு சமுதாய அமைப்பு பெருந்துணைபுரிகிறது என்பது விளங்கும்.

சமுதாயம் என்றால் என்ன என்பதற்கு பலரும் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர்.

"நீதி நூல்கள் கூறும் ஒழுக்கமும் ஆட்சி இலக்கணமும் அனைத்தையும் கொண்டு செலுத்தும் இடம் சமுதாயம் ஆகும் "[4] எனத் திருக்குறள் சிந்தனைகள் என்ற நூல் கூறுகின்றது.

"ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடன் பண்பட்ட நிலையில் கொண்டிருக்கின்ற உறவு முறைத் தொடர்புகளைத்தான் சமுதாயம் என ஒரே பெயரால் அழைக்கிறோம் "[5]

என்று டாக்டர். ப. கோபாலன் குறிப்பிடுகிறார். இதனால் பலர் ஒருங்கிணைந்து பண்பாட்டுடன் கூடி வாழ்வதே சமுதாயம் என்று அறிய முடிகிறது.

''பண்பாடு தனிமனிதனைக் கூட்டு வாழ்க்கைப் பற்றிச் சொல்லுகிறது என்றும் தனக்கென வாழாப் பண்பாடே முதன் முதலில் மனித சமுதாயத்தை உருவாக்குகிறது''[6] என்று அ.மு. பரசிவானந்தம் குறிப்பிடுகிறார்.

பாண்டியன் இளம் பெருவழுதி,

''தமக்கென முயலா நோன்றாட்

பிறர்க்கென முயலுந ருண்மை யானே ''

என்ற புறப்பாடலில் இவரின் தொண்டு மனப்பான்மையே சமுதாயம் நிலை பெற்றிருக்கக்காரணம் ஆகின்றது என்று கூறுகின்றார்.

## வறுமைத்துயர்

நமது சமுதாயத்தில் வறுமை நெடுங்காலமாக ஒரு நோயைப்போல இருந்துவருகின்றது. வறுமைத்துன்பமும் இயற்கையான, செயற்கையான இருவகைக் காரணங்களால் தோன்றுகிறது. வான்மழை பொய்ப்பதாலோ அளவு கடந்து பருவம் மாறி மழை பொழிவதாலோ வறுமைத்துன்பம் ஏற்படுகின்றது. இந்தியா போன்ற வேளாண்மை நாட்டில் மழைவளம் குன்றுகின்ற போதெல்லாம் உயிரினங்கள் பெருந்துயருக்கு உள்ளாவதனைக் காண்கின்றோம்.

நமது சமுதாய பொருளாதார அரசியல் அமைப்பு முறைகளாலும் வறுமை வளர்கின்றது. சமுதாயத்தில் இருக்கின்ற மக்களைச் சொத்துடையவர்கள் சொத்து இல்லாதவர்கள் உயர்ந்த ஊதியம் கிடைக்கும் வேலைகளில் என்று பிரிப்பர். இருப்பவர்கள் வேலையில்லாதவர்கள் எதையும் செய்து எளிதாகப் பணம்பெறும் ஆற்றல் பெற்றவர்கள் ஆற்றல் அற்றவர்கள் என்றும் பிரிப்பர். அரசியல் அதிகாரம் உள்ளவர்கள் ஆட்பட்டுக்

கிடக்கின்ற மற்றவர்களைச் செல்வாக்கும் சொல்வாக்கும் பெற்றவர்கள் வயிற்றுக்குச் சோறின்றி வாயில்லாப் பூச்சிகளாக வாழ்பவர்கள் என்றும் கூறலாம். இப்பிரிவுகள் எல்லாம் சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன.

உழைப்பை, உடல் உழைப்பை, மூளை உழைப்பு என்று பிரித்து உடல் உழைப்புக்கு பிழைத்திருக்க கூலியும் மூளை உழைப்பிற்கு உண்டு களித்து வாழ்ந்திருக்கக் கூலியும் கொடுகின்றனர். நமது நாட்டில் தோன்றிய நான்கு வர்ணப்பாகுபாடு இத்தகைய பிரிவு முறைக்கு ஆக்கம் அளித்து சூத்திரர்களுக்கு உடல் உழைப்பை சார்ந்திருப்பவர்களே வறுமைத்துன்பத்தில் வாடுகின்றனர்.

இராமலிங்கர் உயிரரினங்கள் அடைகின்ற வறுமைத்துயரை தன்னுள்ளத்தில் பொங்கி வருகின்ற கருணையின் மூலம் தன் துயராக உணர்ந்து கசிந்துருகின்றார். இதனை அவரது பாடலில்,

''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன பசியினால் இளைத்தே
வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன் '' [7] தெளிவாகக் காணலாம்.

வள்ளலாருக்கு வறுமைத் துன்பம் நேரடியாகத் தெரியும். அவரது குடும்பம் வறுமையில் வாடியது. அண்ணனின் குறைந்த வருவாயில் வாழ்ந்த குடும்பத்தில் வளம் இருந்திருக்க வழியில்லை. வள்ளலார் வாழ்ந்த காலத்தில் அவர் பசியில் வாழ்ந்திருக்கிறார் இருப்பினும் அவர் யாரிடமும் எந்தப் பொருளையும் கேட்டது இல்லை, மற்ற மக்கள் கொடுத்த பொழுது வாங்க விருப்பமில்லாதிருந்தார். தன்னைத்தான் வருந்திக் கொண்டு ஒரு நாளைக்கு இரு வேளை உணவு, ஒரு வேளை உணவு என்று குறைத்துக் கொண்டிருந்தார்.

வள்ளலாரிடம் தொடர்பு கொண்ட மக்கள் பெரும்பாலும் வாழ்க்கையின் கீழ்மட்ட நிலையில் இருந்தனர். வள்ளலார் உலகியல் வாழ்க்கையில் இரக்கங்கொண்டவர் என்பதை பின்வரும் பாடலில் அவர்,

''பரைதத்தனி வெளியில் நடம் புரிந்தருளும்

பரமனே ! அரும்பெரும் பொருளே !

தரைத்தலத்து இயன்ற வாழ்க்கையில் வறுமைச்

சங்கடப் பாவியால் வருந்தி ''[8] என்று கூறுகின்றார்.

## வறுமை தோன்றக்காரணம்

செல்வந்தர்கள் பிறருக்குக் கொடுக்காது சமுதாயத்தில் வறுமையை உண்டாக்குகின்றனர். இக்கருத்தையே வள்ளலார் பின்வரும் பாடலில்,

''உடுத்திலேம் சிறிது உண்டிலேம் என வந்து

ஓதிய வறிநருக்கு ஏதும்

கொடுத்திலேன் கொடுக்கும் குறிப்பிலேன் ''[9] என்று கூறுகின்றார்.

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் பாரத நாடு ஆங்கிலேயரின் ஆட்சியில் பாழ்பட்டும் கிடந்தது. அவர்கள் அடித்த வாணிகக் கொள்ளைக்கு அளவே இல்லை. இந்தியாவிலிருக்கும் வணிகர்களும் செல்வர்களும் பொருளை நல்ல முறையில் செலவிடாதிருப்பதால் வறுமைத்துன்பம் ஏற்படுகின்றது. மிகுதியாக கடன்பட்டவர்கள் பொருளை இருப்பதையும் இழந்து மீள முடியாமல் துன்பப்படுவதைக் காணமுடிகின்றது. வட்டியைப் பெருக்குபவன் நிலையில்,

''வட்டியைப் பெருக்கிக் கொட்டியே ஏழை

மனக்கைவர் கருத்தினேன் ஓட்டைச்

சட்டியே எனினும் பிளர்கொளத் தரியேன் ''[10]

என்று இராமலிங்கர் கூறுகின்றார்.

அன்றைய சமநிலையைப் பற்றி ம. பொ. சிவஞானம்,

''வள்ளலார் காலத்திற்கு முன்பிருந்த தமிழகத்தில் வறுமைக் கொடுமைக்கு வாழ்ந்து வந்திருக்கிறது. ஆயினும் வாழ்த்துக் கூறும் மடமை வாழவில்லை. வள்ளலார் காலத்தில் வறுமை, சமுதாயம், பெற்ற சாபமாகக் கருதப்பெற்றது. பட்டினி பாவத்தின் பரிசாகவும் பட்டினிகிடப்பே, பாவத்தின் சின்னமாகவும், பாவியாகவும் கருதும் இழிநிலை இருந்தது. பட்டினி கிடக்கும் பாவிக்கு உணவளிப்பவனும் பாவத்தில் பங்கு பெறுகிறான் என்று பயமுறுத்தப்பட்டது. இக்கொடுமை கண்டு உள்ளம் முறிய, வள்ளலார் இதனை நினைத்திருக்கும் போது உள்ளம் எரிகின்றது. உடம்பும் எரிக்கிறது, என்று கூறினார். '' [11] என்று குறிப்பிடுகின்றார்.

ஒருவர் வறுமையில் வாடுவதை அவரது ஊழ்வினைப்பயன் என்று கருதி, அவருக்கு உதவாமல் ஒதுங்கியிருப்பதை வள்ளலார் வன்மையாகக் கண்டித்தார் மண்ணுலகவாழ்வில் சிலர் தங்களது சோம்பேறித்தனம், வேண்டாத பழக்கங்கள், மற்றவர்களால் ஏமாற்றப்பட்டவர்களும் சுரண்டப்பட்டவர்களும் வறுமையில் வாடுகின்ற நிலையும் இருக்கின்றது. இந்நிலையை நீக்கினால் வறுமைத் துன்பம் நீங்கும்.

சமுதாயத்தில் மனிதர்களோடு மனிதராக வாழ்ந்து, தான் மேம்பட்டு உயர்கின்ற வேளையில் மற்றவர்களும் உயர்ந்தோங்கி வழிகாட்டி கைகொடுத்துத் தொண்டு செய்கின்ற வாழ்க்கையைத்தான் உயர்வானதாகக் கருதுகின்ற நிலை வளர்ந்திருக்கின்றது. இதனை மகாகவி பாரதியார் மிகவும் எளிதாக இப்பாடலில்,

''உற்றார் நாட்டவர் ஊரார் - இவருக்கு
உண்மைகள் கூறி இனியன செய்தல்
நற்றவனம் ஆவது காண்போம் - இதில்
நல்ல பெருந்தவம் யாதொன்றும் இல்லை '' [12]

என்று கூறுகின்றார்.

வள்ளலார் சமுதாயத்தில் ஒரு புண்ணிய மூர்த்தியாக ஊருக்கு உழைக்கும் நல்ல தொண்டனாகத் திகழ்ந்தார். வள்ளலாருக்கு முன்னால் எத்தனையோ ஞானிகள் தோன்றிச் சிறந்த தத்துவங்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்களின் மரபு வழியில் வந்ததாகத் தன்னைத்தானே கூறிக்கொள்கின்ற வள்ளலாரின் இதயத்தில் மெய்ஞ்ஞானம் மட்டும் பொங்கவில்லை. இரக்கம் நிரப்பி வழிந்தது. இதனை,

''வாழையடி வாழைஎன வந்த திருக்கூட்ட
மரபினில்யான் ஒருவன் அன்றோ வகை அறியேன் இந்த
ஏழைபடும் பாடுகைக்குந் திருவுளச்சம் மதமோ
இது தகுமோ இது முறையோ இது தருமந்தானோ'' [13] என்ற வள்ளலாரின் வாக்குத் தெளிவாக காட்டுவதாக ம.பா. குருசாமி கூறுகின்றார்.

## பசிநோய்க்கு தீர்வு

மனிதர்கள் மிருகங்களின் நிலைக்கு இரங்கச் செய்கின்ற பசியின் கொடுமை மிகப்பெரிய கொடுமையாகும். இதனை மு. வரதராசனார்,

''பழைய பாடல்களில் வறுமையால் வாடியவர்களின் காட்சி ஒரு புறமும் அவர்களின் வறுமைத்தீர்க்கவல்ல செல்வர்களின் வளமான வாழ்வின் காட்சி மற்றொரு புறமும் அமைந்திருக்கும். வறுமையின் கொடுமையைத் தெளிவாக எடுதததுக்கூறியும் இரந்து வாழும் பொல்லாத நிலையைக் கடிந்து கூறியும் திருவள்ளுவர் புரட்சி செய்துள்ளார்'' [14] என்று கூறுகின்றார்.

அழிபசிக்கெதிரான புரட்சிக் கருத்துக்களை உணர்ச்சியுடன் வெளியிடுகின்ற பலகுறள்மணிகள் இருக்கின்றன. இன்மையை ஒரு பாவியாகக் கருதுகின்ற வள்ளுவர் அதன் வெங்கொடுமையை அதற்குப்பலியான ஒருவனே கூறுவதைப்போல,

''இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு'' [15] என்று கூறுகின்றார்.

இதற்கு மாற்றாகச் செல்வர்கள் ஈந்து இசைபட வாழ்கின்ற நிலை வேண்டுமென எண்ணிய வள்ளுவர், வறியார்க்கொன்று ஈவதே ஈகை என வலியுறுத்தி, பசிப்பிணியைத் தீர்க்கும் வழிமுறையாக,

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை '' [16] என்று கூறுகின்றார்.

சமுதாயத்தில் அற்றவர்களுக்கு அளிக்கின்ற அறம் போற்றப்பட்ட போதிலும் அதனைப் பின்பற்றுகின்ற மனம் எல்லாச் செல்வர்களுக்கும் காணப்படுவதில்லை. இதனால் சமுதாயத்தில் பசிப்பிணி தொடர்நோயாகத் தீராத பிணியாகக் காணப்படுகின்றது.

இடைக்காலத்தில் பிற்காலத்திலும் சமயப் பெரியோர்கள் வறுமைத் துயரில் மக்கள் படும்பாட்டை உணர்ந்தனர். இத்தகைய சூழ்நிலையை மாற்ற வள்ளலார் அழிப்பசிக்குத் தீர்வுகாணும் வழிகாண முயன்றார்.

தீராத பசியின் கொடுமையை நரகவேதனை ஏன் ? வேதனை, மரண வேதனை என்கிற மூன்று வேதனைகளம் கூடி அமைந்த வேதனையே பசி வேதனை என்கிறோம்.

''அகம்,புறம், நாடு, கீழ், மேல், பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்த காலத்தும் வேறுபடாத இன்பமே உணவினால் ஏற்படும் திருப்தி இன்பம் '' என்று வள்ளலார் கூறியுள்ளார்.

எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் வேறுபாடின்றி வாழ்ந்த வள்ளலார் தான் உணர்ந்த சமுதாய முறையை நீக்கத்தானே முயல வேண்டுமெனக் கருதினார்.

சமூகப்பிணியை வேரோடு அகற்ற இறைஞானம் மிக்க புது நெறியை பின்பற்றினார். அந்த நெறியில் மெய்ஞானத்தின் ஆழம் இருந்தது. தன்னைத்தான் அறச்

செய்கின்ற தூயபக்தி இருந்தது. மேலும் சமுதாயத்திற்குத் தான் செய்ய வேண்டிய கடமையுணர்வும் அதில் அடங்கியிருந்தது.

மனிதனுக்கு செய்கின்ற எவ்வித உதவியும் இறைவனுக்கு செய்வதாகக் கொள்ள வேண்டும். இதனை வலியுறுத்தி திருமூலர் பின்வரும் பாடலில்,

''படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக்கோயில் பகவற்கு அது ஆமோ '' [17]

என்று கூறுவதாக ம.பா. குருசாமி எடுத்துக்காட்டியுள்ளார்.

இராமலிங்கர் சமுதாய வாழ்வினை சன்மார்க்க வாழ்வாக மாற்ற எண்ணினார். இதனை,''அடிகளின் கொள்கைகளில் தலையாயது சீவகாருணையாம். சீவகாருண்யத்தை அடிகள் இருவகையால் வற்புறுத்துவர். 1. புலால் மறுத்தல் 2. அற்றார் அழிபசிதீர்த்தல் '' [18] என்று ஊரன் அடிகள் குறிப்பிடுகின்றார்.

வள்ளலாரின் ஆத்மா மகாத்துமாவாக வளர்ந்து ஒளிபெற தொடங்கியது. அவர் பசிப்பிணி மருதபுதவராக மாறிச் செயல்பட்ட நிலையில் இருந்ததை வரலாறு கூறுகின்றது.

''எவனுடைய இதயம் ஏழைகளுக்காக
இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான்
மகாத்மா என்பேன் மற்றவர்களோ துராத்
மாக்களே யாவர் '' [19]

என்று சுவாமி விவேகானந்தர் கூறியது இங்கு நினைக்கத்தக்கதாகும்.

வள்ளலாருக்கு முன்னால் அறியாமை இருளகற்றி ஞானத்தை வளர்க்க மடங்களை நிறுவிய மதத் தலைவர்கள் நமது நாட்டில் இருந்தனர். ஆனால் பசிப்பிணியைப் போக்க அறமனங்கொண்டாரின் துணையோடு சத்திய தருமச் சாலையை நிறுவி, மக்ளின் துயர்துடைக்கச் செயல்பட்ட பெருமை தற்காலத்தில் வள்ளாரையே சாரும்.

டாக்டர் டி.எம்.டி மகாதேவன்.

''அவர் மகன் கருணையின் திருவுருவமாகத் திகழ்ந்தார் '' [20]

என்று குறிப்பிடுகின்றார்.

பேரருளாளராக விளங்கிய இராமலிங்கர் பசிப்பிணியற்றதாக மனிதருலகம் விளங்க வேண்டுமென்ற பெருநோக்கில் அதன் தொடக்கமாகத் தருமச்சாலையைத் தொடங்கினார்.

''வறுமையால் வாடுவோர் இல்லாத சிறந்த சமுதாயமாக மனித சமுதாயம்
வாழ வேண்டும் என்பதே வள்ளலார்
உள்ளம் '' [21] என்று சாமி சிதம்பரனார் கூறுகின்றார்.

நாட்டிலுள்ள பசிப்பிணியைத் தீரக்க அறமனதை உடையவர்கள் அறச்சாலையை அமைத்து முயலுதல் வேண்டும்.

''வறியவர்கள் செல்வர்களை நாடிச் செல்வதை

அவர் ஏற்றுக் கொள்ளவில்லை '' [22] என்று டாக்டர் சு.ப. அண்ணாமலை குறிப்பிடுவது இங்கு சுட்டிக்காட்டதக்கது. மனிதனை இரந்து உயிர்வாழ்கின்ற இழிநிலைக்குத் தள்ளாமல் இருக்கின்றவர்கள் மனம் நெகிழ்ந்து கொடுகின்ற நிலையையே வள்ளலார் வலியுறுத்துகின்றார்.

## வள்ளலாரின் புரட்சி

வள்ளாரைப் பின்பற்றுகின்றவர்கள் தங்கள் அளவில் சன்மார்க்கர்களாக நிற்பதோடு அமையாமல் பிசப்பிணியைப் போக்கும் மருந்துவர்களாகவும மாற வேண்டும். இன்று அடிகளின் இத்தகைய சமுதாயச் சீர்த்திருத்த சமயக் கருத்துக்களைத் தமிழகம் மறந்திருக்கின்றது. இதனை மனம் நொந்து ம.பொ. சிவஞானம்,

''அவரியற்றியுள்ள பாடல்களில், சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த பாடல்கள் அவற்றிற்குரிய பொருளோடு மக்களால் இன்றளவும் போற்றப்படவில்லை. மற்றுள்ள பக்திப்பாடல்கள் மட்டுமே மக்களால் பாடப்பட்டு வருகின்றன '' [23.] என்று கூறுகின்றனர். வள்ளலாரை முழுமையாக அறிந்து பின்பற்றினால் மனித சமுதாயம் துன்பத்தை நீங்கி வாழ முடிகின்றது.

தமிழகத்தின் தவப்பயனாய்த் தோன்றிய வள்ளலார் சமுதாய நலனில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஆன்மீகத்துறையில் உச்சியை அடையத் தனித்திருந்த போதிலும், மனித குலத்தின் நன்மையை, மனத்தில் கொண்டு அவர் செய்த பொது நலத்தொண்டுகள் பலவாகும். அவருடைய எண்ணத்திலும் செயலிலும் சீர்திருத்த ஒளிமேலோங்கி இருந்தது.

சமய சமுதாய அரசியல் பொருளாதாரச் சீர்கேடுகளை முழுமையாக அறிந்திருந்த வள்ளலார் அவற்றைப் போக்கி புத்துலகம் ஒன்றைப் படைக்கும் விழைவு கொண்டிருந்தார். மனித குலத்தைப் பற்றியிருந்த சீர்கேடுகளைப் போக்க வந்த புரட்சியாளராக வள்ளலார் திகழ்ந்தார்.

தமிழ்ப்பெரியார் திரு.வி. கலியாணசுந்தரனார் ''எத்தகைய மாற்றமும் ஒரு புரட்சியால் தான் ஆகும். புரட்சியெனில் சரித்திரமாணவர்களுக்கு முன்னோர்தான் இரத்தக் களரிகள் தான் நினைவிற்கு வரும். இங்கு நான் கொள்ளும் பொருள் இரத்தக்

களரி அன்று. மாற்றம் காண வேண்டுவனவற்றின் நடுவே நின்று மெல்ல மாற்றம் காணுதலே புரட்சியெனக் கொள்ளலாம். இது அறப்புரட்சி இரத்தக்களரியின் வாயிலாக மாற்றம் கொணர்வது மறப்புரட்சியாகும். அது வேண்டுவதில்லை அத்தைகய அறப்புரட்சிக்கு அடிகோலியவர் பலராவர். அம்முறையில் மாற்றம் வரவேண்டிப் பாடியவர் நம் வள்ளலார் ஆவார். நம்முடைய இராமலிங்கர் ஒரு பெரும் புரட்சிக்காரர்''[24.] என்று கூறியிருப்பதாக வள்ளலார் ஓர் அறிமுகத்தில் இடம் பெற்றிருக்கின்றது. வள்ளலார் வாழ்க்கையை முழுமையாகக் கண்டு முழுமை பெற முயன்று முயற்சியில் வெற்றி கண்டிருக்கின்றனர். மரணமில்லாப் பெருவாழ்வை மக்களினமெல்லாம் பெற வேண்டுமென்று விரும்பிய அவர் மண்ணுலக வாழ்வில் மண்டிக் கிடந்த குறைகளைப் போக்குவதைக் கடமையாகக் கொண்ருந்தார். மனித மனத்தைப் பண்படுத்த விரும்பிய அவர் மனமென்னும் வயலில் முளைந்திருந்த களைகளை நீக்கச் சொல்லாலும் செயலாலும் பாடுபட்டிருந்தார்.

## சாதி - சமயச் சண்டைகள்

சமுதாயத்தைப் பயன்படுத்தி நெறிப்படுத்தும் நோக்கில் உலகில் சமயங்களை சான்றோர் தோற்றுவித்தார்கள். மனித குலத்தை ஒருமைப்படுத்தித் தோற்றுவிக்கப்பட்ட சமயங்கள் மனிதர்களைப் பல்வேறு சாதிகளாகவும் இனங்களாகவும் பகுத்துச் சண்டையிடச் செய்த சீர்கேட்டை வள்ளலார் கண்டார். இடைக்காலத்தில் ஏற்பட்ட குலம், கோத்திரம் என்னும் பிரிவுகள் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி, தீண்டப்படாதவர்கள் என்றும் வேறுபாடுகளும், தமிழகத்தில் பேயாட்டம் போட்டுக் கொண்டிருந்தன.

உயர்ந்த குலத்தினர் - சாதியினர் எனப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டவர்களை அடிமைகளாய் விலங்குகளாய் நடத்திய கொடுமை வளர்ந்து வந்தது. இதனைக் கண்டு காணாதவர்களாகப் படித்தவர்கள் இருந்தனர்.

சென்ற நூற்றாண்டில் நமது தாயகத்தில் சமய வேறுபாடுகளும் பிணக்குகளும் மோதல்களும் பெருகிக் கொண்டிருந்தன. இங்கிருந்த சைவ வைணவ சமண புத்த முகமதிய சமயங்களோடு புதிதாக நுழைந்த கிறித்துவ சமயமும் சேர்ந்து சமயப் போர்க்களத்தை உருவாக்கின. இறைவனுக்கு ஆயிரம் திருநாமம் வழங்கிய தோடல்லாமல் அந்தப் பெயருக்காகவோ சண்டையிட்ட நிலை சமயங்களுக்கே இழுக்கை ஏற்படுத்தியிருக்கிறது.

இறையருளால் வள்ளலார் சாதி சமயக் குறுகிய வட்டங்களிலிருந்து விடுபட்ட நிலையைப் பின்வரும் பாடலில்,

''சாதி சமயங்களிலே வீதிபல வகுத்த

சாத்திரக்குப் பைகள் எல்லாம் பாத்திரம் அன்றெனவே '' என்றும் [25]

''சாதியும் மதமும் சமயமும் பொய்யென

ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி '' [26] என்றும் கூறியிருப்பது உலகிற்கு உண்மையை உணர்த்தி வழிகாட்டவேயாகும்.

தான் காண விரும்புகின்ற அருள் வாய்ந்த அமைப்பில் சாதிசமயங்கள் என்னாகுமென்பதை,

''இருட்சாதித் தத்துவச் சாத்திரக்குப்பை

இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப்போட்டு '' [27] என்று விளக்கமாகக் கூறுகின்றார்.

இறைவனை ஒளிவடிவில் கண்ட வள்ளலார் உலகிற்குச் சர்வ சமயசமரசத்தை எடுத்துரைத்தார். எல்லாச் சமயத்தத்துவங்களின் உயிரோட்டமாக உள்ஒளியாக விளங்குவது ஒன்றென்பதை உரைத்திட்டார். சமயங்கள் பின்பற்றி புறச்சடங்குகளால் வேறுபடுகின்றன. சடங்குகள் எல்லாம் சிறுபிள்ளைகள் விளையாடப்படுகின்ற கோடுகளைப் போன்றவையாகும். மலர்களின் வண்ணங்கள் வேறுபட்டாலும் அவற்றின் இதயத்தில் ஊற்றெடுக்கும் தேன் இனிமையானதே. அது போல

சமயங்களின் சாரம் ''சத்திய'' மாக இருக்கிறது. இந்த உண்மையை வள்ளலார் உலகிற்கு வலியுறுத்துகின்றார்.

''அருகர் புத்திராதியென்பேன் அயனென்பேன்றாரா

யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ என்பேன்'' என்று எப்படி அழைத்தாலும் இறைவன் ஒருவன் தான் என்பதைக் கூறுகின்றார்.

சமயங்கள் உருவ வழிபாட்டைப் புகுத்திவிட்டன. வழிபடுகின்ற நிலையில் இருக்கும் இறைவனை மறந்து, வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ளாமலிருக்கும் மக்களுக்காக இரக்கப்பட்டார். உண்மையை உணராமலிருக்கின்ற உலக நிலைமாற வேண்டுமென்பதை,

'கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும்

கண்மூடிவழக்கம் எலாம் மண்மூடிப்போக' என்று கூறுகின்றார்.

உலகில் பல சமயக்குழுக்கள் இருக்கின்றன. இவை எல்லாம் கற்பனைக்கு ஏற்ற வகையில் கடவுளுக்கு எத்தனையோ உருவங்களைக் கற்பித்துக் கதைகள் கட்டி மக்களைத் தங்கள் பக்கம் கவரப் போட்டியிடுகின்றனர். இதனைப்பிள்ளை விளையாட்டெடன அறிவிக்கின்ற முறையில்,

''கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டிய சமயக்

கூட்டமும் அக்கூட்டத்தே கூவுகின்ற கலையும்'' [28]

என்று கூறியிருக்கின்றார்.

வள்ளலார் தமக்கு இறைவன் வேதநெறிகளை உணர்த்தியதை,

'வேத நெறி ஆகமத்தின் நெறி புராணங்கள்

வளம்புநெறி இதிகாசம் விதித்த நெறிமுழுதும்'

என்று கூறுகின்றார்.

ஆனால் உலகோர் ஆதினையறியாமல் இருப்பதனை எண்ணி மனம் கலங்குவதைக் காண முடிகின்றது.

வள்ளலார் சமயச் சடங்குகளையும், சமுதாயத்தில் மரபுவழிக் கண்மூடிப் பழக்கவழக்கங்களையும் சாடியதைக் கொண்டு வயிறு வளர்த்துக் கொண்டவர்களும் விரும்பவில்லை. வள்ளலாரை நாத்திகன் என்று பொய் கூறுபவர் அவர் பெயரை விரும்பினார்கள் மேலும் அவர்,

''மருளான பற்பல மார்க்கங்க ளெல்லாம்

வழிதுறை தெரியாமல் மண்மூடிப்போக ''

என்று கூறிச் சாடியதைக் கண்டு அந்நியர்கள் அவருக்கு எதிர்ப்பு இயக்கம் நடத்தினார்கள். புரட்சி மனம் கொண்ட வள்ளலார் எதிர்ப்பினைக் கண்டு அஞ்சவில்லை. உள்ளத்தில் உணர்ந்த உண்மைகளை இறையருளால் கண்டு கொண்ட கருத்துக்களைத் துணிச்சலோடு தொடர்ந்து எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

## பொருளை வெறுத்தல்

வள்ளலார் பற்றற்ற வாழ்க்கை நடத்தினார். மானிடர்கள் சமுதாயத்தில் கொண்டிருக்கும் பொன், பெண், மண் என்னும் மூன்று ஆசைகளையும் வெறுத்து, இளமையிலேயே வெற்றி கொண்டவராக விளங்கினார். இதனை அவர்,

''பொன்னாசையோடு புலைச்சியர் தம் பேராசை

மன்னராசை மண்ணுகின்ற மண்ணாசைப் பற்றுனத்தே '' [29] என்று பாடுகின்றார்.

சமுதாயத்தில் பொன்னையும் பொருளையும் போற்றுகின்றவர்கள் வாழ்க்கையில் உயர்ந்தவற்றைப் போற்றுவதில்லை. அப்படிப்பட்டவர்களிடம் வள்ளலாரும் துன்பப்பட்டிருக்கின்றார் போலும். தன்கு ஏற்பட்ட துயரை மனம் நொந்து பின்வரும் பாடலில்,

''பொன்னை உடையார் மிகுக்கல்விப்

பொருளை உடையார் இவர் முன்னே '' [30] என்று குறிப்பிடுகின்றார்.

அடிகளார் உலகியலை நன்கு உணர்ந்திருந்தார். சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ வேண்டும் என் மனநிலையை,

''பொருளிலே உலகம் இருப்பதா தலினால்

புரிந்து நாம் ஒருவர்பால் பல கால் '' [37] என்று வெளிப்படுத்துகின்றார்.

தன்னளவில் பொருளை எண்ணவும் அஞ்சிய வள்ளலார், சமுதாயத்தில் பொருளில்லாததினால் வாடுகின்ற மக்களை எண்ணிவாடினார். பசியினால் இளைத்தே வீடுதோறிரந்தும் பசியறாதயர்ந்த ற்றோர்கள் என்று குறிப்பிடுவதுண்டு. அப்படிப்பட்டவர்கள் வாழ வழியற்ற நிலையில் இரந்தும் உயிர்வாழ வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய சமுதாயத்தை வள்ளலார் ஏற்றுக் கொள்ளவில்லை.

சமுதாயத்தில் சிலர் தேவைக்கு மேல் மிகுதியாகச் சேர்த்து வைப்பதால் தான் பலர் வாடுகின்ற நிலை ஏற்படுகின்றது. செல்வத்தைச் சேர்க்கின்றவர்களில் பெரும்பாலோர் இரக்கமற்ற வாமுறைகளைப் பின்பற்றுவதை வள்ளலார் கண்டார். அவற்றை எல்லாம் கடுமையான சொற்களால் கண்டித்திருக்கின்றார்.

வள்ளலார் செல்வம் படைத்தவர்கள் அருள் மனம் பெற்றவர்களாக அள்ளிக் கொடுக்கும் கருணையாளர்களாக மாறினால் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்குமென்று எண்ணினார்.

வள்ளலாருக்கு நேரடியாக அரசியல் ஈடுபாடு இல்லை என்று கூறப்படுகின்றது. ஆனால் ம.பொ. சிவஞானம் கூறுவதைப்போல,

''மனிதர்கள் நடத்தும் அரசாட்சி சன்மார்க்க

நெறிவழி இயங்காவிடில், ஞானியர்நடத்தும்

அருளாட்சி சிறக்காது. அதனால் உலக அரசியலில் துன்மார்க்கத் தொலைந்து சன்மார்க்கந் தலைக்க வேண்டுமென்று விரும்பினார் இராமலிங்கர் '' [32]

அடிகளார் அடிமைப்பட்டுக் கொண்டிருந்த கேடுகளைக் கண்டு அஞ்சியதை

''நடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை

நண்ணிடா அரையரை நாளும் '' [33] என்று குறிப்பிடுகின்றார்.

## உலக முன்னேற்றம்

உலகெலாந்தழைக்கப் பொதுவினில் ஓங்கும் ஒரு தனித் தெய்வத்திடம் என்ற நம்பிக்கை கொண்ட வள்ளலார் அருள் வழியில் சென்றால் உலகம் வாழும் என்பதை உயர்த்தினார். எல்லா உயிர்களிடத்துமத் இறைவன் இருக்கின்ற தெளிவு மக்களுக்கு ஏற்பட்டுவிட்டால், இறவாப் பெருநிலையை அடைகின்ற ஆவல். தோன்றி விட்டால் தீயச் செயல்கள் குறைந்து விடுமெனக் கருதினார். அதற்கான புரட்சிக் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

## உலக வாழ்க்கை

உலகப்பொருளில் பற்றின்றி இருந்தால் வாழ்க்கை இன்பமாக அமையும். வாழ்க்கையை இன்பமாக அமைத்துக் கொள்வது மனிதர்களிடம்தான் இருக்கிறது. சினம், பொறாமை, கவலை ஆகிய உணர்ச்சிகளை மனதில் இருந்து அகற்றுவதற்கு ஒவ்வொரு தனி மனிதனும் முயற்சி எடுக்க வேண்டும். முயற்சியில் வெற்றிபெற்றால் அவன் வாழ்க்கை இன்பமாக அமையும் என்பதற்கு ஏற்ப வாழ்ந்தார்.

## முடிவுரை

ஆன்மீக சிந்தனை இருந்த சமுதாயத்தில் பல கொடுமைகளைக் கண்டு வள்ளலார் வன்மையாக எதிர்த்தார். வறுமைத்துயர் நீக்குதல் மக்களின் வகுத்த நிலை போக்குதல், வள்ளலார் சமுதாயத்தில் செய்த புரட்சி, சாதி சமய பிணக்குகளை நீக்குதல் உலக முன்னேற்றம் காணுதல், உலக வாழ்க்கையைச் சீராக அமைத்தல் போன்ற நெறிகளைப் பின்பற்றி நல்வழிப்படுத்தினார். மேற்கூறிய கருத்துக்கள் அனைத்தும் இவ்வியலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புக்கள்

1. தமிழ்லெக்சிகன், பக். 1302
2. மீனாட்சி சுந்தரம், தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் - வாழ்வியல் சமுதாயம், ப.12.
3. மேலது.,
4. தமிழ்த்துறை ஆசிரியர்கள், திருக்குறட் சிந்தனை,
   அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ப. 53.
5. ப. கோபாலன், திருவிளையாடல் புராணம் இலக்கிய மதிப்பீடு, ப.361.
6. பரமசிவானந்தம் அ.மு., சமுதாயம் பண்பாடும், ப. 22.
7. திருவருட்பா, (ஊரன் அடிகள் 1972 பதிப்பு, பா 3471.
8. திருவருட்பா, பா. 3420.
9. திருவருட்பா, பா. 3352.
10. திருவருட்பா, பா.3351.
11. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, இன்பநிலையம், சென்னை,ப. 1964
12. பாரதியார் கவிதைகள் - உயிர்பெற்ற தமிழர் பாட்டு, ப. 473
13. திருவருட்பா, பா. 3802
14. தமிழ் இலக்கிய வரலாறு, ப.72.
15. திருக்குறள், எண் : 1048
16. மேலது., எண் : 322
17. குருசாமி ம.பா.வள்ளலார் ஓர் அறிமுகம், ப.119.
18. இராமலிங்க அடிகள் வரலாறு, ப.315.
19. சுவாமி விவேகானந்தர்,நமது தாய்நாடு, ப.47.
20. Thiru Arutpa (English Renderings) forward, P.xi.
21. வடலூரார் வாய்மொழி, ப.86.
22. The life and Teaching of Sanit Ranalinger, P. 49.

23. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப.42.

24. குருசாமி ம.பா. வள்ளலார் ஓர் அறிமுகம். ப. 119

25. திருவருட்பா, பா. 5805.

26. மேலது., பா. 4075.

27. மேலது.,பா. 4654.

28. மேலது., பா. 3472.

29. மேலது., பா. 971.

30. மேலது., பா. 2750.

31. மேலது., பா. 3455.

32. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு ப. 362

33. திருவருட்பா, பா. 3474

*இயல்நான்கு*

# மானிட நேயம்

*இயல்நான்கு*

# மானிட நேயம்

## முன்னுரை

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு மானிட நேயம் வேண்டும். மனித நேய வாழ்க்கை மனிதனைவீடு பேற்று இன்பத்துக்கு அழைத்துச் சென்று இறையருளை பெற உறுதுணையாக இருக்கிறது. மக்கட் பண்புகளுள் ஒன்றாக மானிடநேயம் இடம்பெறுகின்றது. உலக மகக்ள் உய்ய வழிகாட்டும் மானிடநேயத்தை விளக்குவது இவ்வியலாகும்.

## மானிடநேயம் விளக்கம்

நல்ல மக்கட் பண்பு உடையவரே மானிட நேயத்தைப் பெற்றிருக்கின்றனர். மானிடநேயம் எனப்படவது இரக்கம், பணிவு, அன்பு, நட்பு, கருணை, ஈகை பற்று போன்றவற்றை பெற்று இருப்பதை குறிக்கும். மக்கட் பிறப்பின் தன்மையை அவர்கள் உணர்ந்தவராக இருக்கின்றனர். சிறந்த ஒழுக்கங்களைப் பெற்றுத்திகழ்பவர் மானிடநேயத்தைப் பெற்று இருக்கின்றனர். மானிட நேயத்தை உடையவர், உயிர்குடியில் பிறந்து நல்ல பண்புகளை பின்பற்றுகிறவராக இருக்கின்றனர் என்பதை வள்ளுவர்,

“நகை ஈகை இன்சொல் இகழமை இற் நான்கும்
இழுக்க இயன்றது அறம்
” [1] என்று கூறுகின்றார்.

## மக்கட்பண்பு

பிற உயிர்களிடம் கருணை காட்டி வாழ்பவர் மக்கட் பண்பை உடையவராவர். நல்ல மக்கட்பண்பை பெற்று இருப்பவர் உதவி செய்யும் மனப்பான்மையுடன் திகழ்வர். இவ்விடத்தும் எவ்வித பேதமுமின்றி ஒன்றுபட்டு வாழ வேண்டும். மக்கள் அனைவரும் சாதி, சமயம், குலம், கோத்திரம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி

தீமைகளைச் செய்து வாழாமல் நல்லவற்றை எண்ணி நன்மைகளைப் பெற்று எல்லோரையும் தம்மவராகவும் பிற உயிர்களைத் தம்முயிர்போல் எண்ணி வாழ்வதே சிறந்த மக்கள் பண்பாகும். அவர்கள் உள்ளமே இறைவன் திருநடம்புரியும் இடம் என்று இராமலிங்கர் பின்வரும் பாடலில்,

''எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்உயிர்போல் எண்ணி உள்ளே ''[2]

என்று கூறுகின்றார். இப்பாடலில் கருணை வடிவாகி எவ்வுயிரும் தம் உயிர்போல், காண்பவர் சுத்த சிவ சன்மார்க்கப் பெருநெறியில் நிற்பவர் ஆவார் என்று கூறுகின்றார்.

## ஆன்மநேய ஒருமைப்பாடு

சாதிவெறி ஒரு சமூகத்தீமை. இன்று சாதி வெறி நாட்டில் தலைவிரித்து ஆடுகிறது. சாதி என்ற சொல்லோ தமிழ்ச்சொல் அல்ல. பிறப்பில் வேறுபடும் பொருள் கலையே சாதி எனலாம். பறவைகள், விலங்குகள் ஊர்வன ஒவ்வொன்றும் ஒரு சாதி. இம்முறை மாறி தொழில் காரணமாக நான்கு பிரிவாக இப்போது கணக்கற்ற பிரிவுகள் ஏற்பட்டதை மக்கள் தங்களுக்குள் இருக்கும் பிணைப்பை ஆன்மநேயத்தை மறந்து துன்புறுகின்றனர். இதனை இராமலிங்கர்,

''நால்வருண ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே ''[3]

எனத் தொடங்கும் பாடலில் கூறுகின்றார். வாழ்வதற்கு எனக்கு எத்தனை உரிமை உண்டோ அத்தனை உரிமை அனைத்து உயிரினங்களுக்கும் உண்டு இதனையே,

''ஆன்ம நேய ஒருமைப்பாடு உரிமை ''[4]

என்பார் வள்ளலாரென்று வேதாந்த மகரிஷி தன் வாழ்வியல் விழுங்கள் என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

சாதிசமய வேறுபாடுகளால் மனித குலம் பிரிந்து சண்டையிட்டு மண்டைகளை உடைத்துக் கொள்வதை கண்டுமனம் வருந்திக் கூறுவதைப் பின்வரும் பாடலில் உணர்த்துகின்றது.

''சாதியிலே மதங்களிலே சமய நெறியிலே

சாத்ரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

ஆதியிலே அபமானித் தலைசிறந்த உலகீர் '' [5]

வள்ளலாரின் இக்கருத்து ஆன்மநேய ஒருமைப்பாட்டில் மலர்ந்திருக்கிறது. ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு வித்திட்டவர்,

''இன்று நம் பேசும் ஒருமைப்பாட்டிற்கு வள்ளலார் பெருமானே, இன்று நாம் பேசும் ஒருமைப்பாடு சாதாரண தேசிய ஒருமைப்பாடு. ஆனால் பெருமான் கண்ட ஒருமைப்பாடோ அனைத்துலக சர்வதேச ஒருமைப்பாடு அல்லது அனைத்துலக ஒருமைப்பாடு, அண்ட ஒருமைப்பாடு என்றும் கூறப்படுகின்றது. பெருமானின் ஆன்மநேய ஒருமைப்பாடு பாட்டுரிமைத் தத்துவத்திற்கு ஒரு தத்துவமே இல்லை '' [6]. என்று ஊரன் அடிகள் தெளிவாக விளக்கி இருக்கிறார்.

## உயிர் இரக்கம்

இராமலிங்கவள்ளலாரின் உயிர் நாடியான கொள்கையாக விளங்கும் மற்றொன்று உயிர் இரக்கம். உயிர் இரக்கம் என்பது எளிய மக்களால் காட்டப்படும் ஒரு பண்பாகும். பிறர் படும் துன்பங்களை நீக்கும் சீவகாருண்யம் இயிர் இரக்கமாகும்.

''மண்ணுலகத்தில் உயிர்கள்தாம் வருந்தும்

வருத்தத்தை ஒரு சிறிதெனினும் ''

எனத் தொடங்கும் பாடலில் உயிர்களுக்கு இரங்கி அவர்கள் துயரத்தைத் தணிக்கக்கூடிய வரத்தை எனக்கு தந்தருள்க என அவர் வேண்டுவது அவர் கொண்டிருந்த உயிர் இரக்கப் பண்பிற்குச் சான்றாக அமைகிறது.

## பசிக்கொடுமை

பசியின் கொடுமை மிகப்பெரியது. உயிர்களைப் பற்றி நின்று வருந்தும் எல்லாத் துன்பங்களிலும் அது கொடியது. பசிவந்திட மனம், கலம், கல்வி, வன்மை, அறிவுடைமை, தானம், தவம், உயிர்வு, முயற்சி, மகளீர் மேல்கொண்ட காமம் ஆகிய பத்தும் மறந்துபோகும் பிசிப்பிணி கொடுமையை விளைவிக்கும் என்று கூறுவதே.

''குடிப்பிறப்பிழிக்கும் விழுப்பம் கொல்லும்

பிடித்த கல்விப் பெரும்புணை வீடுஊம் '' [7]

இப்பாடலில் நிலவுலகில் வாழும் எளிய மக்கள் பசி தணிய உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோராவர் என்ற கருத்து தெரிய வருகிறது.

ஒருவன் பொருளைச் சேர்த்து வைக்குமிடம் எளியவர்களின் பசியில் வருந்தும் வயிறுதான் என்று வள்ளுவர்,

''ஆற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்

பெற்றான் பொருள் வைப்புழி '' [8] கூறுவதை காணமுடிகிறது.

தமிழர் கண்ட தனிப்பேரறம் இது. இதுவே தமிழ்ப்பெரும் தவச்சீலரான அடிகளாரின் அடிநிலைக் கொள்கையாக அமைகிறது.

## சீவ காருண்யம் - விளக்கம்

பசி என்ற நெருப்பானது ஏழைகளின் உடம்பில் பற்றி எரிகின்ற போது உணவினால் தளிர்கிறது.

பசி என்ற விஷக் காற்றானது ஏழைகளின் அறிவாகிய விளக்கை அணைக்கின்ற சமயத்தில் உணவினை கொடுத்து அணைக்காமல் ஏற்றுகின்றதே சீவகாருண்யம்.

கடவுளின் இயற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவ உடம்புகள் என்கிற ஆலயங்கள் பசியினால் பாழாக்கும் நேரத்தில் உணவு கொடுத்து அவ்வாலயங்களை விளங்கச்செய்விக்கின்றது.

பசி என்ற கொடுமையான தேள் வயிற்றில் புகுந்து கொட்டுகின்ற போது அத்துன்பத்தைத் தீர்க்கும் மருந்தாக இருக்கின்றது.

நெருப்பினுள் வேண்டுமானாலும் மனிதன் தூங்கலாம். ஆனால் கொடிய பசி என்ற நெருப்பினுள் அவனால் தூங்கமுடியாது இதனை வள்ளுவர்,

''நெருப்பினுள் துஞ்சலும் நிரப்பினுள்

யாதொன்றும் கண்பா டரிது '' என்று கூறுகின்றார்.

மக்கள் இறைவனது திரு அருளைப்பெற வேண்டுமானால் அவனது அருள் விளக்கத்திற்கு நிலைக்களமாகத் திகழும் அன்பை உடையவர்களில் உலகில் உயிர்கள் படும் துயரம் கண்டுமனம் இரங்கியும் அவற்றின் துயர்களை நீக்கியும் நன்மை செய்யும் சீவ காருண்யத்தின் மேற்கொள்ளவேண்டும் என்பது வள்ளலாரின் எண்ணமாகக் காணப்படுகிறது.

மக்கள் தமது இனத்தினர் படும் துயரங்களையும் கண்டு துன்புற்று அதை அகற்ற வேண்டும் என்பதே வள்ளலார் அறிவுறுத்திய உயிர் இரக்கமாகிய ஒழுக்க நெறியின் குறிக்கோளாகும்.

'' எவ்வுயிரும் என்னுயிர் போல்

எண்ணி இரங்கவும் நின்

தெய்வ அருட்கருணை

செய்யாய் பராபரமே '' என்று பாடியது இங்கு நினைக்கத்தக்கது.

## தொண்டு

இறைவனுக்கு செய்யும் வழிபாட்டைத் தொண்டாகக் கருதினர்.அத்தொண்டு அகப்படித்தொண்டு புறத்திருத்தொண்டு புறத்திருத்தொண்டு என இரண்டாக பிரிக்கலாம்.

அகம்படித் தொண்டாவது திருக்கோயிலுக்குள்ளேயும் இறைவன் திருமேனியைச் சார்ந்தும் உள்ள இடங்களை இறைவன் செய்வதாகும்.புறத்திருத்தொண்டாவது திருக்கோயில்களுக்கு உள்ளிடமன்றி புறமுன்றில்களிலும் வெளிப்புறத்திலும் திருவலகு, திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், பாடுதல், ஆடுதல், திருவீதி அலங்கரித்தல் முதலியனவாகும்.

## அகபடித் தொண்டு

புகழ்ந்துணை நாயனார் சோழநாட்டில் செழுவிலில் புத்தூரில் வாழ்ந்தவர். சிவபெருமானுக்கு அகத்தடிமை வழிபாடு செய்தவர். இதனை சேக்கிழார்,

'' செருவிலிப்புத் தூர்மன்னுந் சிவமறையோர் திருக்குலத்தார்

அருவரைவில் லாளிதனக் ககத்தடிமையாமதனுக்''[10]

இப்பாடலின் மூலம் நாயனார் செய்த அகத்தடிமை வழியிடுதெரியவருகின்றது.

அகத்தடிமை வழிபாடு யாது என்பதற்கு

'' கொங்கார்பன் மலர் கொண்டு குளிர்புனல் கொண்டருசிப்பார் ''[11]

இவ்வரிவிளக்கம் தருகிறது. இதனால் சரியை முறைவழிபாடு அகத்தடிமை வழிபாடாகிறது என்பது தெரியப்படுகிறது.

## புறத்திருத் தொண்டு

திருநாளைப் போவார் நாயனார் சோழ நாட்டில் ஆதனூரில் தோன்றியவர். சிவபெருமானுக்குச் செய்யும் புறத்திருத்தொண்டினை வழிபாட்டு முறையாகக் கொண்டவர். சிவபெருமான் மீது கொண்டுள்ள அன்பினால் கோயிலின் திருவாயில் புறம் நின்று ஆடுதலும் அவ்வாடுதலுக்கேற்ப பாடுதலும் செய்வார் இது புறத்திருத்தொண்டாகும். இதனைச் சேக்கிழார்,

''................................ திருவாயிற் புறநின்று

மெய்வரவு பேரன்பு மிகுதியினா லாடுதலும்

அவ்வியல் பிற்பாடுதலுமாய் நிகழ்வாரந்தாளில் " [12] என்றார். இதனால் புறத்திருத்தொண்டு வழிபாடு நாயன்மார்கள் செல்லும் இடங்களில் எல்லாம் செய்கிறார்கள் என்பதற்கு,

"இத்தன்மை யீசர் மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்திருத் தொண்டு செய்து விரவுவார் " [13]

இப்பாடல் சான்று பகர்கின்றது.

புகழ்த்துரணை நாயனார் வரலாற்றாலும் திருநானார்ப் போவார் வரலாற்றாலும் முறையே அகத்தடிமைத் தொண்டு வழிபாடும், புறத்திருத்தொண்டு வழிபாடும் சான்றுடன் நிறுவப்பட்டுள்ளது.

பிறர் துன்பம் கண்டு துடைக்க எண்ணுவோர் அத்துன்பத்தை துடைப்பதற்கு பிரதி உதவியை எதிர்பார்க்கமாட்டார்கள். அவ்வாறு எதிர்ப்பார்க்காது இருப்பவர்களை சிறந்த தொண்டர் ஆவார். மேற்கூறிய சேக்கிழார் தொண்டர் இலக்கணத்திற்கு இலக்கியமாக வள்ளலார் திகழ்ந்தார். மக்களிடம் இரக்கம் பொண்டு கருணையினால் தொண்டு புரிந்ததிலிருந்து அறியலாம்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றும் சொல்லோ உலகு " [14]

என்ற வள்ளுவமே தொண்டுக்கு சான்றாக கூறப்பட்டு இருக்கிறது. சிறந்த தொண்டர்கள் கைமாறு கருதாது பேரருள் பொழியும் மழையாக இருப்பர்.

## ஈகைத்தன்மை

ஏழைகட்கு இல்லை என்று சொல்லாமல் கொடுக்க வேண்டும். அது உயர் குலத்தில் பிறந்தவரின் இயல்பு ஏழைகட்கு இரக்கங்காட்டி அவர்கட்கு உதவாமல் சேர்ந்துபின் அப்பொருளை இழப்பவர் கொடியவர் அருள் இல்லாதவரும் ஆவார்.

அவர்கள் வறியவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து, அதனால் வரும் இன்பத்தை அறியமாட்டார்கள். ஒருவர்க்குத் துன்பம் என்பதே மரணத்துன்பம். அதைவிடப் பெருந்துன்பம் ஒன்று உண்டு. அதுதான் யாசிப்பவர்க்கு வேண்டியதைக் கொடுக்க இயலாத நிலை இக்கருத்துக்களை வள்ளுவர்,

''இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலன் உடையான் கண்ணே உள '' [15] என்றும் ,
''ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் உன்கணவர் '' [16]
''சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இமையாக் கடை '' [17] என்றும் கூறியுள்ளார்.

இக்கருத்துக்களை இராமலிங்கர் உலகில் உள்ளவர்கள் என்னை நோக்கி, ஈவதற்கு மனம் இல்லை எனினும், ஈகின்றேன் என்று ஒப்புக் ஒரு சொல் வரியாச்சொல் என்று கூறச் சென்னாராயினும் கூறுதற்குத் துணிவு கொள்ளமாட்டேன். அறிஞர்கள் என்னிடத்துவந்து, எங்கட்கு ஏதேனும் உதவுக என்று வேண்டவும், அஞ்சுவர்.

''ஐயா ஏதேனும் கொடுங்கள் என்று தவிப்பதர்க்கு
சிலதீயவர் இதோ வாங்கிக் கொள் என்று
மண்ணைக் கொடுப்பார் எனக்கோ அந்த மண்ணையும்
அளிக்க மனம் வருவது இல்லை வையகத்தோர்
இல்லெனினும் சும்மா ஈகின்றேன் என்றொருசொல்
சொல்லெனினும் சொல்லத் துணிவு கொளேன் '' [18]

இப்பாடலில் வள்ளலார் ஈகைக்குணம் இல்லாதோரின் இழிவைக் கூறும் பாங்கு நோக்கத்தக்கதாக அமைந்திருக்கிறதென்று இளங்கண்ணார் கூறுகின்றார். ஈகை குணம் இல்லாவிட்டால் ஒருவன் ஆன்ம உணர்வினைப் பெற இயலாது. அவ்வாமை

உணர்வினாலேயே இறைவன் திரு அருளைப் பெற இயலும், என்பதே வள்ளலாரின் கருத்தாகக் காணப்படுகிறது.

## அன்பு

உலகில் வாழ்வு அமைய அன்பு மிகவும் இன்றியமையாததாகிறது. இதனால் வள்ளுவர்,

''அன்பில் வழியது நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போத்த உடம்பு '' [19] என்று கூறுகின்றார்.

அன்பில் பல நிலைகள் இருக்கின்றன. நம்மைச் சார்ந்த உற்றார் உறவினர்களிடமும், நம்மிடம் அன்பு செலுத்துகின்றவர்களிடமும் அன்பு காட்டுதல் ஒரு வகை, அன்பை எதிர் நோக்கி அன்பு செய்வது அன்பு வணிகமாகிறது. ஆனால் எதையும் எதிர்பார்க்காமல் கைமாறு கருதாதாயின் அன்பு, நட்பு போன்றவை பேரன்பாக மலர்கின்றன. தன்னையே அன்புக்காக அளிக்கின்ற உயர்ந்த வளர்ச்சி நிலையும் அன்பில் இருப்பதால் தான்.

''அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு '' [20]

என்று வள்ளுவர் வரையறுத்து கூறி இருக்கின்றார். இந்த அன்பின் முதிர்ச்சியில் கனியாக அருள் இருக்கிறது. இதனால் தான்

''அருளென்றும் அன்பின் குழவி '' [21]

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

## கருணை

அருள் என்பது வேண்டியவர் வேண்டாதவர் என்று எண்ணிப்பொழிவது அல்ல. எல்லை கடந்து பகைவனுக்கும் அருள் கிடைக்கும். இதனால் தான் அருளுக்கு விளக்கமாக மன்னுயர் ஓம்பி அருளாவார். என்று வள்ளுவர் அருளாளரை

இனங்காட்டுகிறார். எவ்வுயிரும் செந்தன்மை பூண்டு வாழ்கின்ற அருள் வாழ்க்கையே கருணை வாழ்க்கை ஆகும்.

வள்ளலார் கருணைக்கு உலகியனையும் ஆன்ம நெறிமுறைகளையும் விரிவான விளக்கம் தருகின்ற வகையில் ஜீவ காருண்ய ஒழுக்கம் என்ற நூலை எழுதியுள்ளார். ம.பா. குருசாமி என்பவர்

''ஜீவ காருண்யம் விளங்குமபோது அறிவும்
அன்பும் உடனாக நின்று விளங்கும் அந்த
உபகார அத்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும்
ஜீவகாருண்யம் மறையும்போது அறிவும் அன்பும்
உடனாக மறையும் அதனால் உபகார சக்தி மறையும
உபகார சக்தி மறையவே எல்லாத்தீமைகளுந்தோன்றும் '' [22]

என்று கூறுகின்றார். இந்தக் கருணை எல்லாவகையான உயிர்களுக்கும் பொருந்துவதாக அமைகிறது.

வள்ளலார் இத்தகைய கருணை வாழ்க்கை நிலையை அடைந்தபொழுது,

''அப்பாநான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும் ''

என்று கூறுகின்றார்.

தனிப்பெருங்கருணை என்பது முழுமையுமாக கருணையின் வடிவமாக மாறிவிடுதலாகும் தான் என்ற நிலை போய் தன்னுயிர் தான் அறப்பெற்று மன்னுயிர் எல்லாம் ஒன்றாகக் காண்கின்ற ஒப்பற் நிலையே தனிப்பெருங்கருணை நிலையாகும். மனிதன் தெய்வநிலைக்கு உயிர்கின்ற பொழுது அவனால் தனிப்பெருங்கருணை வடிவமாதல் கூடும்.

''பெருங்கருணை என்பது இறைவன் ஒருவனைத்
தவிர்த்து ஏனைய உயிர்களிடம் பரிபூரணமாக
ஒருபோதும் விளங்கமுடியாது. அது சிறப்பான
ஒப்பற்ற கருணை ஆகும். அதையே தனிப்பெருங்
கருணை என்ற சொற்றொடர் குறிப்பிடுவதாக நாம்
கருதலாம் '' [23] என்று அ.லெ. நடராஜன் கூறுகின்றார்.

''எல்லாம் வல்ல கடவுளின் எல்லாக்குணமும், ஆற்றலும் பயனும் அனுபவமும் நிரம்பிய தனிப்பெருந்தன்மையே இந்த அருளின் பொருளாகக் கொள்ள வேண்டும். கடவுளின் இந்த அருள்தான் இவ்வுயிர் பொருள்களுக்கெல்லாம் உண்ணின்று உதவி, யாவையும் விளங்கச்செய்து கொண்டு மனிதப் பிறவியில் மெய்யறிவு உணர்வாய்த் தோன்றி, உண்மையை உள்ளபடிகாணச் செய்தும், மனிதனில் அவனாகவே விளங்கி அருளனுவத்தை விளைவித்தும் கொண்டிருககின்றதாகும். எனவே உண்மை என்பதும் நிறை அருள் என்பதும் ஒன்றையே கட்டினதாக அறிகின்றோம் '' [24] என்று சரவணானந்த கூறுகின்றார்.

இறைவன் என்ற பெருஞ்சக்தியின் சிறுதுளிகள் என்றும் உணர்கின்ற பொழுது மனிதர்களைவேறுபடுத்தும் மாயைத்திரைகள் மறைகின்றன. நான், நீ, அது, இது என்ற வேறுபாடற்ற நிலையில் எல்லாவற்றையும் இணைக்கும் சக்தியாகத் தனிப்பெருங்கருணை இருக்கிறது.

வள்ளலாரின் அககுணம், புறகுணம், என்ற வேறுபாடு அவருடைய கருணைத் தத்துவத்தின் அடிப்படையில் தோன்றியதாகும். உலகில் பெரும்பாலான மக்கள் புலால் உண்கின்றவர்களாக இருக்கின்றனர். வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

''தன்னூான் பெருக்கற்குத் தன்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள் '' [25] என்று கூறியிருக்கின்றார்.

மனிதர்களைக் கொல்வதைப் பாவமென்று நாகரீக முதிர்ச்சி பெற்ற எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டு, அதனைத் தடுக்க சட்டம் செய்திருக்கின்றனர். ஆனால் பிற உயிர்களைக் கொலை செய்வதைப் பற்றிப் பேசினாலும் அது ஒரு தவிர்க்க இயலாத மண்ணுலகில் உயிர் வாழ மேற்கொள்ள வேண்டிய பாவமென்று கருதுகின்றனர். இதனால் பிற உயிர்க்கொலை அனுமதிக்கப்படுகிறது. வள்ளலார்,

''வன்புடையார் கொலைகண்டு புலை உண்பார் என்றும் '' [26]

''கொடியவரே கொலைபுரிந்து புலை நுகர்வார் '' [27]

என்ற உண்மையைக் கூறுகின்றார்.

சமுதாயத்தில் கொலை செய்யாமலே மற்றவர்கள் கொன்று தருகின்ற ஊனைஉண்டு வாழ்கின்றவர்கள் இருக்கின்றனர். இவர்கள் தாங்கள் கொலை செய்வதாக எண்ணுவதில்லை. நேரடியாக இவர்கள் கொலை செய்யாவிட்டாலும் மறைமுகமாக இவர்கள் உயிர்கொலை நிகழக் காரணமாக இருக்கின்றனர். ஆதலால் இவர்களை 'அருளாளர்கள் 'கூட்டமான 'அக இனத்தோடு', சேர்த்துக் கொள்ள இயலாது. அவர்கள் 'புற இனத்தவராக ' இருப்பார்கள் என்பதை வள்ளுவர்,

'உயிர் கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்

உறவினத்தார் அல்லல் அவர் புறஇனத்தார் அவர்க்கும் ' [28]

என்று வருகின்ற இப்பாடலில் கூறியிருக்கின்றார்.

கருணையே வடிவாகி எவ்வுயிரும் தம் உயிர்போல் காண்பவர் சுத்த சிவ சன்மார்க்க பெருநெறியில் நிற்பவர் ஆவார். அவர் வாயால் பேசம் சொற்கள் வேதாமங்களின் அடியும் முடியும் உணர்ந்த வார்த்தைகள் ஆகும். இதனை,

'கருணை ஒன்றே வடிவாகி எவ்வுயிரம்

தம்உயிர்போல் கண்டு ஞானத் ' [29] இப்பாடலில் விளக்கியுள்ளார்.

**இன்சொல்**

மக்களிடையே மனிதநேயத்தை வளர்க்க பேசும் போது ஒவ்வொரு வரும் இன்சொற்களையே பேச வேண்டும். அவ்வாறு பேசாதவர்களைப் பார்த்து இன்சொல் இருக்க வன்சொல் பேசுவது கனியிருக்க காயை உண்பதற்கு ஒப்பாகும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். இதனை,

''இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந்தற்று ''[30]

என்னும் குறலில் விளக்குவர் மற்றும் அவர், இன்சொல்லை அன்பு கலந்து வஞ்சனை கலவாத அறத்தினை உணர்ந்தார் வாயிற் பிறக்கும் சொற்கள் என்றும் கூறுவர்.

'' இன்சொலால் ஈரம் அளைஇப்படி நிலவாம்

செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்''[31]

இக்கருத்தினைத் தழுவி இராமலிங்கர் தாம் இயற்றியுள்ள விண்ணப்பக் கலிவெண்பாவில்,

கடுமொழிகளையான் இதுவரை கையாண்டது அல்லாமல் இறைவா! உன் அடியார்கடகு இன்சொல் கூறி ஒரு பொருளையும் உதவியது இல்லை என்று வள்ளலார் கூறுவதிலிருந்து அறியலாம்.

அற்பமான சொல்லாகிய பொய் சொல், சொல்ல வேண்டுமானால் புறத்தில் குறித்துப் புறப்படுவேன். அது அல்லாமல் மெய்வார்த்தை பேச எந்த நாளிலும் விரும்பியது இல்லை என்ற கருத்துக்களை திருவருட்பா

''........................................ விள்ளுறுமியான்

வன்சொ லுடன்றி வள்ளலுன தன்பர்தமக்

கின்சொ லுடன் பணிந்தொன்றீந்திலை ''[32]

என்று வள்ளலார் கூறியிருப்பதை காணலாம். மேலும், அவர்,

" பொய்யுரைக்க என்றால் புடையெழுவென் அன்றியொரு

மெய்புரைக்க என்றும் விழைந்த திலை "[33]

என்ற பாடலிலும் கூறியிருக்கின்றார்.

இவ்வாறு வள்ளலாரின் கருத்திலிருந்து இனிமையான சொற்களை இன்முகத்துடன் உண்மையாக கூறுவது மனிதநேயத்தை வளர்க்கும் சிறந்த பண்பாக காணப்படுகிறது.

## தானம்

மரணத்தை விட்டு ஏற்பது இகழ்ச்சி என்ற பொன்னுரையும் மறந்து பசியின் கொடுமையால் பிச்சையெடுப்பவர்கட்கு, இரக்கமுடையோர் அவர்கட்கு கருணை காட்டித் தானம் செய்வர். தானம் செய்பவரைத்தடுத்தல் மனிதாபிமான செயல் அல்ல. அத்தகைய பாவத்தையும் வள்ளலார் செய்ததுண்டு என்று,

"..... மன்னுகின்ற

மானந்த செயாது நொந்திரப் போர்க்குத்

தானஞ் செய்வாரைத் தடுத்து துண்டு " [34]

மேலும், அவ்வாறு தடுத்துண்டு அவ்வாறு யாசிப்பவர்களைக் கடிந்து பேசிவிரட்டுவதும், உண்டு. ஏழைகட்கு ஒன்று கொடுப்பது ஈகை மற்றவையெல்லாம் பிறரிடம் ஒன்றை எதிர்பார்த்துச் செய்வது என்பது வள்ளுவர் கருத்து. அதனை உணராத இழிச்செயலைப் பின்வருமாறு உரைக்கின்றார்.

"............................................ தேற்றாமல்

பத்தா என்றிங் கிரப்போர் தமைக்கண்டு

கோபத்தில் நாய்போல் குரைத்ததுண்டு " [35] என்று கூறுகின்றார்.

வள்ளலார் கொடுத்து வாழும் நல்ல பண்பை ஒவ்வொரு மானிடனும் பெற்று வாழ வேண்டும் என்றக் கருத்தினை திருவருட்பாவில் கூறியுள்ளார்.

**காம இச்சை**

மண், பொன், பெண் ஆகிய மூன்று ஆசைகளிலே பெண்ணாசையாகிய காமஇச்சை மிகவும் கொடியது. ஆன்றோர் அது வெறும் உடற்சுகம், அதனால் உடல் அழியும் ஆன்ம உணர்வு குன்றிப் போகும் மனிதாபிமானம் குன்றிவிடும். இதனை இராமலிங்கர் ‘காமக்கடுங்காடு ’ என்று கூறுகின்றார். காட்டில் மக்கள் நடமாட்டம் இராது. பேய்களே நடமாடும். அத்தகைய பேய்களைப் போல அலையும் மக்களை இழித்துப் பின்வருமாறு பாடியுள்ள நயம் நோக்கத்தக்கதாம். இதனை இராமலிங்கர்,

‘‘............................................ நாடகன்ற
கள்ளவாய் ஓங்குபெருங் கருங்காட்டில்
கொள்ளி வாய் பேய்போல் குதித்ததுண்டு பெண்களுடன் ’’ [36]

‘‘புல் என்றால் தேகம் புலசிக்கும் அன்றிவிட்டு
நில்என்றால் என் கண்ணில் நீர் அரும்பும் ’’ [37]

‘‘.......................................... புல்லரென்ற
போர்க்கும் விருப் பெய்தாத பெண்பேய்கள் பெய்யசிறு
நீர்க் குழியேயான் குளிக்கும் நீர்ப் பொய்கை ’’ [38]

‘‘............................................... தேறாத
பெஞ்சலஞ்செய் மாயாவிகாரத்தினால் வரும் வீண்
சஞ்சலமெல் லாமெனது சம்பந்தம் ’’ [39]
என்று வள்ளலார் கூறியிருக்கின்றார்.

## பொறாமை

மானிடர்கள் பொறாமை கொள்ளும் இயல்பை பெற்று இருக்கின்றனர். வள்ளுவர் தமது திருக்குறளில் அழுக்காறு என்று ஒரு அதிகாரத்தை உருவாக்கியுள்ளார் பிறர் நலன் கண்டு பொறுக்க இயலாத தன்மை பொறாமைப்படாதிருத்தல் சிறந்த ஒழுக்கங்களில் ஒன்று இத்தீய இயல்பினையுடையோர் பிறர் வாழப் பொறுக்காமல் பலதீமைகள் செய்து இறுதியில் அழிகின்றனர். அழுக்காற்றினைத் திரு வள்ளுவர் 'பாவி ' என்றே உருவகப்படுத்தியுள்ளார். அதனால் பொறாமை நன்மை ஒழிவதுடன் தீயநெறியிலும் செலுத்திவிடும் என்பர்,

''அழுக்காறு றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உயித்து விடும் '' [40]

இக்கருத்தினை இராமலிங்கர் பின்வரும் பாலில்,

''.................................... தொல்லுவகை
ஆண்டாலும் அன்றி அயலர் புன் கீரைமணி
பூண்டாலும் என்கண் பொறுக்காது '' [41]

என்று கூறுகிறார்.

வாழ்ந்தாலும் பொறார் தாழ்ந்தாலும் பொறார் என்பது பழமொழி. ஒருவன் உலகை ஆண்டாலும் என்மனம் பொறுக்காது. அன்றி ஒருவன் தாழ்ந்த நிலைக்கு வந்து கீரைமணியைப் பூண்டிருந்தாலும் அதைப் பார்க்கவும் பொறுக்காது என்று பொறாமைக்கு விளக்கம் தந்துள்ளார்.

## ஆணவம்

மக்கள் வாழ்க்கைமைய அழிப்பது 'தான் ' என்ற ஆணவம் இதனை இராமலிங்கர் பின்வரும் பாடலில், ''............................................. அஞ்சவரும்
வீணவமாம் வஞ்சவினைக்கு முதலாகி நின்ற
ஆணவமே என் காணி ஆட்சியதாம் '' [42] என்று கூறியுள்ளார்.

புல்லறிவு என்பது நல்லறிவுக்கு மாறுபட்டது. அறிவு வகைகளை ஆராய்ந்தால் ஆன்மாவின் முனைப் பறிவு நூற்களால் பிறந்த நுண்ணறிவு, வினைவழி வந்த விளங்கறிவு, இம்மூன்று அறிவும் ஆன்ம உணர்வினை உணரத் துணை செய்யாது இவைகளால் பொறாமை புலமைச் செறுக்சுகு, இனவரியான ஏற்றத்தாழ்வு, பணத்திமிர், தரித்திரபுத்தி, முதலான தீய பண்புகளே விளையும் தன்னை அறிந்து இன்புற வகை செய்யாது அதற்கு நல்லறிவைப் பெற வேண்டும். இந்த நல்லறிவினை இறைவன் தியானத்தால் அன்றிப் பெற இயலாது அதற்கு அருளாதி என்று கூறுவர். இந்த இறைஞானம் உள்ளத்தில் சக்தி ஆன்ம ஒளியினை உணரும்நிலை ஏற்படும்போது கலையறிவு, கன்ம அறிவு தன்னறி இவை மூன்றும அழியும். அறியாமை அறிவகற்றி அறிவின் உள்ளே அறிவு தனை அருளினால் அறியாதே அறிய வேண்டும் என்று சான்றோர்கள் பலர் கூறியுள்ளார்கள். இந்நிலையறியாது மக்கள் துன்புறுவதை வள்ளலார் பின்வரும் பாடலில் வருந்துகின்றார்.

“.........................................................

நல்லறிவே என்னை நெடுநாள் பகைத்த

புல்லறிவே என்னுள் பொருள் கண்டாய் ”[43]

இக்கருத்தினைக் கற்றோர்க்கும் கல்லார்க்கும் எளிமையாக விளக்குமாறு கூறிய நயம் சிந்திக்கத்தக்கது.

### பொன்னாசை

மானிட பிறவிகளைப் பொன்னாசை கொடுத்து பாவச் செயலைச் செய்யத் தூண்டுகின்றது. மனித நேத்தை இவ்விசைநீர் குலைத்து விடுகின்றது. உலக மக்கள் பொன் - பொருள் இவற்றில் அதிக ஆசைவைத்து அதைச் சேர்ப்பதிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பர். அதனால் வரும் துன்பத்தை உணரார். உலக வாழ்க்கைக்குப் பொருள் தேவைதான் என்றாலும் அளவுக்குமேல் சேர்த்துவைத்தால் துன்பம் வரும். இவற்றை யெல்லாம் வள்ளலார், ‘நெஞ்சறிவுறுத்தல்’ என்ற பகுதியில்

குறிப்பிடுகின்றார். செல்வமானது கூத்தாடும் அரங்கில் கூடும் கூட்டம் அகன்று விடுவதுபோல் நீங்கும் என்று கூறுவர். அக்கருத்திணை விளக்கும். இதனை ஆய்ந்து உணர்ந்த வள்ளுவர்,

''கூத்தாட்டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று
என்ற குறலில் விளங்கவைக்கின்றார். ''

''நின்னாசை என்னென்பேன் நெய்வீழ் நெருப்பெனவே
பொன்னாசை மென்மேலும் பொங்கினையே ''

''.............................................. பொன்னாசை
வைத்திழந்து வீணோ வயிறெறி மண்ணுலகில்
எத்தனைபேர் நின்கண் எதிர் நின்றார் '' [46]

''.............................................. றில்லாமல்
ஆய்த்தோர் சிலநாளில் ஆயிரம்பேர் பக்கலது
வாய்த்தோடிப் போவது நீ பார்த்திலையே '' [47]

''...................................... ஆய்ந்தோர் சொல்
கூத்தாட்டவைசேர் குழாம் விளிந்தாற் போலுமென்ற
சிர்த்தாள் குறள் மொழியும் தேர்ந்திலையே '' [48]

''........................................ பேர்த்தோடும்
நாட்கொல்லி என்றால் நடுங்குகின்றாய் நாளறியா
ஆட்கொல்லி என்பதை ஆய்ந்திலையே '' [49]

இவ்வாறு திருவருட்பாவில் வள்ளலார் கூறியுள்ளார்.

## வட்டி வாங்குதல்

உயர்ந்தமக்கள் ஏழையர்களிடம் வட்டிக்குமேல் வட்டி வாங்குதல் மானிடநேயமல்ல. உலகில் பணம் இல்லாத ஏழைமக்களும் வருவாய்

குறைந்தவர்க்கும் பணம் வட்டிக்குக் கடனாக வாங்குகின்றனர். வட்டியும் கொடுக்க இயலாதபோது வட்டிக்கும் கடன் வாங்கிய உலகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனால் ஏற்படும் பயன் எண்ணி இந்த வட்டிவாங்கம் முறை இருக்கும் வரை உலகில் கொடுமையும் வறுமையும் இருந்தே தீரும். வட்டி வாங்குபவர் உள்ளத்தில் இரக்க சிந்தனை இராது. இந்து சமயமும் இஸ்லாமிய சமயமும் வட்டி வாங்குதல் பாவம் என்று கூறியும் மக்கள் அதில் மனம் செலுத்தால் வட்டி வாங்கிப் பணம் சேர்ப்பவர், அதில் ஒரு பகுதியைக் கோவில் உண்டியலில் போட்டு அதனால் தம் பாவம் தீரும் என்று எண்ணி மூடநம்பிக்கைகளில் வாழ்கின்றனர். இதனை வள்ளலார் பின்வரும் பாடலால் கண்டித்து உரைக்கின்றார்.

''வட்டிமேல் வட்டி கொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர் ''[50]

எனத் தொடங்கும் இப்பாடலில் வள்ளலார் வட்டியை பற்றி கூறும் கருத்துக்கள் புலப்படுகின்றன.

## கோபம்

கோபம் என்பது மக்களின் உள்ளத்திற்குள் எழும் உணர்ச்சியாகும். கோபம் வருமாறு ஒருவர் நடந்துகொண்டாலும் கோபப்படாதிருக்கமனித நேயத்தையே சீர் அழித்துவிடும், செல்லும் இடத்தும் சினம் தீது அது உவகையை அழிக்கும் கோபத்தை மிகுதியாக உடையவர் இறந்தரோடு ஒப்பர் என்பது வள்ளுவர் கருத்து. இதன் அடிப்படையில் வள்ளலார் உலக மக்களைப் பார்த்துக் கூறியுள்ள பாடலைக் காண்போம்.

''ஆறாமல் அவியாமல் அடைந்தமோ பத்தீ
அடர்புற உலகிடை அஞ்சாது தரிவீர்
மாறாமல் மனஞ்சென்ற வழிசென்று பிடிக்கே
வழிதுறை காண்கிலீர் பழிபடும் படிக்கே '' [51] இப்பாடலில் கோபம் வந்தால் அது

ஆறாமலும் ஆவியாமலும் இருக்கும் என்பதை ஆறாமல் அடைந்த கோபத்தீ என்றார். அதனல் மனத்தெளிவு ஏற்படாமல் மனஞ்சென்ற வழி சென்று திகைப்பர். அதனால் விரைவில் மரணம் ஏற்படவும் கூடும் என்று எச்சரிக்கை செய்கின்றார்.

## மக்களின் மூடநம்பிக்கை

நாம் செய்யும் காரியங்களைப் பற்றி சிந்திக்காமல் செய்வதால் மூடநம்பிக்கை ஏற்படுகிறது. சாதி ஆசாரம், மசயமத ஆசாரம், அதன் சார்பான புராண இதிகாசக்கதைகள் முதலரியன. இவை தவிர, காதிலும் மூக்கிலும் தொகையிட்டு நகை அணிதல் முதலியனவும் மூடப்பழக்கங்களே. இதனை வள்ளலார் , தாம் இயற்றிய பேருபதேசப்பகுதியில் கூறியுள்ளார். மேலும் அவர் திருவருட்பாவில்,

''கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்

கண்மூடிவழக்கம் மண்மூடிப்போக ''[52] எனத் தொடங்கும் பாடலில் கூறியுள்ளதை ஆராயத்தக்கதாக காணப்படுகிறது.

## உயிர்பலியிடுதல்

மக்கள் தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுதல் மானிட நேயமாக அல்ல. உயிர்ப்பலியிடுதல் மிக கொடுமையாகும். பண்டைக்கால மக்கள் அறிவு வளர்ச்சியில் தான் கண்டதையெல்லாம் தெய்வமாக எண்ணித் தான் உண்ணும் உணவுப் பொருட்களையே படைத்து வழிபட்டனர். இந்நிலையை மாற்றுவது இன்றியமையாத கடமையாகும்.பல தெய்வ வழிபாட்டினை ஒழித்து ஒரே வழிபாட்டிற்கு கொண்டுவர இயேசு, நபி நாயகர், சாக்ரடீஸ் போன்றவர்கள் முயன்று பல துன்பங்கட்கு ஆளானார்கள். இக் கருத்திணை இராமலிங்கர் பின்வரும் பாடலில்,

'' தெய்வங்கய் பலபல சிந்தை செய்வாரும்

சேர்கதி பலபல செப்புகின்றாரும்

பொய்வந்த கலை பல புகன்றிடுவாரும்

பொய்ச்சம பாதியை மெச்சுகின்றாரும்''[53] என்று விளக்கம் தருகின்றார்.

இவ்வாறு பல வகையாகக் சுத்த சன்மார்க்க நெறிகளை இராமலிங்கர் திருவுருட்பாவிலும், உரைநடைப்பகுதியிலும் கூறியுள்ளார்.இவற்றை ஆராய்ந்து இறைவன் திருவருளைப் பெறவேண்டும்.

## போலிவேடம்

இறைவனிடம் அன்பு கொண்டவர் போன்று போலிவேடம் தரித்து உலகை ஏமாற்றுபவர் இவ்வுலகில் அதிகம் உள்ளனர். அவர்களை ஆஷாடபூதி என்று கூறலாம்.அதைப்போன்று வேடம்பூண்டு அலைந்ததும் இருக்கின்றார் என்று இராமலிங்கர் கூறியுள்ளார். இதனை,

"..................................................... விஞ்சலகர்

மெய்யடிகள் வேடங்கள் வித்திகநின் பொன்டிமைக்கும்

பொய்யடிமை வேடங்கள் பூண்டதுண்டு " [54]

இப்பாடலில் மனிதன் போலிவேடத்திலிருந்து தன்னை விடுத்து கொள்ள வேண்டும். மனித நேயத்திற்கு தடைக்கல்லாக இருக்கின்றதை ஒவ்வொரு வரும் உணர்ந்து செயல்படவேண்டும்.

## இறையருள்

வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாக இறையருள் அமைகின்றது. வேதங்கள், ஆகமங்கள் அதன் வாயிலாகவும் புராணங்கள், இதிகாசங்கள் இவை போன்றன விரிவுபடுத்தி மக்கள் உண்மைத் தன்மையை உணர வேண்டுமானால் இறைவன் அருள் ஒன்றினால் தான் உணர இயலும். மானிட நேயத்துக்கு இறைவனின் அருள் மிகத்தேவை. இவ்வருளைக் கொண்டவரே மனிதநேயத்தை பெற்றிருக்கின்றனர். இறையருளைப் பெறாதவர்கள் வாழ்வின் உண்மைநிலை உணராமல் அழிகின்றனர் இதனை வள்ளலார்,

''வேதாகமங்ளென்று வீண்வாதம் - சூதாகச்

சொன்ன வலால் உண்மை வெளிதோன்ற உரைக்கவில்லை

என்ன பயனோ இவை '' [55] என்றும்,

''சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி

நேரத்திரங்கள் போற்காட்ட நேராகவே நேரத்திரங்கள்

சிற்றம் பவன் திருவருட் சீர் வண்ண மென்றே

உற்றிங்கறிந்தேன் உவந்து''[56] என்றும் கூறியிருப்பதிலிருந்து மக்கள் இறையருள்பெற வழிகாட்டியதாக அறியமுடிகிறது.

## முடிவுரை

மக்கள் வாழ்வதற்குரிய மனித நேயப்பண்புகளை தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. ஆன்மநேய ஒருமைப்பாடு, உயிர் இரக்கம், தொண்டு, ஈகை, அன்பு, கருணை, இன்சொல், தானம், காம இச்சை நீக்குதல், பொறாமை, பொன்னாசை, வட்டி வாங்குதல் கோபம், மூடநம்பிக்கை, உயிர்பலியிடுதல், போலிவேடம் இறையருள் போன்றக் கருத்துக்களை மானிடநேம் என்ற இவ்வியல் தெளிவுப்படுத்துகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. மு. வரதராசனார், திருக்குறள், ப. 208.
2. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா, பா. 5297
3. மேலது, பா. 4147
4. வேதாத்திரி மகரிஷி, வாழ்வியல் விழுமங்கள், ப.25.
5. திருவருட்பா, பா. 5566
6. வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார், தெய்வநிலையங்களின் வரலாறு. ப.8.
7. மணிமேகலை - பாத்திரம் பெற்ற காதை, 76 - 83, 92 - 96.
8. மு. வரதராசனார், திருக்குறள், 226.
9. மேலது., 1049
10. சேக்கிழார் பெரியபுராணம், புகழ்த்துணைநாயனார், புராணம், பா.1.
11. மேலது., பா.2.
12. மேலவர்., திருநாளைப்போவார் நாயனார், பா. 15.
13. மேலது.,
14. மு. வரதராசனார், திருக்குறள், பா. 211.
15. மு. வரதராசனார், திருக்குறள், பா. 223.
16. மேலது., பா. 228.
17. மேலது., பா. 230.
18. இளங்கண்ணனார், வி. வள்ளலாரும் உயிரினங்களும் , ப.120.
19. மு. வரதராசனார், திருக்குறள், பா. 80.
20. மேலது., திருக்குறள், பா. 72.
21. மேலது., திருக்குறள் பா. 757.
22. குருசாமி ம.பா. வள்ளலார் ஓர் அறிமுகம், ப. 65.
23. மேலது.,

24. சரவணானந்த சுவாமிகள் அருள் அறிவியல் (or) மெஞ்ஞானம் விளக்கம், ப. 96.

25. மு. வரதராசனார், திருக்குறள், 251

26. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா, பா. 4161

27. மேலது., பா. 4162

28. மேலது., பா. 4160

29. மேலது., பா. 5297

30. மு. வரதராசனார், திருக்குறள், ப.100.

31. மேலது., ப.191

32. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா, 1962/292

33. மேலது., பா. 1962/293

34. மேலது., பா. 1962/308

35. மேலது., பா. 1962/316

36. மேலது., பா. 1962/321

37. மேலது., பா. 1962/344

38. மேலது., பா. 1962/ 345

39. மேலது., பா. 1962/347

40. மு. வரதராசனார், திருக்குறள், பா. 168

41. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா பா. 1962/359

42. மேலது., பா. 1962/360

43. மேலது., பா. 1965/367

44. மு. வரதராசனார், திருக்குறள் பா. 332

45. இராமலிங்க சுவாமிகள், திருவருட்பா, பா. 1995/397

46. மேலது., பா. 1962/410

47. மேலது., பா. 1962/410

48. மேலது., பா. 1962/398

49. மேலது., பா. 1962/412

50. மேலது., பா. 55

51. மேலது., பா. 5557

52. மேலது., பா. 4768

53. மேலது., பா. 4726

54. மேலது., பா. 1962/305

55. மேலது., பா. 5516

56. மேலது பா. 5515

*இயல் ஐந்து*

# வள்ளலார் கால மக்கள் வாழ்க்கை நிலை

## முன்னுரை

இராமலிங்கர் காலத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்க்கைச் சூழ்நிலைகளைத் தன் பாடலில் வெளிப்படுத்தினார். அதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்ச்சியையும் ஊட்டியுள்ளார். அவர்காலத்தில் மக்களிடம் இருந்த அடிமைத்தனத்தை மாற்றமுயன்றார். அம்முயற்சியின் பிரதிபலிப்பாக அவர் பாடல்கள் அமைந்துள்ளது. அக்கால மக்களின் வாழ்க்கை நிலைகளை இக்கட்டுரை பின் வருமாறு கூறுகின்றது.

## அடிமைத்தனம்

ஆன்மீகத் துறையில் தனக்கென்றொரு நெறியை உருவாக்கி கொண்டு அதன்வழி நடத்து மற்றவர்களுக்கும் தான் கண்ட மெய்நெறியை விளக்கி வழிகாட்டி எண்ணியதை எண்ணியாங்கெய்தியவர் வள்ளலார். அவர் வையத்துள் வாழ்ந்த வாழ்க்கையையும் அவர் கண்ட வாழ்க்கை நெறியையும், அவர் உருவாக்கிய தத்துவத்தையும் அவர் கூரிய கருத்துக்களையும் சரியாகப் புரிந்து கொள்ள அவர் வாழ்ந்த காலச் சூழ்நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

''தமிழ் தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனார், ''இன்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் நாட்டில் இருள் படலாயிற்று. அவ்விருள் கடி எழுந்த ஞாயிறு நம் இராமலிங்கைசுவாமிகள் ''[1]. என்று கூறுகின்றனர்.

நமது நாடு பாருக்குள்ளே நல்ல நாடாக திகழ்ந்து வேதம் படைத்தது. பண்பாட்டின் நிலைக்களமாக இருந்தது. தமிழகத்தின் பழங்காலம் என்று போற்றுதற்குரிய பொற்காலம். இறவாத இலக்கியங்களைப்படைத்து கலை, இலக்கியம் வளர்க்கும் நாற்றங்களாக தமிழ்க் கூறும் நல்லுகம் விளங்கியது. எல்லாம் பழங்கதையாய் போகின்ற நிலையில் நமது தாயகத்தின் இடைக்காலம் அமைந்தது.

ஆற்றல்மிக்க அரசர்கள் ஆண்ட பரந்துவிரிந்த அரசுகள் துண்டாடப்பட்டு, குறுநில மன்னர்கள் கோலோச்சம் பூமியாகப் பாரதம் மாறி இருந்தது. சண்டையிடும் உட்குழுக்கள் பெருகி இருந்தது. இங்கிருந்த சாதி சமய பிளவுகள் மக்களிடம் பிரிவுகளை வளர்த்தன. நீண்ட காலமாக கிராமசமுதாய அமைப்பும் மக்களின் வாழ்வில் வளத்தை சேர்க்காத பொருளாதார நிலையும் பொதுவாக எங்கும் காணப்பட்டிருந்தது. இத்தகைய பின் புலத்தில் பாரத பூமி வெளிநாட்டவரின் வேட்டைக்காடாக மாறியிருந்தது.

போர்ச்சுகீசியர் டச்சுக்காரர்கள், பிரெஞ்சு நாட்டின், ஆங்கிலேயர்கள் ஆகிய நான்கு இனத்தவர் வாணிபநோக்கில் நமது நாட்டில் வேரூன்ற முயன்றனர். அவர்களுக்குள் ஏற்பட்ட போட்டிகளும் அவர்கள் நடத்திய அரசியல் சூதாட்டங்களும் அதில் நமது நாட்டு குறுநில மன்னர்கள் பகடைக் காயாக உருட்டப்பட்டிருந்தது. போராட்டங்களும் போர்களுக்கும் பிறகு ஆங்கிலேயர்களின் பிடிக்குள் அகப்பட்டிருந்தது.

''அடிமைநிலை பலவழிகளில் தோன்றுகிறது. அடிமைகள் என்று சிலரை மற்றுஞ்சிலர் தமக்கு உடைமைப் பொருளாக வைத்து ஆளுகின்ற நிலைக்கு அடிமைநிலை என்பது பெயர். இந்தியாவிலும் அடிமைநிலை ஆதி காலத்திலிருந்து வந்துள்ளதாகத் தெரிகிறது. ரிக்வேதத்தில் அடிமைகள் ஒருவகை உடைமை என்று கூறப்படுகின்றது. ''[2]

என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது. இதனால் ரிக் வேத காலத்திலிருந்தே அடிமைநிலை இருக்கின்றதென்றும், அடிமைகளை ஒருவகைச் சொத்தாகக் கொண்டனர் என்றும் அறியமுடிகிறது.

அடிமைநிலை சங்க காலத்திலும் இருந்தது என்பதற்குத்,

''தன் கண் இந்தியாவில் அடிமைநிலை என்னும் நிலையம் அறியப்படாது.'' என்று

மெகஸ்தனிஸ் கூறுகின்றார். அவர் கிரேக்கர் ஆகையால் அந்நாட்டில் இருந்த மந்திரி அடிமைநிலை இல்லாததால் அடிமைநிலை இல்லை என்று கூறுகின்றார். வெ. கனகசபையார் அடிமைநிலை என்பது தமிழர் என்றுமே அறியாதது. இவ்வாதிகாலத்தவர்களுடைய உயர்தர கலாச்சாரத்தை நிறுவ வலுத்த சான்றுகள் உள்ளன என்றார் வி.ஏ. ஸ்மித். கனகசபை கூறியதையே தாமும் அடிமைநிலை தமிழா அறியாதது என்று கூறுகிறார்.

சிலப்பதிகாரம் உரிமைச் சுற்றம் என்போரைப் பற்றிக் கூறுகிறது. இவர்களை உரையாசிரியர் அடிமைத்திரள் என்று விளக்குவர்.

''அடிமைகள் அடியுறை என்றும் அவர்கள் நிலை அடிமைநிலை என்றும் கூறப்படும் கலித்தொகையில் அடிமைகளைப் பிற்காலத்தில் போர்குதிரைப்போல அடையாளம் காணும்பொருட்டு மார்பில் சூடிட்டு வைக்கும் விசித்தரமான ஒரு பழைய ஒப்பந்தத்தின்படி அவ்வந்தனருடைய அடிமை என்றுவாதிட்டதாக கூறப்படுகின்றது. பெரியபுராணக் காலத்திலேயும் அடிமைநிலைப்பற்றியும் அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய சட்டக்குறிப்புகளைப்பற்றியும் அவர்கள் அறிந்திருந்தனர் என்பதற்கு இது சான்று ''[3] என்று ந. சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

## கல்வெட்டின் சான்று

அடிமைநிலையைப் பற்றி இலக்கியங்கள் மட்டுமின்றிக் கல்வெட்டுகளும் சான்று பகர்கின்றன. தமிழகத்தில் அடிமைகள் பற்றிய செய்தி கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது.

''முதன்முதலில் அடிமைகள் பற்றிய குறிப்பைத்தரும் கல்வெட்டு கி.பி.948 ஆம் ஆண்டைச் சார்ந்தது. இது தன் அடிமைப்பெண்கள் மூவரைத் திருக்கற்றளியில் பரமேஸ்வரர் கோயிலுக்கு நந்திவர்ம மங்கலத்து மத்தியஸ்தன் கொடுத்ததாகக்

குறிப்பது. அடிமைகளில் அண்களும், பெண்களும் உண்டு. '' [4] என்று கல்வெட்டுச் செய்தி கூறுகின்றது.

சோழர் காலத்தின் சமுதாய அமைப்பினைக்கூறும் கே.கே. பிள்ளை,

''சோழர் காலத்தில் குடிமக்கள் பிறருக்கு அடிமைகளாயினர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. ஆனால் அவர்கள் அடிமைபூண்டது கோயிலுக்குத் தாமேயன்றித் தனிப்பட்டவர்களுக்கு அடிமைப்பட்டதாகவோ அடிமைகளாக வாழ்ந்ததாகவோ சான்றுகள் இல்லை '' [5] என்று தமிழக வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

இக்கூற்று வரலாற்று உண்மைகளுடன் பொருந்துவதாக இல்லை என்று அடிமை முறையும் தமிழகமும் என்ற நூலாசிரியர் கூறுகின்றார்.

''பெரிய புராணத்தில் இடம் பெறும் சுந்தரர் கதை வீட்டடிமை முறை வழக்கிலிருந்ததைக் குறிப்பிடுகின்றது '' [6] என்று கல்வெட்டுச் செய்தியில் சிவசுப்ரமணியன் கூறுகின்றார். மேலும் அக்கல்வெட்டில் அடிமைமுறைக்குச் சான்றாக பெண்களை விலைக்கு விற்கப்படும் செய்தி காணப்படுகிறது. இக்கருத்தை பின்வரும் செய்தியில் காணலாம்.

''நம்ப நம்பி காடுகள் நங்கை ஒருத்தி வேளாள குலத்தினள்தான் தன் மகள் பேரன் பேத்தியர் ஆகிய மேலைப்பெருபள்ளம் என்னும் ஊரில் ஒருவன் தலைச்செங்காட்டு வலம்புரிகூமையாள் கோயிலுக்கு என்மரை விற்றுவிட்டான். வயலுார்க் கோயிலுக்குத் திருப்பதிகம் பாடவும், தொண்டு செய்யவும் கவரிப்பிணர்களாக மூன்று பெண்கள் தானமாக அளிக்கப்பட்டனர். இரண்டாம் இராசராசன் காலத்தில் திருவாலங்காடுடைய நாயனார் கோயிலுக்கு முன்னுாறு காசுக்கு நான்கு பெண்கள் தேவடியார்களாக விற்கப்பட்டனர். '' [7] என்றெல்லாம் கல்வெட்டின் செய்தி தருவதாக கே.கே.பிள்ளை குறிப்பிடுகிறார்.

**தமிழகத்தின் நிலை**

வள்ளலார் பிறந்த காலத்தில் கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆட்சி வலுவடைந்திருந்தது. இங்கிருந்த குறுநில மன்னர்களின் ஆட்சிக்கும் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கும் மிகுந்தவேறுபாடு இல்லை. இவ்விரண்டு கருணை இல்லாதார் ஆட்சி, தமிழகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவில்லை. இதனை,

''சிதறுண்டு கிடந்த செந்தமிழ் நாடு ஆங்கிலேயர்

ஆதிக்கத்தின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரே குடையின் கீழ் வந்தது. '' [8] என்று சி.இராமசந்திரன் கூறுகின்றார்.

பரமசிவானந்தம் என்பவர் ''வெவ்வேறு வகை நாகரிகம் பண்பாடு கலாச்சாரம் முதலியன கொண்ட பல்வேறு மக்களினத்தை இந்திய இனம் என்று ஒன்று ஆக்கி, அதன் வழி ஓர் இனக் கொள்கையை நிறுவிவிட்டனர் ஆங்கிலேயர்'' [9]. என்று கூறுகின்றார்.

ஆங்கிலேயர்களின் தொடர்பும் ஆங்கிலக் கல்வியும் பிறநாட்டுக் கருத்துக்களின் வளர்ச்சியும் நம் நாட்டாருக்குப் பொய்மைச் சாதிகளைப் புரிந்து போராடத் தூண்டப்பட்டிருந்தன. ஆனால் இந்த புறத் தூண்டுதல்களின்றியே வள்ளலார்,

''தயவை விருந்தி செய்வதற்குத் தடையாக இருப்பன சமய ஏற்பாடு, ஜாதி ஏற்பாடு, முதலியனவைகள் ஆதலால் இவைகளை விட்டொழித்துப் பொது நோக்கம் வந்தாலொழிய காருண்ணியம் விருத்தி ஆகிக் கடவுள் அருளைப் பெற்று ஆனந்த சித்தி வல்லபங்களைப் பெற முடியாது '' [10] என்று உபதேசப் பகுதி கூறுகிறது.

நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் சமயப்பற்றும் இன்றி வாழ்ந்தனர். பல்வேறு சமயங்களின் உண்மைகளை உணராமல் சத்தை விட்டுச் சக்கையைப் பிடித்துக் கொள்வது போல் சமய நூல்களில் உள்ள இறைஞானத்தையும் ஆன்ம நேயத்தையும்

மறந்திருந்தன. சமயச்சின்னங்களை அணிந்து கொள்வதிலும் விக்ரகங்களை வணங்குவதிலுமே மோட்சம் இருக்கிறது என்று மூடநம்பிக்கையுடன் சமயத்தை தம் பொருள் ஈட்டுங்கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு போலியாக வாழ்ந்து கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் தோல் வருணம் மேல் வருணம் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி மேல் இனம் கீழ்இனம் என்ற நிறவெறி சாதிவெறி குலகோத்திரச் சண்டைகள் மலிந்திருந்தனர். அத்துடன் வெள்ளையர் கருப்பர் என்ற நிற வேறுபாடுகள் செல்வந்த நாடுகள் ஏழை நாடுகளுக்கு இடையில் சுரண்டல் ஆக்கிரமிப்பு இவற்றால் போர் அபாயங்கள் முதலிய நெருக்கடிகள் ஆகியவற்றால் நாடு அச்சுறுத்தப்பட்டநிலையில் இருந்தது.

## வறுமைத்துன்பம்

மக்களின் வறுமைத் துன்பத்திற்கு சில முக்கியமான காரணங்களைக் கூறலாம். முதலாவதாக கிழக்கிந்திய நிறுவனம் தனது வாணிகபத்தையும் வரி வருவாயையும் பெருக்கியதே தவிர மக்களின் நலனைப் பேணவில்லை. இரண்டாவதாக வேளாண்மை மழையின் அருளால் நடைபெறுவது. மழை தவறிய காலத்தில் விளைச்சல் இல்லை. மூன்றாவதாக இங்கிருந்த சில வசதியான மக்கள் கடன் கொடுத்துக் கடுமையான வட்டி வாங்குபவர்களாகவும், வெள்ளையர்கள் வழிச் செல்பவர்களாகவும் இருந்தனர். நான்காவதாக சிறுதொழில்களின் சிதைய மக்களின் வருவாயைப் பெரிதும் பாதித்தது. ஐந்தாவதாக போக்குவரத்துக்கள் வளர்ந்து கொண்டிருந்தாலும், அவை மூலப்பொருட்களைத் தொழிற்சாலைகளுக்குக் கொண்டு செல்லப் பயன்பட்டனவேயன்றி மக்களின் துன்பங்களைத் தீர்க்கத் துணை நிற்கவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டைப் பஞ்ச நூற்றாண்டு எனலாம் இதனை,

''பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் ஏழு கடுமையான பஞ்சங்கள் இருந்தன. இவற்றால் 11/2 மில்லியன் மக்கள் மாண்டரென்று மதிப்பிடுகின்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பகுதியில் 24பஞ்சங்கள் தோன்றின. (1851 முதல் 1875 வரை ஆறு 1876க்கும் 1900 க்கு இடையில் பதினெட்டு ) அரசின் பதிவேடுகளின்படி 20 மில்லியன் பேர் இந்தப் பஞ்சங்களினால் இறந்தவர்'' [11] என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

கஞ்சி குடிப்பதற்கில்லாமலும் அதன் காரணத்தை அறியாமலும் மாண்டு மடிந்த மக்களுக்கிடையில் வாழ்ந்தவர் வள்ளலார். பசியினால் இளைத்தே வீடுதோறும் இரந்தும் பசியறாதயர்ந்த வெந்தாமரைக் கண்டுளம் பதைத்தேன் என்று அவர் மனம் வாடிப் பாடிய சூழ்நிலை இக் காலத்தில் காணப்படுகின்றது. இரந்தும் உயிர் வாழ எண்ணியவர்க் பெருகியதும் ஈதல் அறம் குறைந்து வந்ததும், ஆன்மீகச் சாதனையில் ஈடுபட்ட உயிரிக்கம் கொண்ட வள்ளலாரை சத்திய தருமச் சாலையைத் தோற்றுவிக்கச் செய்திருக்கிறது.

இந்தியாவில் பல சமயங்கள் தோன்றியிருந்தன. இச் சமயசூழ்நிலைப் பற்றிஇங்கு அடுத்ததாக ஆராயப்படுகின்றது.

வள்ளலார் காலத்தில் சமயநிலை வளர்ச்சியடைந்து காணப்பட்டு இருந்து என்பதை பின்வரும் கருத்துக்கள் கூறுகின்றன.

**சாதி**

நமது நாட்டில் சாதிமுறையில் ஏற்பட்ட சீர்கேடுகள் இன்னும் தீர்ந்த பாடில்லை. வள்ளலார் காலத்தில் பல இந்துக்கள் கிறித்துவ சமயத்தை ஏற்றுக்கொள்ள சாதி அடிமைத்தனமே காரணமாக இருந்தது. இதனை, அ.மு. பரமசிவானந்தம்,

''தாழ்ந்த சாதியார் எனப்படும் வகையில் உள்ள பலர் தென் தமிழகத்தில் அதிகமாக உயர்ந்தோரால் கொடுமைசெய்யப் பெற்று காரணமே அப்பகுதியில் இந்து சமயத்துக்கு மாறுபட்ட முகமதிய கிறிஸ்துவ சமயங்கள் வரை வளர வாய்ப்பை உண்டாக்கித் தந்தது எனலாம் '' [12] என்று கூறுகின்றார்.

இதன் அடிப்படையில் நோக்கினால் வள்ளலாரின் சாதி ஒழிப்புக் கருத்து அக்காலத்தில் எவ்வளவு புரட்சிகரமானதாகக் கருதப்பெற்றிருக்க வேண்டுமென்பதை உணரமுடிகின்றது.

## வறுமைத்துன்பம்

மக்களின் வறுமைத்துன்பத்திற்கு சில முக்கியமான காரணங்களைக் கூறலாம். முதலாவதாக கிழக்கிந்திய நிறுவனம் தனத வாணிபத்தையும் வரி வருவாயையும் பெருக்கியதே தவிர மக்களின் நலனைப் பேணவில்லை. இரண்டாவதாக நமது வேளாண்மை. வள்ளலார் தமது இயக்கத்தை வடலூர் என்ற சிற்றூரைமையமாகக் கொண்டு, தமிழ்க் கவிதைக் கருவியாக ஏற்றுத் தெருவெங்கும் ஒலிக்க திருவருட்பாவை இயற்றினார்.

ம.பொ. சிவஞானம் அவர்கள் இராம்மோகன்ராய், தயானந்தர், இராமகிருஷ்ணன், ஆகியவர்களோடு வள்ளலாரை விரிவாக ஒப்பிட்டு அவர்கள் மூவருக்கும் அவர்கள் காலத்திலேயே கிடைத்த புகழ் வள்ளலாருக்குக் கிடைத்ததைச்சுட்டிகாட்டி சாதிவெறியின் வினாவை இதுவெனக்கூறி இறுதியில்,

''இதற்குக் காரணம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சூழ்நிலையில் வடக்கிற்கும் தெற்கிற்குமிடையே வேற்றுமை இருந்தது தான் '' [13] என்று குறிப்பிடுகின்றார்.

சமயநிலையை வித்துவான் மறை திருநாவுக்கரசு,

''வள்ளற்பிரான் காலத்தில் தமிழ் நிலத்தில் சமயச் சண்டையும், சாதிப்பிணக்கும்

கை கோத்துக் குலவின. உயிர்கள்பால் அருளுடைமை மறைந்துவிட்டது, சகோதர நேயம் சாய்ந்து விட்டது, உண்மைச் சமய நெறி மங்கிப் போலிச் சமயச் சடங்குகளும் மூடப்பழக்க வழக்கங்களும் தாண்டவமாடின, தமிழகத்தின் உயிர்ச் சமயமாம் சிவ நெறியின் மாண்பு சீர் குலைந்து கிடந்தது. அயல் நெறிகள் மக்களுக்கு மயல்புரிந்தன. இக்குறைபாடுகளைப் உண்மைச் சிவநெறியைப் பரப்ப முனைந்தவர் நம் இராமலிங்கமாவர் '' [14] என்று கூறுகின்றனர்.

புரட்சிகரமான சமயக்கருத்துக்கள் பழமையில் ஊறிப்போன இந்து சமயவாதிகளை அச்சுறுத்தியிருந்தது. அதன் விளைவுதான் புலவர் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் உருவில் தோன்றியது. இதிலிருந்து அக்காலத் தமிழகத்தின் சமயவாதிகளின் மனநிலையையும் சமயப் புத்தாக்கத்திற்கு இருந்த எதிர்ப்பையும் புரிந்து கொள்ளப்படுகின்றது. இத்தகைய சோதனைச் சமயத்தில் வள்ளலாரின் சாதனைகள் மகத்தானவை என்பதை உணர முடிகின்றது.

## பொருளாதாரம்

மக்கள் வாழ்க்கைக்கு பொருள் தேவைப்படுகிறது. பொருளே ஆதாரமாக அமைகிறது. இவ்வுலக வாழ்க்கைக்குக்குப் பொருள் உதவுகிறது. இதனால்தான் வள்ளுவரும்

''... பொருள் இல்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகியாங்கு '' [15] என்றார்.

''பலபட்ட தேவைகளை அளவிட்டசாதனங்களைக் கொண்டு நிறைவேற்ற முயலும் மனித நடவடிக்கைகளைப் பற்றி விளக்குவது பொருளாதாரத்தின் இலக்கணம் '' [16] என்று சி. வேலாயுதமும், ''தனது வாழ்க்கைத தேவைகளைப் பெறுவதற்காக மனிதன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பற்றியது பொருளாதாரம் '' என்று ஏ. குழந்தையும் பொருளாதாரம் என்பதன் அடிப்படை பற்றிக் கூறுகின்றார்.'' [17]

பொருளாதாரம் என்பதற்கு அகராதிகள் கீழ்க்கண்டவாறு விளக்கம் கொடுக்கின்றன. பொருளாதாரம் என்பது,

''பொருள் உற்பத்தி செய்யும்நிலை, அதனைச் செலவிடும் வழிகள், பயன்படுத்தும் முறை ஆகியவற்றைக் கூறும் ஒரு சமூக அறியலாகிறது. ''[18] என்று வெப்ஸ்டேர்ஸ்னைந்த நியூ காலிஜேட் டிக்சனரி கூறுகிறது.

''பொருளாதாரத்தைப் பற்றி விஞ்ஞான முறையில் எண்ணத் தொடங்கியது பதினெட்டாம் நூற்றாண்டின் இடையிலேதான். அதற்கு முன்னர் பொருளாதாரத்தைப் பற்றி எண்ணிய சில எண்ணங்களும் சமய அறிவியல் அல்லது அரசியல் சார்பிலேயே எண்ணப்பட்டன. அன்றும் மக்கள் எளிய வாழ்க்கையை விரும்பினர். பொருளாசையை வெறுத்தனர். அறிவியல், அரசியல் துறைகளில் மூழ்கிக் கிடந்தனர். இக்காரணங்களால் பொருளாதார அறிவு முறையாக வளர முடியவில்லை ''[19]. என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது.

மக்களுக்கு இன்றியமையாத நாட்டின் வருவாயைப் பெருக்கும் தொழிலாக உழவுத்தொழில் அமைகிறது. உணவுப்பொருட்கள் உழைப்பு, மூலதனம், அயல்நாட்டுச் செலாவணி, அங்காடி, வளர்ச்சி, வேலைவாய்ப்பு ஆகிய வழிகளில் வேளாண்மைப் பொருளாதார வளர்ச்சிக்குத் துணைபுரிகின்றது. உழவின் பெருமையைத் திருவள்ளுவர்,

''கழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை ''[29] என்றார்.

உழவர்கள் நாட்டின் அச்சாணியாக அமைகின்றனர். உழுதுண்டு வாழக்கூடிய உழவர்கள் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாக விளங்குகிறது. இக்கருத்தினை வள்ளுவர்,

''உழுவார் உலகத்தார்க்கு ஆணி'' [21] என்றும்,

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் '' [22]

என்றும் குறிப்பிடுகின்றார். இத்தகைய வேளாண்மை வள்ளலார் காலத்தில் வளர்ச்சி கன்றிய நிலையில் இருந்தது.

அடிகளார் உலக வாழ்க்கையை தொடங்கிய காலத்தில் இந்தியாவில் நிர்வாகம் செய்து கொண்டிருந்த கிழக்கிந்திய நிறுவனத்தினர் பின்பற்றிய கொள்கைகளும் நடைமுறைகளும் வறுமைத்தீயை வளர்த்தன. வேளாண்மை நாடான இந்தியாவில் தோட்டில் சிறந்த, சென்னை போன்ற நகரங்கள் ஆங்கிலேயரின் ஆட்சியில் செழித்து வளர்ந்திருந்தன. கிராமங்கள் சீர்குலைத்திருந்தது.

கிழக்கிந்திய நிறுவனம் வாணிபத்தின் மூலம் மட்டும் ஆதாயம் பெறுவதில் மனநிறைவு கொள்ளவில்லை. போர்ச் செலவுகளையும் உள்நாட்டு நிர்வாகச் செலவுகளையும் காரணமாக காட்டி வரிகளை விதித்தது. விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இதனை,

''சென்னையில் நிலத்தின் மொத்த
விளைச்சலில் பாதியை கிழக்கிந்திய
நிறுவனம் நிலவரியாகப் பெற்றது '' [23]

என்று பொருளாதார வரலாற்று அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

நிலத்தீர்வையை விவசாயிகள் செலுத்தாவிட்டால் அவர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். ரோமேஷ்டட் என்பவர்,

''நிலையற்றதாக அமைந்த நிலவரி வேளாண்மையை முடமாக்கியது. சேமிப்பு உருவாகாமல் தடுத்து, விவசாயியை கடனிலும் வறுமையிலும் மூழ்கிச் கிடக்கச் செய்தது '' [24] என்று குறிப்பிடுகின்றார்.

மக்களின் உலகியல் கவலை தீராத வரை ஆன்மீக மேம்பாடு இயலாதென்பதை வள்ளலாரைப் போன்று சுவாமி விவேகாந்தரும் உணர்ந்து வலியுறுத்தினார். அவர்,

''வயிற்றுக்கடவுள் பூஜையே இப்போது முதன்மையான தேவையாகும். வயிற்றுக் கடவுளை முதலில் திருப்தி செய்தாலன்றி உங்கள் சமய உபதேசங்களுக்குயாரும் செவிகொடார் முதலிய இந்தக் கொடிய பட்டினியை நீக்குங்கள்'' [25]

## கல்வி - மாற்றம்

வள்ளலார் தோன்றிய காலத்தில் கல்வி என்பது இன்றுபோல் எல்லோருக்கும் கிடைக்க கூடியதாக இல்லை. சமுதாயத்தில் மேலினத்தவர்களுக்கே அறிவு சொந்தமாக இருந்தது. அவர்களுக்கு அதற்கான வாய்ப்புகள் கிடைத்தன. மற்றவர்களில் செல்வர்களும் வாணிபம் தொழிலில் ஈடுபட்டவர்களும் தங்களுக்குத்தேவையான கணக்கு வழக்குகளை வைத்துக் கொள்ளும் அளவிற்கு எண்ணையும் எழுத்தையும் கற்றிருந்தனர். தங்களது பிள்ளைகளுக்கும் அத்தகைய கல்வியை வழங்கினர்.

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் கல்வியில் சில குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. கிறிஸ்துவப் பாதிரியார்களின் முயற்சியால் ஆங்காங்கு பள்ளிகளும் கல்லூரிகளும் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் வடக்கில் சென்னையிலும் தெற்கு தூத்துக்குடி, பாளையங்கோட்டை நகர்களிலும் இத்தகைய கல்வி நிறுவனங்கள் அமைந்திருந்தன.

## இலக்கியம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் நிலையில் இலக்கியக் களத்தைப் பயன்படுத்துக்கின்ற பணி தொடங்கப்பட்டு இருந்தது. வடமொழிமோகம் வளர்ந்திருந்த நிலையின் படி தளர ஆங்கிலேயே மோகம் மக்களிடையே அதிகமாக காணப்பட்டன.

தமிழகத்திலிருந்த வீரமாமுனிவர் போன்ற ஆங்கிலப்பாதிரியார்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டனர். அவர்கள் நல்ல பல நூற்களையும் பதிப்பித்து வெளியிட்டனர். புதிய உரைநடைநூற்களையும் இலக்கண நூற்களையும் உருவாக்கினர்.

சென்ற நூற்றாண்டில் தமிழ் இலக்கியப் பணிகளைப் பற்றி சிவ இராமச்சந்திரன்,

'அச்சப் பொறி தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டவுடன் பெரியோர் பலர் ஓட்டுச் சுவடிகளிலிருந்த தமிழ் நாட்டுப் பண்டைப் பெருநூல்களை அவை இறந்து விடாதபடி புதிய நூல்களாக இயற்றிக் காத்தனர். வித்துவான் தாண்டவராய முதலியார் விசாகப்பெருமாளையர், மழலை மகாலிங்கையர், களத்தூர் வேதகிரி முதலியார் முதலானவர்கள். இத்துறையில் துவக்கத்தில் ஊக்கங்காட்டிய பெரியோர்களாவர்' [26]. என்று குறிப்பிடுகின்றார். அக்காலத்தில் தமிழ்ப்பற்றையும் தமிழ் இலக்கிய ஈடுபாட்டையும் வளர்க்க வேண்டிய நிலையில் தமிழகம் இருந்தது. வள்ளலார் அக்காலத்தேவையை நிறைவு செய்பவராக மட்டும் இல்லாமல் தமிழ் இலக்கித்தில புதிய யுகத்தை தோற்றுவிப்பராகவும் இருந்தார்.

## முடிவுரை

இராமலிங்க அடிகளார் வாழ்ந்த காலத்தில் காணப்படும் அடிமைத்தனம், தமிழகத்தின் நிலை, வறுமைத்துன்பம், சாதி, பொருளாதாரம், கல்வி - மாற்றம், இலக்கியம் போன்றவைகளை பற்றி இவ்வியலில் நன்கு அறியமுடிகின்றது. மேலும் மேற்கூறியவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் இக்கட்டுரையின் வாயிலாக புலனாகின்றது.

# அடிக்குறிப்புகள்

1. இராமலிங்க சுவாமிகள், திருவுள்ளம், முன்னுரை, ப.111.
2. அகராதி கலைக்களஞ்சியம், தொகுதி - 4, ப.46.
3. நா. சுப்பிரமணியன், சங்ககால வாழ்வியல், ப. 346-347
4. நா. மார்க்சீய காந்தி, தமிழகத்தில் அடிமைகள், ப.55.
   தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு, ப. 217 - 218
5. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், ப.339.
6. அ. சிவசுப்பிரமணியன், அடிமை முறையும் தமிழகமும் ப. 13-15.
7. சி. இராமச்சந்திரன், தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், ப.340.
8. சி. இராமச்சந்திரன், தமிழக வரலாறு, ஆங்கிலேயர் காலம், ப. 309.
9. அ.மு. பரமசிவானந்தம், தமிழக வரலாறு, ப.330.
10. உபதேசப்பகுதி, ப.63.
11. அ.மு. பரமசிவானந்தம், தமிழக வரலாறு, ப. 342.
12. British Paramountancy and Indian Renaisance
    By R.C. Majumadrand K.K. Datta, P. 836 - 837.
13. ம.பொ. சிவஞானம், வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, ப.42.
14. வித்துவான் மறை திருநாவுக்கரசு, மறைமலையடிகள், வரலாறு, ப.50.
15. மு. வரதராசனார், திருக்குறள், பா. 247
16. ச. வேலாயுதம், பொருளாதாரம் , ப. 117.
17. எ. குழந்தை, பன்னாட்டுப் பொருளாதாரம், ப.1.
18. Websters ninth new cellegiate Dictionary, P. 395.
19. கலைக்களஞ்சியம், தொகுதி-7, ப. 667.
20. மு. வரதராசனார் திருக்குறள், ப. 31.
21. மேலுது., ப. 1032
22. மேலது., ப. 1033
23. The Economic History of Indian, vol. I, By Ramesh Dutt. P-xxvii
24. The Economic History of Indian, Vol. I By Ramesh Dutt. P-xxvii
25. சுவாமி விவேகானந்தர், நமது தாய்நாடு, ப. 48.
26. தமிழக வரலாறு (ஆங்கிலேயர் காலம்), ப. 322.

# முடிவுரை

# முடிவுரை

இராமலிங்க அடிகளார் பாடல்களில் சமயமும் சமுதாயமும் என்ற ஆய்வுத்தலைப்பில் பெறப்பட்ட முடிவுகள் இங்கு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

1. இராமலிங்க அடிகளார் காலத்தில் சமுதாயத்தில் இருந்த அறியாமையை அகற்ற அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளால் மக்களைச் சமயப் பாதைக்கு அழைத்துச் செல்ல முடிந்தது என்பது புலனாகின்றது.

2. சமயப் பாதையோடு நின்றுவிடாமல் மக்களை நன்னெறிப்படுத்த ஆன்மீகச் சிந்தனைகளைப் புகட்டினார் என்பதைக் காணமுடிகின்றது.

3. மக்கள் கூட்டமாக வாழும் சமுதாயத்தில் பசிப்பிணி நீக்கிச் சாதி சமயப் பிணக்குகளை அகற்றி மக்களை நல்வழிப்படுத்தினார் என்பதை அறியமுடிகின்றது.

4. நம்பிக்கையின் அடிப்படையில் தான் வாழ்க்கை அமைகின்றது. நம்பிக்கை அன்பினால் தோன்றுவது. மானிடர்களைப் பிணைப்பது அன்பு என்ற கயிறினால் ஆகும். அன்பினால் மானிடநேயத்தைக் கட்டலாம் என்ற கருத்து தெளிவுறுத்தப்படுகின்றது.

5. வள்ளலார் கால மக்கள் வாழ்க்கையில் இருந்த வறுமைத்துன்பமும், பொருளாதார நிலை, கல்வி ஆகியவற்றை எவ்வாறு சீரமைத்து மாற்றினார் என்று கருத்துப் புலனாகின்றது.

## பரிந்துரைகள்

இவ்வாய்வு இராமலிங்க அடிகளார் பாடலகளின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. தொடர்ந்து இப்பாடல்களில் கீழ்க்கண்ட தலைப்புக்களில் ஆய்வு செய்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

1. திருவருட்பா - ஓர் ஆய்வு
2. திருவருட்பாவில் சீவகாருண்யம்
3. இராமலிங்க அடிகளார் பாடல்களில் பக்திநெறி.

# துணை நூற்பட்டியல்

# துணை நூற்பட்டியல்


| | | | |
|---|---|---|---|
| 1. | அருணாசலம்.ப | 1973 | பக்தி இலக்கியம்<br>தமிழ் புத்தக கழகம்<br>சென்னை. |
| 2. | அகாம்பிகை அம்மையார் பண்டிதை | 1970 | இராமலிங்க சுவாமிகள் சரிதம்<br>சமரச சன்மார்க்க ஆராய்ச்சி<br>நிலையம், சமயபுரம். |
| 3. | அருணாசலம்.ப. | 1985 | சிலப்பதிகார சிந்தனை<br>பாரி புத்தகப்பண்ணை<br>சென்னை. |
| 4. | இராமலிங்க சுவாமிகள் | 2001 | திருவருட்பா<br>ருக்மணி ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>கோவை. |
| 5. | இளங்கோவடிகள் | 1965 | சிலப்பதிகாரம்<br>சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்<br>சென்னை . |
| 6. | இளங்கண்ணனார். வி. | 1985 | வள்ளலாரும் உயிரினங்களும்<br>உலகத்தமிழ்கல்வி இயக்கம்<br>திருமலைநகர், சென்னை. |
| 7. | ஊரன் அடிகள் | 1962 | திருவருட்பிரகாச வள்ளலார்<br>தெய்வநிலையங்களின் வரலாறு<br>வடலூர். |
| 8. | ஊரன் அடிகள் | 1962 | வடலூரி வரலாறு<br>வடலூர் . |
| 9. | கந்தசாமிப்பிள்ளை ச.மு. | 1970 | இராமலிங்க சுவாமிகள் சரித்திரக்<br>குறிப்புகள்<br>சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்<br>சென்னை. |
| 10. | கலியாணசுந்தரனார். திரு.வி. | 1962 | இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்<br>சாது அச்சகக் கூடம்<br>சென்னை. |

11. காந்தி கண்ணதாசன் — அர்த்தமுள்ள இந்துமதம், மூன்றாம் பாகம், தியாகராய நகர், சென்னை - 17.

12. குருசாமி, ம.பா. 1977 வள்ளலார் ஓர் அறிமுகம், மதுரை பல்கலைக்கழக கூட்டுறவு அச்சகம், மதுரை.

13. குங்கிலியம், பழ. சண்முகனார், 1983 அருட்பிரகாச வள்ளலார், கற்பகம் அச்சகம், சென்னை.

14. சரவணானந்த சுவாமிகள் — அருள் அறிவியல் (அ) மெற்றானவிளக்கம், அருட்பெருஞ்சோதி சாலை வெளியீடு,

15. சிதம்பரனார் சாமி — வடலூரார் வாய்மொழி, வடலூரர்.

16. சிவஞானம், ம.பொ. — வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு, இன்பநிலையம், சென்னை.

17. சிவகாமசுந்தரி, அ. 1970 வள்ளலாரின் திருமுருக இலக்கியம், 22-ம் கருத்தரங்கக் கோவை, அண்ணாமலை நகர்.

18. சுப்பிரமணியன், ச.வே. 1998 தொல்காப்பிய தெளிவுரை, மணிவாசகர் வெளியீடு, சென்னை.

19. சுப்பிரமணியன், ந. 1986 சங்ககால வாழ்வியல், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.

20. சுவாமி விவேகானந்தர், 1977 நமது தாய்நாடு, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பாராய்த்துறை,

21. சேக்கிழார் 1998 பெரியபுராணம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

22. தமிழ்வேள். சட.மெய்யப்பன் — வள்ளலார் வரலாறு, மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை.

23. தமிழ்த்துறை ஆசிரியர், திருக்குறட் சிந்தனை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

24. திருமூலர், 2002 திருமந்திரம், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

25. நக்கீரர் 1989 திருமுருகாற்றுப்படை, சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை.

26. நடராசன், அ.வெ. 1974 வள்ளலார் வாழ்வும் வாக்கும், இராமலிங்கர் பணிமன்றம், சென்னை.

27. நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் 2001 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.

28. நற்றிணை 1981 நியூசென்சுரி புக் ஹவுஸ், கவர்மெண்ட் ஆப் தமிழ்நாடு,

29. பரமசிவானந்தம், அ.மு. 1972 தமிழக வரலாறு, தமிழ்க் கலைப்பதிப்பகம், சென்னை.

30. பாரதியார் 1957 சக்தி வெளியீடு,

31. பிள்ளை, கே.கே. 1972 தமிழக வரலாறு மக்களும், பண்பாடும், தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை.

32. மார்சீய காந்தி, நா. 1984 தமிழகத்தில் அடிமைகள், தமிழ்நாட்டு வரலாற்றுக் கருத்தரங்கு, சென்னை.

33. மீனாட்சி சுந்தரம், 1988 தமிழ்நாட்டு வரலாறு, சங்க கால வாழ்வியல் சமுதாயம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

| | | | |
|---|---|---|---|
| 34. | வரதராசனார். மு. | 1949 | திருக்குறள் தெளிவுரை<br>கழக வெளியீடு<br>சென்னை. |
| 35. | வரதராசனார். மு. | 2000 | தமிழ் இலக்கிய வரலாறு<br>புதுதில்லி சாகித்திய<br>அகாடெமி. |
| 36. | வேதாந்த மகரிஷி | 2002 | வாழ்வியல் விழுமங்கள்<br>வேதாந்திரி பதிப்பகம்<br>ஈரோடு. |
| | **தமிழ் அகராதிகள்** | | |
| 37. | கழகத் தமிழ் அகராதி | 1984 | கழகப் பதிப்பு<br>சென்னை. |
| 38. | கலைக்களஞ்சியம் தொகுதி - 4 | 1956 | தமிழ்வளர்ச்சிக் கழகம். |
| | **பொருளாதார ஆய்வு நூல்** | | |
| 39. | குழந்தை ஏ.<br>பன்னாட்டுப் பொருளாதாரம் | 1967 | தமிழ் வெளியீட்டுக் கழகம்.<br>தமிழ்நாடு அரசாங்கம்<br>சென்னை. |

## ஆங்கில அகராதிகள்

| | | | |
|---|---|---|---|
| 40. | Chambers Dictionary | 1984 | Allied Publishers,<br>Bangalore. |
| 41. | The Great Lifco Dictionary | 1983 | The Little Flower Company<br>Madras. |
| 42. | The Oxford MiniDictionary | 1988 | Oxford University Press<br>New Delhi. |
| 43. | Websters ninth new<br>cellegiate Dictionary | 1997 | Frederick C. mish<br>Spring Field, U.S.A. |

ஆங்கில நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 44. | Annamalai. S.P. | 1973 | The Life and Teaching of Saint Ramalingar<br>Bharathiya Vidha Bhavan<br>Bombay. |
| 45. | Chetty. T.V.G. | | Chidambaram Ramalinga Swami,<br>His life mission and studies. |
| 46. | Majunder R.C and K.K. Datta | | British Parmanty and Indian Reriaissance,<br>New Delhi. |
| 47. | Ramesh Dutt | | The Economic History of India,<br>New Delhi. |